



# அறிவுச்சுரங்கம்

## தேசிய வாசிப்புமாத சிறப்பிதழ்

## National Reading Month Journal 2018




'இனங்களுக்கிடையில் புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு'

பொது நூலகம் - மாநகரசபை, மட்டக்களப்பு

Public Library - Municipal Council, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொது நூலகம்

# மாநகர சபை மட்டக்களப்பு



# "அறிவுச் சுரங்கம்"

# 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மட்டக்களப்பு**
**ஆண்டு 2018**

**சஞ்சிகையின்பெயர் - "அறிவுச் சுரங்கம்"**
**சஞ்சிகையாசிரியர் -** திருமதி.க.ருத்திரகுமார்

**சஞ்சிகை குழு**
திருமதி. சி.இரத்தினகுமார்
திருமதி. ர.மந்தாஹினி
செல்வி. சு.மோனிக்கா

**கணனி வடிவமைப்பு**
திரு. ம.லக்ஸ்மன்

**வெளியீடு - பொதுநூலகம்**
**மாநகரசபை மட்டக்களப்பு.**
**Tel - 065-222484**
**Email - battiplb@gmail.com**

பக்கம் 80



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாநகர கீதம்

மட்டக்களப்பு மாநகர் ஆட்சி மன்றம்

என்றும் வாழிய வாழியவே
எட்டுத்திக்கும் நன்நாடு எழுச்சிபெற
ஏள்கையில் அது எங்கும் எதிரொலிக்க
மக்கள் சேவையே மகேசன் சேவையென
மதித்திடும் மாமன்றம் வாழியவே

நிலத்திலின் கடல் தன்னை
சூழ்ந்திருக்கும்
நிலவினில் வாவி மீனிசைக்கும்
தென்னை வாழை மா பலா முந்திரிகைகளும்
தேனும் பாலும் வழிந்தோடும்
மண்ணுக்குள்ளே பொன்னை விளைய வைக்கும்
சென்னில் வயல்களில் சேர்ந்திருக்கும்
கண்ணுக்கும் கருத்திற்கும் விருந்தளிக்கும்
பல வண்ணங்கள் இந்நியற்கை எழில் கொஞ்சும்

பைந்தமிழ் கவிதையில் வளர்கிறது
பழங்கலை கிராமத்தில் வாழ்கிறது
கூத்துக், குரவை, கும்மி, வசந்தன், மாமுனி, கவி, கோலாட்டம்,
அம்மானை தாலாட்டுவன்
யாழுக்கு நூல் தந்த விபுலானந்தன்
பிறந்ததின் நாடு என்று
பெருமை கொள்வோம்
வீர செயல் வீரன் சாண்டோ சங்கரதாஸ்
சாதனைகள் சொல்லி உயர்வடைவோம்

கல்லடி, கோட்டமுனைப் பாலங்களும்
கலங்கரை விளக்கமும் கடற்கரையும்
மாமாங்கம், மசூதி, தேவாலயம், விகாரையும்
மண்ணின் மகிமையை எடுத்தியங்கும்
மூவின மக்களும் வாழுகிறார்
நால்வகை மதங்களை தழுவுகிறார்
ஓர் குலமாகவே மாறுகிறார்
தம்முள் ஒற்றுமையை மீதம் பேணுகிறார்

பொதுப்பணி சமூக பணி பலவும்
பொறுப்புடன் நிறைவாக ஆற்றிடுவோம்
சுத்தம் சுகாதாரம் பேணிடுவோம்
சூழல் மாசடையாது காத்திடுவோம்
சாதி, மத, இன, மொழி பேதமின்றி
சமுத்துவ உறவென உழைத்திடுவோம்
சாந்தி சமாதானம் நிலவிடவே நம்
சகலமும் அர்ப்பணம் ஆக்கிடுவோம்

வந்தாரை வாழவைக்கும் கருணையில்லம்
வாழ்வுக்கு வழிகாட்டும் திருநகரம்
வீதிகள் தோறும் தமிழ் மணக்கும் என்றும்
பண்பு சிறக்கும் கண்ணகி அம்மன்
வழிபாடு இங்கு காலம் காலமாய்
நடக்கிறது எண்ணத்தில் இருத்திய
தாயகத்தை எம் கண்ணென போற்றி
காத்திடுவோம் இரு கரங்கள் கூப்பி
வணங்கிடுவோம்
மட்டக்களப்பு மாநகர் ஆட்சிமன்றம்
என்றும் வாழிய வாழியவே
என்றும் வாழிய வாழியவே
என்றும் வாழிய வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# DIOCESE OF BATTICALOA

**RT. REV. DR. JOSEPH PONNIAH**
**BISHOP OF BATTICALOA**

BISHOP'S HOUSE
P.O.BOX 43.
BATTICALOA - 30000
SRI LANKA
TEL: 0652222735/0718428052
FAX: 0652224667
E-mail: battibishop@gmail.com,
ponralan@yahoo.com


13.10.2018

## ஆசியுரை

ஆண்டு தோறும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பொது நூலகத்தால் வெளியிடப்படும் "அறிவு சுரங்கம்" என்னும் இந்த ஆண்டு சஞ்சிகைக்காக ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

நூலகம் என்பது சகல சமுகங்களுக்கும், கலாச்சாரங்களுக்கும், இனங்களுக்கும், மொழியினருக்கும் நாடுகளுக்கும், நகரங்களுக்கும், அத்தியாவசியமானதாகும். நூலகமானது ஒரு சமுகத்தின் பொக்கிஷமாகக் கருதப்படுகின்றது. நூலகத்தின் அழிவு ஒரு சமுகத்தின் அழிவாகக் கருதப்பட்டது. நூலகத்தின் வளர்ச்சி கல்வி வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது.

உலகின் வளர்ந்த நாடுகள் எந்தக்காரணத்தால் வளர்ந்த நாடானது என்ற ஒரு ஆராய்ச்சி அண்மையில் நடத்தப்பட்டது. அதன் முடிவு, பொருளாதாரத்தில் வளர்ந்ததால் வளர்ந்த நாடாகவில்லை மாறாக கல்வியில் வளர்ந்ததால்தான் பொருளாதாரத்திலும் வளர்ச்சியடைந்தன.

கல்வி வளர்ச்சிக்கு அவசியமானது நூலகமாகும். ஒரு சமுகத்தின் அறிவுக் களஞ்சியத்தை சேர்த்து வைப்பது நூலகமாகும். அரசியல் ஞானம், சமுக ஞானம், பொருளாதார ஞானம் என பல வகைப்பட்ட தலைப்புக்களின் கீழ் எழுதப்பட்ட நூல்கள் வரையறை செய்யப்பட்டு பேணப்படும் இடம் நூலகமாகும்.

சுய சரிதைகள், அரசியல் பொருதார நூல்கள், பல்வேறு சமய சம்பந்தமான நூல்கள், இலக்கியங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள். கண்டு பிடிப்புக்களும் கண்டு பிடித்தவர்களும், மருத்துவம், விஞ்ஞானம், பொருளாதாரம், சமுக தொடர்புகள், இணையத்தளங்கள், வான்வெளி ஆராய்ச்சி இவை போன்ற நவீன விடயங்களையும் உட்கொண்டதாக நூல்கள் தினமும் பல மொழிகளிலும் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பல ஆண்டுகளுக்கு முன் மட்டக்களப்பு நகரின் மத்தியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட பொது நூலகமும் பல புத்தி ஜீவிகளின் பரிந்துரையில், தாராள மனம் படைத்தவர்களின் ஊக்குவிப்பில், ஒத்துழைப்பில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கலாம் என நினைக்கிறேன்.

ஆரம்பத்தில் சிறிய அளவில் தோற்றுவிக்கப்பட்டது இன்று மாநகர சபையின் நேரடி கண்காணிப்பில் படிப்படியாக வளர்ச்சி அடைந்து பெரியதொரு நூலகமாக விரிவடைந்துள்ளது. அதன் பிரதான நோக்கமாக வாசிப்போரின் தொகையை விரிவடையச் செய்து அதன் வழி பொது மக்களின் அறிவை அபிவிருத்தி செய்வது என்பது வெறும் கனவாக நின்று விடாமல் நனவாக மாறிட இந்த வாசிப்போர் மாதம் முழுமையான வெற்றியடைய ஆசி கூறி நிற்கின்றேன்.

+ P. Joseph

✠பேரருட்திரு ஜோசப் பொன்னையா,
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

Rt. Rev. Dr. Joseph Ponniah
Bishop of Batticaloa

"IN THE FRAGRANCE OF THE GENTLENESS OF CHRIST"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

RAMAKRISHNA MISSION ASHRAMA & CHILDREN HOMES
BATTICALOA, SRI LANKA.
T.P.; 0094 65 2222 752, rkmbat@gmail.com

# வாழ்த்துரை

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பொது நூலகத்தால் வெளியிடப்படவுள்ள "அறிவு சுரங்கம்" எனும் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி.

இவ்வாண்டு சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற் பொழிவுகளின் 125வது ஆண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள். இன்றைய இளைஞர்களும், பக்தர்களும், மாணவர்களும், பொது மக்களும் சுவாமிஜீயைப் பற்றி அவரின் சிந்தனைகளைப்பற்றி சிந்தித்து அவரின் உரைகளை வாசித்து அவருடனான தொடர்பை மேலும் வலுப்படுத்துவதற்கு இந்த வாசிப்பு மாதம் ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. எனவே சுவாமிஜியை படியுங்கள், பலரையும் படிக்கத்தூண்டுங்கள் எனக் கூறி தெய்வத் திருமூவரின் நல்லாசிகளை வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி.

என்றும் இறைப்பணியில்

17.10.2018.

(சுவாமி தக்ஷஜானந்தா)
பொது மேலாளர்

Please mention your e-mail address for further correspondence

This is a branch of the Ramakrishna Mission ; Colombo - 6
All the official correspondence should be addressed to the General Manager (Swami in-charge)
Bank: Bank of Ceylon, Address: Govington Road, Batticaloa. Account Name : Ashrama,
Account No.: 2698511, Branch ID : 012, Bank Swift Code : BCEYLKLX



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாவட்ட செயலகம்
**DISTRICT SECRETARIAT**
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය

மட்டக்களப்பு
**Batticaloa**
මඩකලපුව

அலுவலகம் / Office / කාර්යාලය – 065-2222233
அரசாங்க அதிபர் / Govt. Agent / දිසාපති – 065-2222235, 065-2224435
பக்ஸ் / Fax / ෆැක්ස් – 065-2224466
மின்னஞ்சல் / e – mail / විද්‍යුත් තැපැල් – moha.dist.batticaloa@gmail.com


எனது இல / My No / මගේ අංකය – GA/GEN/PA/2018
உமது இல / Your No / ඔබේ අංකය –
திகதி / Date / දිනය – 17.10.2018

## வாழ்த்துச்செய்தி

மட்டக்களப்பு பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கும் "அறிவுச்சுரங்கம்" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

இயந்திரமயமாகிய இன்றைய கால சூழலில் பச்சிளம் குழந்தை முதற்கொண்டு அனைவருமே இணையத்தில் மூழ்கிக் கிடக்கின்றமை கண்கூடு. புத்தாக்கங்களுக்கும், கண்டுபிடிப்புக்களுக்கும், படைப்பாற்றலுக்கும் மூலாதாரமாக இணையம் அமைந்திருந்தாலும், தொலைத்தொடர்பு சாதனங்களின் அதீத வளர்ச்சியால், வாசிப்பு பழக்கம் அருகிக்கொண்டே வருகின்றது. இந்நிலையில் நூலகம் சென்று வாசித்து அறிவைப்பெறுபவர்களும் குறைந்த எண்ணிக்கையினரே ஆவர். "புத்தகத்தை நண்பனாக்கு" என்பது அனைவரும் கேள்விப்பட்ட ஒன்று. இதற்கு ஒப்பாக, ஒருவரின் மனக்கிடக்கை வாசித்தலின் போது அமைதியடைகின்றது. பொறுமையும், நிதானமும், விவேகமும் வளர்ச்சியடைகின்றது. மன உளைச்சல், மன அழுத்தம் என்பவற்றிலிருந்து உளம் விடுபடுகின்றது. இதனால் மன உளைச்சலால் ஏற்படுகின்ற குற்றச்செயல்கள் குறைவடைவதற்கும் வாசிப்புத்திறன் உறுதுணையாக அமைகின்றது.

சாதாரணமாக நாம் ஒரு விடயத்தை கண்களால் கண்ணுற்று, செவிகளால் கேட்பதைக் காட்டிலும், அதே விடயத்தை வாசித்து தெளிவுபெறும் போது அது ஆழமாக "கல் மேல் எழுத்துப்போல்" மனதில் நிலைத்து நிற்கின்றது. இது சிறப்பான மீட்டலுக்கும், செயற்திறனுக்கும் வழிசமைக்கின்றது. இந்தவகையில் வாசிப்பு என்பது மனிதனுக்கு இன்றியமையாத ஒன்றாகின்றது. ஒவ்வொரு எழுத்துக்களாக இணைத்து வாசிக்கும் பொழுது எமது எண்ணம், செயல், மனப்பாங்கு யாவுமே முழுமையடைவதை நாமே உணர்ந்து கொள்ள முடியும்.

நேரமும், காலமும் நமக்காக காத்திருப்பதில்லை. இவற்றை நாமே நமக்காக ஒதுக்கிக் கொண்டு, எமது சிறார்களை நல்வழிப்படுத்தி வாசிப்புத்திறனை ஊக்குவிக்கவேண்டும். கிராமங்கள் தோறும் நூலகங்களை அமைப்பதும், பாடசாலையில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவித்து, சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதே எமது தலையாய கடமையாகும். இது போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்த விழாக்குழுவினருக்கும், இம்மலர் வெளியீட்டு குழுவினருக்கும் மற்றும் முன்னின்று உழைத்த அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெரு உவகையடைகின்றேன்.

மா.உதயகுமார்
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்
மட்டக்களப்பு

**M. UTHAYAKUMAR**
District Secretary / Government Agent,
Batticaloa District.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு பொது நூலகத்தினரால் "வாசிப்பு மாதம் - 2018" சார்பாக வெளிடப்படும் அறிவுச்சுரங்கம் சஞ்சிகைக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகை அடைகின்ற அதேவேளை சஞ்சிகை வெளியீட்டு குழுவினருக்கு எனது பாராட்டுகளையும் தெரிவிப்பதில் புலகாகிதம் அடைகின்றேன். தேசிய வாசிப்பு மாதம் - 2018 நிகழ்வினையொட்டி பலதரப்பட்ட நிகழ்வுகள் மட்டக்களப்பு பொது நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. மட்டக்களப்பு நூலக சிரமதானம், நடமாடும் சேவை, பாடசாலை மாணவ மாணவிகளுக்காக கருத்தரங்குகள், புத்தகக்கண்காட்சிகள், இராம கிருஷ்ண மிஷன் சிறுவர் பாடசாலைக்களுக்கு சிறுவர்படக்காட்சி காண்பித்தமை போன்ற விடயங்களும் வாசகர் வட்டத்தை புதுப்பித்தமை, அங்கத்தவர்களை அதிகரித்தமை, மட்டக்களப்பு சார் விடயங்களை காட்சிப்படுத்தல் போன்ற நிகழ்வுகளையும் வெற்றிகரமாக திட்டமிட்டு நிறைவேற்றியிருந்தனர். அவ் வகையில் "அறிவுச்சுரங்கம்" என்ற இச்சஞ்சிகை வெளியீடானது இவை அனைத்திற்கும் முத்தாப்பாக அமைந்திருக்கின்றது.

மட்டக்களப்பு நூலகர் வாசகர்கள், கல்விமான்கள், மற்றும் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களையும் நூலக உத்தியோகத்தர்களின் ஆக்கங்களையும் உள்வாங்கி இதுவரை காலமும் பொது நூலகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளையும் இச் சஞ்சிகையில் அச்சுப்பிரதியாக கொண்டுவந்திருப்பதானது பாரட்டுக்குரியவிடயமாகும்.


அறிவுச்சுரங்கம் என்னும் நூலின் பெயர் மாணவர்களையும் வாசகர்களை அறிவில் செதுக்கி பல்வடிவ பெயரில் அமையப்பெற்றிருப்பது சாலசிறந்தது. இச்சஞ்சிகையும் அதன் உள்ளடக்கங்களும் வாசகர்களையும் நூலகத்தினையும் ஒன்றிணைத்து சமூகத்தினிடையேயான நல்லுறவை சிறப்பாக மேலோங்கச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

இவ் இதழின் மொட்டை மலராக்கும் முயற்சி எதிர்வரும் காலங்களிலும் தொடரவேண்டும் என்பதுடன் எதிர் காலத்தில் நூலகமும் வளர்ச்சியடைய வேணடும் என இறைவனை மனதார வேண்டி மென் மேலும் நூலகப் பணி சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**திரு.நா.மணிவண்ணன்**
உள்ளூராட்சி
ஆணையாளர்
கிழக்குமாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



தியாகராஜா சரவணபவன்
கௌரவமாநகர முதல்வர்
තියාගරාජා සරවණබවන්
ගරු නගරාධිපති
**THIYAGARAJAH SARAVANAPAVAN**
**His Worship Mayor**

| | | |
|---|---|---|
| மாநகரசபை மட்டக்களப்பு | මහනගරසභාව මඩකලපුව | Municipal Council Batticaloa |

## மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி !

இவ் வருடத்திற்கான வாசிப்பு மாத நிகழ்வுகள் தேசிய ரீதியில் இடம் பெற்று வருகின்ற நிலையில், மக்களின் வாசிப்புத் திறன் அபிவிருத்தி, மாணவர்களின் வாசிப்புத் திறனுடன் கூடிய கல்வி அபிவிருத்தி, சிறார்களுக்கான வாசிப்புத் திறன் போன்ற பல்வேறு செயற்பாடுகளை நோக்காகக் கொண்டு மட்டக்களப்பு நகரின் மத்தியில் செயற்படுகின்ற பொது நூலகமானது இவ்வருட வாசிப்பு மாத நிகழ்வுகளை மேலும் சிறப்பிக்கும் வகையில் "அறிவுச் சுரங்கம்" எனும் சஞ்சிகை ஒன்று வெளி வருவதையிட்டு மிகவும் மகிழ்வுறுகின்றேன்.

எனவே இதற்கான முயற்சியினை எடுத்து இச் சஞ்சிகையை வெளிவர அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மட்டக்களப்பு பொது நூலகத்தின் நூலகர் அவர்கட்கும், அவருடன் பணியாற்றி வரும் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தியாகராஜா சரவணபவன்
மாநகர முதல்வர்.
மாநகர சபை.
மட்டக்களப்பு.

தி.சரவணபவன்
முதல்வர்
மாநகர சபை
மட்டக்களப்பு

No. 3/2, Mariyamman Kovil Road,
Kallady, Batticaloa, Sri Lanka
Phone : +94 65 2227641
E-mail :tsaravanapaban@gmail.com

Municipal Council,
Batticaloa
Phone : +94 65 2227066
Fax : +94 65 222 7787



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு பொது நூலகத்தினால் வெளிடப்படும் அறிவுச்சுரங்கம் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இன்று மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் எனும் இலங்கை நிர்வாக சேவையின் 1ம் தர பதவியொன்றினைப் பெறுவதற்கு பங்களிப்புச் செய்த இந்நூலகத்தின் ஒரு வாசகர் என்பதில் பெருமைப்படுவதில் இம்மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது.

தேசிய வாசிப்பு மாதம்-2018 நிக்ழ்வினையொட்டி பலதரப்பட்ட நிகழ்வுகள் மட்டக்களப்பு நூலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. மட்டக்களப்பு நூலக சிரமதானம், நடமாடும் சேவை, பாடசாலை மாணவ மாணவிகளுக்காக கருத்தரங்குகள் புத்தகக்கண்காட்சிகள் இராம கிருஷ்ண மிஷன் சிறுவர் பாடசாலைக்களுக்கு சிறுவர்படக்காட்சி காண்பித்தமை, வாசகர் வட்டத்தை புதுப்பித்தமை, அங்கத்தவர்களை அதிகரித்தல் மட்டக்களப்பு சார் விடயங்களை காட்சிப்படுத்தல் போன்ற நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் தொடர்ச்சியாக இச்சஞ்சிகை வெளியீடும் அமைகின்றது.

மட்டக்களப்பு நூலகம் வாசகர்கள் கல்விமான்கள் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களையும் நூலக உத்தியோகத்தர்களின் ஆக்கங்களையும் உள்வாங்கி, இதுவரை காலமும் பொது நூலகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளையும் உள்ளடக்கி அறிவுச் சுரங்கம் எனும் பெயரில் இச்சஞ்சிகையானது வெளிவருவது வாசகர்களையும் நூலகத்தினையும் ஒன்றிணைத்து நல்லுறவை சிறப்பாக மேலோங்கசெய்யும் என்பதில் சந்தேகமில்லை.

இச்சஞ்சிகை வெளியீட்டில் சம்பந்தப்பட்ட சகலரையும் மனமார பாராட்டுவதோடு இவ் இதழின் மொட்டை மலராக்கும் முயற்சி எதிர்வரும் காலங்களிலும் தொடரவேண்டும் என்பதுடன் எதிர் காலத்தில் நூலகமும் வளர்ச்சியடைய வேணடும் என இறைவனை வேண்டி மனதார வாழ்த்துகின்றேன்.

மாநகர ஆணையாளர்

**சட்டத்தரணி.கா.சித்திரவேல்(SLAS)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு நூலகத்தினால் வெளியிடப்படும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தேசிய வாசிப்பு மாதம் 2018 ஐப்பசிமாத நிகழ்வினையொட்டி மட்டக்களப்பு மாநகரசபையினால் பொது நூலகமும் ஏனைய நூலகங்களும் பல்வேறு பட்ட நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருந்தோம். இதில் ஒரு அங்கமாக சஞ்சிகை வெளியிட தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மக்களினதும் மாணவர்களினதும் ஆக்கங்களை உள் வாங்கி அறிவுச்சுரங்கம் என்றபெயரில் முதல் முறையாக சஞ்சிகை வெளிவருவதையிட்டு பெருமை கொள்கிறேன். இச் சஞ்சிகையானது மட்டக்களப்பு நூலக வாசகர்களின் ஆக்கங்களை உள்வாங்கி வெளிவருவது சிறப்பம்சமாகும்.

இச்சஞ்சிகையினுடாக வாசகர்களுக்கும் நூலகத்திற்குமிடையிலான உறவு மேம்பட வேண்டும் என்பதுடன் வாசகர்களின் ஆக்கத்திறன் வாசிப்பு மீதான ஈடுபாடு என்பன பெரிதும் அபிவிருத்தியடையும் என எதிர் பார்க்கின்றேன்.

அறிவுச்சுரங்கம் சஞ்சிகை வெளிவருவதற்கு முன்னின்று உழைத்த நூலகர்,நூலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஆக்கங்களை வழங்கிய வாசகர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் இம்முயற்சியானது எதிர்வரும் காலங்களிலும் தொடர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

பிரதிஆணையாளர்

**நா.தனஞ்ஜெயன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பு நினைவு மலர் நேசிப்பாய் அமையட்டும்

வாசிப்பு;

மனிதர்களில் மனிதத்தை விதைக்கும்!

மனங்களில் நம்பிக்கை துளிர்க்கும்

சமூகத்தோடு இணைந்தே;

நல்லிணக்கத்தை உருவாக்கும்!

உன்னதம் நிறைந்த வாழ்வு உதிர்க்கும்!

புதியதோர் உலகம் பிறந்திடும்!

ஆகவே;

வாசிப்பு நம்மனைவர்க்கும் சுவாசிப்பே!

இதனாலே தான்

வாசிப்பின் அவசியம் தொடர்பான விழிப்புணர்வை

ஏற்படுத்த அதனூடே புரிந்துணர்வைக் கட்டியெழுப்ப

அரசாங்கம்

ஆண்டு தோறும் தேசிய வாசிப்பு மாதமாக

ஐப்பசித் திங்களைப் பிரகடனம் செய்கிறது

அதனையொட்டி அம்மாதம் முழுவதும்

நடமாடும் நூலகம்!

நூல்களை அறிமுகம் செய்யும் கண்காட்சி!

தெருவோர நாடகங்கள்!

வாசகர் வட்ட ஒன்று கூடல்கள்!

எழுத்தாளர் கௌரவம்

மாணவர்களிடையே எழுத்து, பேச்சு, ஓவியப் போட்டிகள்!

அனைத்து நிகழ்ச்சிகளோடு

சிறப்பான நினைவு மலர் வெளியீடு!

அம்மலர் வெற்றிகரமாக மலர்ந்திட

நெஞ்சார வாழ்த்துகிறேன்.


திரு.தவராஜா

தலைவர்

நூலக மக்கள் மேம்பாட்டுக் குழு

மாநகர சபை

மட்டக்களப்பு.


✓ நல்ல நண்பருக்கு அடுத்த இடம் வகிப்பவை நல்ல நூல்களே - கோல்ட்டன்

✓ நல்ல புத்தகங்கள் நம்மை நல் வழிக்கு இட்டுச் செல்லும் - ஜோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளடக்கம்


- மட்டக்களப்பு நூலக வரலாறு
- கற்றலை மேம்படுத்தும் செவிமடுத்தல் கலை
- எமது சிந்தனைக்கு
- கல்வி கவிதை
- நூலகம் கவிதை
- புத்தகத்தை எவ்வாறு பாதுகாக்கலாம்
- மாணவர்களும் வாசிகசாலையும்
- வாசிப்பு மாதம்
- கல்வியின் முக்கியத்துவம்
- மட்டக்களப்பு நூலகம் வாழியவே
- வாசித்ததில் நேசித்தது....
- வளமாக வாழ உதவும் வாசிப்புப் பழக்கம்
- மனையிலும் தேவையொரு நூலகம்
- நல்ல வாசகன்
- வெகுசன தொடர்பாடலில் நூலக தகவல் அபிவிருத்தி
- நாம் எங்கே போகின்றோம்
- வாசிப்பின் பயன்பாடு
- நூலகம் ஒரு பொக்கிஷம்
- சிந்தனையாளர்களின் சில கருத்துக்களை முன்வைப்போம்
- மட்டக்களப்பின் மகிடி நாடகம் - ஓர் அறிமுகம்
- மட்டக்களப்பை ஆட்சி செய்தவர்களும் தடயங்களும்
- உங்கள் நேரத்தை விரயமாக்கும் எதிரிகள்
- **My Hobby (Reading)**
- குழந்தையின் ஞாபக சக்தியை அதிகரிப்பது எப்படி
- சமூக சீர்கேடும் அதன் விளைவுகளும்
- பாசத்துடன் எம்மை பாதுகாருங்கள்
- பழைய கல்லடி பாலத்தின் வரலாறு
- ஆசாரங்கள்
- குருஷேத்திரபுரம்
- வாசிப்பின் பொன்மொழிகள்
- மற்றவரிடம் பேசுவது எப்படி?
- குழந்தையின் பண்புகள்
- கற்றவன் யார்?
- நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்
- மட்டக்களப்பு மாவட்டம் எதிர்நோக்கும் சூழற்பிரச்சனைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு பொது நூலகத்தின்

## இலக்கு (VISION)

'கல்வி காலாசாரம் ஒழுங்கு பண்பாடு விழுமியம் ஒருங்கு பெற்ற நவீன விஞ்ஞான சமூக தகவல் தொழினுட்பம் நிறைந்த அறிவுள்ள நல்ல மனப்பாங்குடைய ஜனநாயக நற்பண்புள்ள நம்பிக்கைகள் உள்ள பிரஜைகளை உருவாக்குதல்.'

## பணிக்கூற்று (MISSION)

- பிரதேசம் சார்ந்த அறிவு வளங்களை இனங்கண்டு சேகரித்து கலாச்சார பண்பாட்டு மரபுகளை நிலைநிறுத்தல்.
- புதிய அறிவுச் சாதனங்களை மாணவருக்கு தகவல் தேடுவதற்காக ஊக்குவித்தல்.
- நூலக சட்டதிட்டங்களையும் ஒழுங்கு விதிகளைப்பற்றி அறிவு வளர்த்தல்.
- கல்வித் துறையை மேம்படுத்தல்.
- வாசகர் தேவைகளையும் வாசகர் கல்வி ஊட்டுதலையும் பயனுள்ள பொழுது போக்குமிடமாக மாற்றியமைத்தல்.

**'கல்வி கருவறையிலிருந்து கல்லறை**

**வரை கற்கப்பட வேண்டும்.'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இதழாசிரியரிடமிருந்து

தேசிய வாசிப்பு மாதத்தின் 15வது ஆண்டை முன்னிட்டு **அறிவுச்சுரங்கம்** எனும் இதழானது முதல் முறையாக ஜனனிப்பதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மட்டுமாநகர பொதுநூலகத்தினால் இந்த **அறிவுச்சுரங்கம்** என்னும் சஞ்சிகையை உருவாக்குவதற்கு ஊக்கமளித்த எங்கள் மாநகரசபை ஆணையாளர் **திரு.ந.மணிவண்ணன்** அவர்களுக்கும் கௌரவ முதல்வர் தி.சரவணபவன் அவர்கட்கும் பிரதி ஆணையாளர் **திரு.நா.தனஞ்ஜெயன்** அவர்கட்கும் முதற்கண் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கின்றேன்.

மேலும் சஞ்சிகையை வெளியீடு செய்வதற்கு ஆலோசனையை வழங்கிய சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் **திரு.அன்பழகன் குரூஸ்** அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நவீன தொழினுட்பம் வளர்ச்சியும் பிறநாட்டு கலாச்சாரம் என்பவற்றின் தாக்கம் காரணமாக இன்று மக்களிடையிடையிலான வாசிப்பு பழக்கத்தில் ஒரு தேக்கநிலை காணப்படுகின்றது. இந்த வேளையில் எங்கள் மாநகரசபை ஆணையாளரின் ஆலோசனைக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட முயற்சி பாராட்டத்தக்கது.

இந்த மலருக்கான கட்டுரைகளைத்தருமாறு வேண்டிய பொழுது மிகுந்த உற்சாகத்துடன் கட்டுரைகளையும், கவிதைகளையும், சிறுகதைகள், பொது விடயங்களை வழங்கிய அறிஞர்கள், பேராசிரியர்கள், மாணவமாணவிகளுக்கும், எழுத்தாளர்கள், வாசகர்கள் ஆகியோர்களுக்கும் இம்மலர் சார்பில் நன்றியை சமர்பிக்கின்றேன்.

இக்கன்னிமுயற்சி சஞ்சிகை அளவில் இன்று மாத்திரம் நின்று விடாது மேலும் தொடர்ந்து செயற்படுத்த இவற்றை கடைபிடித்து அது காட்டும் வழியில் நின்று நிலையான அமைதியான சுபீட்சமான சமுதாயம், அறிவான மாணவர்கள், பண்பான மக்கள் ஒன்றை உருவாக்க வேண்டியது இன்றைய இளைய சமுதாயத்தின் தலையாய கடமையாகும்.

என்னுடன் இம்மலர் வெளியிட உதவியவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இம்மலரை நேர்த்தியாக ஒழுங்கமைத்து தந்தவர்களுக்கும் தட்டச்சு செய்து தந்தவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கின்றேன்.

எனவே எங்கள் முயற்சி சிறப்பாக வெளிவரவும் இதழின் பயன் பெறவும் எல்லாம் வல்ல பரம் பொருளினை பிராத்தித்து நிற்கின்றேன்.

**இதழாசிரியர்**

**திருமதி.கமலேஸ்வரி ருத்திரகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு நூலக வரலாறு

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பு நகர மத்தியில் கட்டப்பட்ட உப்புக் களஞ்சியம் எனும் கட்டத்தின் ஒரு பகுதியில் இரண்டு பத்திரிகைகளுடன் நூலகம் ஆரம்பிக்கப்பட்டதாக வாய்வழித்தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

1844ல் ஐரோப்பிய பெருந்தோட்ட சமூகத்தினரால் அவர்களின் அங்கத்துவர்களுக்கென மட்டக்களப்பு நகரின் மத்தியில் 1844ல் வாவிக்கரை ஓரத்தில் அமைந்திருந்த சுங்கக் கட்டத்தின் பின் புறத்தில் பத்திரிகைப் பகுதியாக இந்நூலகம் இயங்கியது. இதன் நிர்வாகம்1932ல் local Board ஆக இருந்து பின் இது 1933ல் நகர சபையாக மாற்றப்பட்டது. 1944 தொடக்கம் 1956 வரையில் நகர சபை 12 வட்டாரங்களாகவும் மட்டக்களப்பு எல்லை காணப்பட்டது. 1950 களில் தற்பொழுதுள்ள பொது நூலகத்தின் நடுப்பகுதியிலுள்ள பழைய கட்டடத்தில் உசாத்துணைப் பகுதி ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் இரவல் வழங்கும் செயற்பாடும் நடைபெற்று வந்தது. முதன் முதலாக திரு. இராஜன் செல்வநாயகம் அவர்கள் நகர சபைத் தலைவராக இருந்த காலத்தில் 1951ம் ஆண்டு வாசிப்புப் பகுதி, உசாத்துணைப் பகுதி, இரவல் பகுதி மூன்றும் ஒரே இடத்தில் இயங்கியது. பின்பு பக்கத்திலுள்ள காணியில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு அதில் வாசிப்புப் பகுதியும் உசாத்துணைப் பகுதியும் இயங்க இரவல் நல்கும் பகுதி மாத்திரம் முன்பு மாதிரி சுங்கக் கட்டிடத்தில் இயங்கியது. 1960-1965 களில் தற்பொழுதுள்ள நூலகம் கட்டப்பட்டது. கீழ் பகுதி இரவல் நல்கும் பகுதியாகவும் மேல் பகுதி வாசிப்புப் பகுதியாகவும் பழைய கட்டத்தில் உசாத்துணைப் பகுதியும் இயங்கியது. திரு.ஆ.சு.ரோச் என்பவர் நூலகராக கடமை புரிந்தார். இவர் மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்தவர். 1967ல் மாநகரசபையாக மாற்றப்பட்டது. 19 வட்டாரங்கள் காணப்பட்டது. அக்காலத்தில் 1967ம் ஆண்டு ஆடி மாதம் 1ம் திகதி மாநகர முதல்வரான திரு. செ. இராசதுரை அவர்களினால் பல புதிய நூல்கள் இந் நூலகத்தில் சேர்க்கப்பட்டன. இக்காலப்பகுதியில் திருG.N.ரெட்னெ நூலகராக கடமையாற்றினர். இவர் மிகவும் திறமை மிக்க சிறப்பு வாய்ந்த நூலகராவார். ஆணையாளராக திரு.த.உ. தம்பிநாயகம் இருந்தார். 1977ல் அரசியல் மாற்றத்தினால் திரு. இராஜன் செல்வநாயகம் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் அதிகாரியாக வந்த பின்பு தற்போதைய சிறுவர் நூலக கட்டிடம் 9-12-1977ல் கட்டப்பட்டது. இதில் கீழ் பகுதி இரவல் நல்கும் பகுதியாகவும் மேல் பகுதி உசாத்துணைப் பகுதியாகவும் இயங்கின. அப்பொழுது நூலகருடன் 12 பேர் நூலக ஊழியர்களாக கடமையாற்றினர். திரு.A.Bநுகப்பபிட்டிய ஆணையாளரும் நூலக குழுத் தலைவர் நகர முதல்வராக திரு. J.L.திசவீரசிங்கம் இருந்த காலத்தில் திரு. யு. டீ நுகப்பிற்றியவால் கல்லடி மாநகர சபைக்கு சொந்தமான காணியில் வாசிப்புப் பகுதி கட்டிடம் கல்லடியில் கட்டி முடிக்கப்பட்டது. அதன் பின்னர் 23 ம் திகதி இயற்கையின் சீற்றத்தால் 1978ல் ஏற்பட்ட சூறாவளியினால் பொதுநூலகத்தில் மேல் பகுதி சேதமடைந்தது. மேற்பகுதியில் இருந்த நூல்கள், சஞ்சிகைகள், அரிய நூல்கள் சேதமடைந்தன. அக்கால கட்டத்தில் நூலகராக கடமையாற்றிய திரு.S.சபாரெத்தினம் அவர்களின் அரும்பாட்டினை அப்போதைய ஜனாதிபதி திரு. சு. பிரேமதாச அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு ஜனாதிபதி மட்டக்களப்பிற்கு வருகை தந்து நூலகத்தினை பார்வையிட்டு அதற்குரிய அபிவிருத்திப்பணிகளை அவரே ஆரம்பித்து வைத்தார்.

அதே காலப்பகுதியில் கல்லடி நூலகமும் பாதிக்கப்பட்டது. சூறாவளியினால் சேதமடைந்த கட்டிடங்கள் மீள் நிர்மாணம் செய்யப்பட்டன. இதில் பொது நூலகம் மட்டக்களப்பும் கல்லடியும் அடங்கும். 1979ல் மீண்டும் இரண்டு நூலகம் திறக்கப்பட்டு மிகவும் நன்றாக நிர்வகிக்கப்பட்டன. சூறாவளியின் பின் புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொது நூலகம் காலை 8.00 மணி முதல் மாலை 8.00 மணிவரை திறக்கப்பட்டது. திரு.R.குணரெட்னம், திரு A.S.பத்திராண, திரு கணவதிப்பிள்ளை ஆகியோர் நூலகத்திற்கு அரிய சேவையை ஆற்றினர். புதிய நூலகராக திருமதி. கமலதேவி என்பவர் கடமையை பொறுப்பேற்று நடாத்தி வந்தார். அக்காலப்பகுதியில் விசேட ஆணையாளராக அரசாங்க அதிபர் திரு. மு. அந்தோனிமுத்து அவர்கள் கடமையாற்றினார்கள். அக்காலப்பகுதியில் பொது நூலகத்தினால் பல கிளை நூலகங்கள் திறக்கப்பட்டன. நாவற்குடா, புதூர், பார்வீதி, எல்லைவீதி, ஆகிய இடங்களில் திறக்கப்பட்டன. கோட்டமுனை பார்வீதியில் ஒரு நூலகத்திற்காக இந்து சமய கலாச்சார அமைச்சராக இருந்த திரு. செ. இராசதுரை அவர்களால் 9.8.1984ல் அடிக்கல் நாட்டப்பட்டு 6.7.1985ல் திரு. செ. இராசதுரை அவர்களால் திறக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் திரு. பெனடிகற் தாஸிசியஸ் மாநகர ஆணையாளராக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த கால கட்டத்தில் எல்லை வீதியில் சனசமூக நிலையம் கட்டப்பட்டு அதில் வாசிப்பு பகுதி இயங்கி வந்தது. தற்பொழுது அதிக அளவு பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் கொண்டு திறம்பட இயங்கிக் கொண்டிருக்கிறது. திருமதி ஸ்ரீநிவாசன் என்பவரும் இடைக்காலத்தில் குறுகிய காலம் நூலகராக கடமையாற்றினார். 1884.9.15இருந்து மாஸ்டர் சிவலிங்கம் நூலகங்களில் கதை கூறிவந்தார். திரு. சபாரெட்னம் மாற்றலாகிச் சென்ற பின் திரு. S.சின்னராசா உதவி நூலகராக பொறுப்பு ஏற்று செயற்பட்டார். அந்த நாட்களில் இன்னும் சில கிளை நூலகங்கள் திறக்கப்பட்டன. அவை மருதடி, கூழாவடி என்பனவாகும். அந்த நேரத்தில் ஆணையாளரான திரு.S. கார்த்திகேசு கடமையாற்றினார். தற்பொழுது இருக்கும் நடுபகுதி கேட்போர் கூடமாகவும் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது திரு.S. செல்வராசா நூலகராக புதிதாக மாற்றலாகி வந்தார். அவரின் காலத்தில் Batticcaloa Bibiliography என்னும் நூல் வெளியிடப்பட்டு அத்துடன் புதிய அரும்பொருள் காட்சியகமும் திறக்கப்பட்டது. 1990ம் ஆண்டு இனகலவரத்தில் அவர் யாழ்பாணம் சென்று திரும்பும் பொழுது பொலநறுவையில் வெட்டுக்காயங்களுக்குட்பட்டு மரணமானார். அவரின் மரணச்செய்தியை அறிந்ததும் மட். அரச அதிபரின் அனுசரணையோடு இந்திய சமாதானப்படை (I.P.K.F) உதவியுடன் அவரின் உடலை யாழ்ப்பாணம் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் பொலநறுவையிலிருந்து எடுத்து சென்று உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின் சின்னராசா அவர்கள் நூலக நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். பார் வீதியில் கட்டப்பட்ட அரசடி நூலகமானது 1990ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தால் மூடப்பட்டு பொலீஸ் நிலையமாக மாறியது. 1994ல் திரு.க. வித்தியாசாகரன் என்பவர் நூலகராக பதவி ஏற்று வந்தார். அவர் காலத்தில் பல சமயா சமயஊழியர்கள் நூலக பரிசாரகர், சிற்றூழியர்கள், சுகாதார தொழிலாளா், காவலாளி என முப்பதுக்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்தனர். அவ்வேளையில் கல்லடி நூலகத்தினை நிர்ணயிப்பதற்காக சேவையடிப்படையில் திரு. சி.சின்னராசா நூலகராக கல்லடி சென்றார்.

அங்கு பத்திரிகை பகுதி மட்டும் இருந்தது. மாஸ்டர் சிவலிங்கம் ஞாயிறுகளில் சிறுவருக்கு கதை கூறி மகிழ்வித்தார். திரு. ச.நவநீதன் மாநகரசபை ஆணையாளராக இருந்த காலத்தில் 7-6-2003 ல் நூலக கேட்போர் கூடமும் புதிய பத்திரிகை பகுதியும் கட்டப்பட்டு நீதிபதி கௌரவ திரு. சுப்பிரமணியம் பரமராஜா அவர்களால் திறக்கப்பட்டுள்ளன. நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டது. 1995ல் இதை தொடர்ந்து நூலகம் மாநகர மக்களுக்கு சேவையாற்றி வரும் வேளை 2004ல் சுனாமி அனர்த்தத்திற்கு உட்பட்டது. இதில் சிறுவர் பகுதியும் நடமாடும் சேவைக்குரிய பகுதியும் நூல்கள், தளபாடங்கள் ஆகியன பாதிக்கப்பட்டது. நடமாடும் சேவை ஸ்தம்பிதம் அடைந்தது. கல்லடி நூலகத்தில் நூலகராக கடமையாற்றிய திரு. சின்னராசா ஓய்வு பெற்ற பின் சேவை மூப்பின் அடிப்படையில் செல்வி.வி.யோகேஸ்வரி அவர்கள் நூலகராக பொறுப்பு ஏற்றார். இவர் காலத்தில் திரு.மா. உதயகுமார் ஆணையாளராக கடமையாற்றிய காலத்தில் 2009ல் தேசிய வாசிப்புமாதம் விமர்சையாக இடம் பெற்றது. இக்காலகட்டத்தில் கல்லடி நூலகம் திருத்தப்பட்டு இரவல் நல்கும் பகுதி உருவாக்கப்பட்டது. இதற்கு அதிக நூல்களை கொள்வனவு செய்து கொடுத்தார் ஆணையாளர்.


செல்வி. வி. யோகேஸ்வரி ஓய்வு பெற்று சென்றதால் நூலக ஊழியர் திரு. பி. சுப்பிரமணியம் கல்லடி நூலகத்தின் நிர்வாகத்தினை பொறுப்பு ஏற்றார். வித்தியாசாகரன் காலத்தில் மருதடி, திருப்பெருந்துறை, கூழாவடி போன்ற கிளை நூல்கள் பூட்டப்பட்டன. 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி தாக்கம் மட்டக்களப்பு பொது நூலகத்தின் தகவல் துறையை வளர்ப்பதற்கு உதவியது. M.C.M என்னும் கனடிய நிறுவனர் நூலகர் நூலக ஊழியர்களை கனடாவிற்கு எடுத்து பயிற்சி கொடுத்தனர். பல நிறுவனங்கள் கணனிகள் அன்பளிப்பு செய்தது. தேசிய நூலக ஆவணங்கள் சபை தளபாடம், நூல்கள் என்பன அன்பளிப்பு செய்தது. உலக நட்புறவு சங்கம் கணனி அன்பளிப்பு செய்தது. U.S.A நிறுவனம் கணனி unit ஒன்றையும் அமைத்து கொடுக்க பூரணா software ஒன்று நூலகத்தை கணனி மயப்படுத்த தேசிய நூலகம் கொழும்பில் ஒருமாத பயிற்சி திரு.க.வித்தியாசாகர் நூலகருக்கு கொடுத்தது. இவையாவும் இங்கு சரிவர பயன்படுத்தப்படவில்லை என்று கண்ணூடாகத்தெரிகின்றது. நிறைய நூல்கள் அழிக்கப்பட்டும் பலநூல்பதிவேட்டு ஆவணம் அழிக்கப்பட்டும் இருந்தன. திரு.மா.உதயகுமார் ஆணையாளராக இருந்த காலத்தில் Nenasala எனும் கிராமங்களுக்கு கணனி அறிவு எனும் திட்டம் மூலம் மக்களுக்கு தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கு அரசும் I.C.T.A நிறுவனம் internet photo copy, Scanning, Fax போன்றவை வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2011ல் திருமதி. சிவகீத்தாபிரபாகரன் மாநகர முதல்வராக வந்த பொழுது திரு.க.சிவநாதன் அவர்கள் ஆணையாளராக கடமையாற்றினார். கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த திரு. சிவனேசதுரை சந்திகாந்தன் அவர்களால் புதிய நூலகத்தின் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டப்பட்டது. 2012 மாசி மாதம் நூலகர் திரு..க.வித்தியாசாகர் ஓய்வு பெற்று சென்றதன்பின் திரு. பி. சுப்பிரமணியம் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 2012ல் ஐப்பசி மாதம் நூலகராக திருமதி.க. ருத்திகுமார் கடமையை ஏற்று வந்தார். இவரது காலத்தில் பழுதடைந்த கணனிகள் திருத்தப்பட்டன. நூல்பதிவேட்டு ஆவணம் உருவாக்கப்பட்டு பதிபடாத நூல்கள் பதியப்பட்டன. அசுத்தமாக இருந்த அறைகள் புதுப்பொலிவுடன் Asian Fundation புத்தக அறையாக மாறியது. நூல்கள் கண்டு எடுப்பதற்கு இலகுவாக இலக்கமிடப்பட்டு பகுக்கப்பட்டு நிற அடையாளமிடப்பட்டது. சிறுவர் பகுதி இயங்காமல் மதியம் பின் மூடிக்கிடந்தது. நிரந்தர ஊழியர் போடப்பட்டு 9.00 - 5.00 வரை திறக்கப்படுகிறது. அரசடி நூலகம் பத்திரிகை பகுதி திறக்கப்பட்டது. மட்டக்களப்பு பொது நூலகத்தினை தேசிய பொது நூலக ஆவணமாக்கல் சபை மூலம்22.01.2013ம் திகதி 1ம் தரம் உயர்த்தப்பட்டது. மே 2013ல் இரவு 8.00 மணி வரை நூலகம் திறக்கப்படுகின்றது. Feb-2013 15ம் திகதி நூலக தொண்டர் தென் கொரியாவில் இருந்து சேவையாற்ற வருகை தந்தார். இவரின் அனுசரணை மூலம் பல கணனிகள் அலுமாரிகள் பிரதிகள் எடுக்கும் இயந்திரம் சேவர் போன்ற பல பொருடகள் அன்பளிப்பு செய்தார். 2014ல்kohaநூலக தன்னியக்க மென்பொருள் திறந்த வளங்கள் மூலம் நூலகநூல்கள் யாவும் கணனியில் .பட்டியலாக்கமும் இரவலும் செய்யப்பட்டது. இதனை தென்கிழக்கு பல்கலைகழக நூலகரின் வழிகாட்டலில் நடைபெற்றது. 2017ல் திரு வெ.தவராஜா ஆணையாளரால் உடைந்த முன்மதில் சீரமைக்கப்பட்டது. பெரியஇமு கதவுமுன் பக்கம் போடப்பட்டது. மட்டக்களப்பு பொது நூலகத்தின் பெயர் பலகை அழகான எழுத்தில் போடப்பட்டது. நூலகத்தின் தூண்கள் உடைந்து சிதைந்தவை சீரமைக்கப்பட்டது. 2017ல்I.C.T.A நிறுவனம் மூலம் Online செய்யப்படுவதற்கு பல தொழில்நுட்ப உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது அதன் வேலைகள் இடம் பற்றுக் கொண்டு உள்ளது. 2017ல் திரு.N.மணிவண்ணன் அவர்கள் ஆணையாளராக பதவி ஏற்றார். Digital Library அபிவிருத்திக்கான வேலைகள் CCTV Camara பொருத்துதல் போன்றவற்றிற்கு அனுமதி அளித்தார். பல விடயங்களில் பொது நூலகத்திற்கு உறுதுணையாக இருந்தவர் 2018ல் மாற்றலாகி சென்று விட்டார். பின் 2018ல் திரு.K.சித்திரவேல் ஆணையாளராக கடமையை பொறுப்பேற்றார். மட்டக்களப்பு மாவட்டத்தின் பொது நூல் நிலையம் பற்றிய வரலாறு இல்லாததால் பல முயற்சிகளில் சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு இவ் வரலாற்றினை எழுதுகிறேன். இவற்றில் உள்ள தரவுகளின் உண்மைத் தன்மை எவ்வளவு என்பதனை உறுதியிட்டு கூற முடியாது என்பதனை மன வேதனையுடன் கூறுகின்றேன்.

**உலகிலுள்ள அனைத்து உயிர்களின் மீது இறைவனுடைய கருணை எப்பொழுதும் பொழிந்து கொண்டிருக்கிறது. கருணையைக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. தியானத்தை ஒழுங்காய்ச் செய்,இறைவனின் எல்லையற்ற கருணை தொடரும். (அன்னை சாரதாதேவி)**





**திருமதி.கமலேஸ்வரி ருத்திரகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொடி வாரம்








# மாநகர முதல்வருடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media











Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சிறைச்சாலைக்கு விஜயம் செய்தபோது














Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடைபெற்ற KOHA கருத்தரங்கு











Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கற்றலை மேம்படுத்தும் செவிமடுத்தல் கலை

ஆசிரியர் பகிர்வை மேற்கொள்ளும் போது மாணவர்கள் முழுக்கவனத்தையும் அதில் செலுத்தி அவரது வார்த்தைகளின் அர்த்தங்களை உள்வாங்கி புரிந்துகொள்ள எடுக்கும் முயற்சியே செவிமடுத்தலாகும்.

செவிமடுத்தல் என்பது மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான திறனாகும். எழுதுவது, வாசிப்பது, பார்ப்பது, கணிதம் செய்வது இவற்றையெல்லாம் விட மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இது எளிதான கலை அல்ல கடும் பயிற்சியின் மூலமே கற்றுக்கொள்ள வேண்டும். செவிமடுக்கும் போது நாம் சரியாக காது கொடுத்து கேட்பதற்கு பதிலாக பல சமயங்களில் என்ன பதில் சொல்வதென்றே நம் மனதுக்குள் சிந்தித்துக் கொண்டிருப்போம்.

வகுப்பறையில் ஆசிரியர் சலிப்படைய வைக்கிறார் என்று கருதும் மாணவர்கள் உடனடியாக பகற்கனவில் மூழ்கத் தொடங்குகின்றனர். அவர்கள் காதுகளில் ஒலி அலைகள் கேட்டுக்கொண்டு இருக்கும். ஆனால் அவற்றை அவர்கள் உள்வாங்குவதில்லை. செவிமடுப்பது போல் நடித்துக்கொண்டு இருப்பார்கள்.

சில மாணவர்கள் குறிப்பிட்ட சில செய்திகளுக்கு மட்டும் ஆர்வமாக செவிமடுத்துவிட்டு ஏனைய செய்திகளை கோட்டை விடுவதுண்டு. ஆசிரியர் கேள்வி கேட்கும் போது அர்த்தமற்ற பதில்களை கூறுவார்கள் அல்லது பரீட்சையின் போது படித்தது போன்றிருக்கும் ஆனால் ஒன்றும் நினைவிற்கு வருவதில்லை என்று கூறுவார்கள்.

வேறு சில மாணவர்கள் அரை குறையாக செவிமடுப்பார்கள். இவர்கள் ஆசிரியர் சொல்லப்போகும் விடயம் ஏற்கனவே தெரிந்த விடயமாக இருந்தால் தனக்கு எல்லாம் தெரியும் என்று மனதுக்குள் பூட்டுப் போட்டுக்கொள்வார்கள். இதனால் ஆசிரியர் சொல்வதை முழுமையாக கேட்பதில்லை.

முழுமையாக செவிமடுத்தல் என்பது ஓர் அரிதான கொடையே. ஒரு சிலர் இயற்கையாகவே பெற்றிருக்கலாம் மற்றவர்கள் இப்பயிற்சி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**செவிமடுத்தலை வளர்த்துக்கொள்வதற்கான பயிற்சிகள்** செய்முறை : 01

- அமைதியான ஓர் இடத்தை தெரிவு செய்யவும். முள்ளந்தண்டை நிமிர்த்தியவாறு அமைதியான மனநிலையோடு கண்களை மூடி சிறிது வினாடி உட்காரவும்.

இப்பொழுது தூரத்தில் கேட்கும் மிகக்குறைவான ஒலியை அவதானிக்கவும். (1நிமிடம்) சத்தங்களின் வித்தியாசத்தை செவியால் உணரவும். பின் நீங்கள் உட்கார்ந்துள்ள இடத்திற்கு அருகில் உள்ள சத்தங்களை அவதானிக்கவும். (1நிமிடம்) சத்தங்களின் வித்தியாசத்தை உணரவும். தொடர்ந்து உங்களை சுற்றியுள்ள சத்தங்களை கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். (1நிமிடம்) சத்தங்களின் வித்தியாசத்தை உணரவும். உங்களுக்குள் கேட்கும் சத்தங்களை அவதானிக்கவும்.

(உ + ம்) இதயத்துடிப்பு, இரத்த ஓட்டம் (1நிமிடம்)

**குறிப்பு:-** ஆரம்பத்தில் அமைதியான இடத்தில் செய்து பழகலாம் பின்பு எங்கும் பழகாலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பயிற்சி ஊடாக முழுமையாக செவிமடுக்கும் திறனை பெறுவதோடு மனம் அமைதியும் ஆறுதல் அடைவதையும் நீங்கள் அவதானிக்கலாம். இதனை தியானப் பயிற்சியாகவும் செய்யலாம்.

இப்பயிற்சியை செய்த பின்னர் கண்களை மூடியபடி உங்கள் உடல்நிலை மன நிலைகளை அவதானித்த பின்னர் பயிற்சியை நிறைவு செய்*யலாம்.*

இதன் மூலம் மூளை நரம்புகள் தூண்டப்படுவதோடு செவிப்புலன் புலப்படுத்தப்பட்டு நினைவாற்றலை அதிகரிக்க செய்யும் இப்பயிற்சியை குறிப்பிட்ட முறையில் செய்து இதன் பலனை நீங்களும் பெறலாம்.

**ம.நேசராஜ**
Dip.in.counselling.Bsc. MA

**அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு எப்படி ஏற்படுகிறது என்பதல்ல முக்கியம்: அதைக் கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதுதான் முக்கியம்.**

**~ கார்லைல் ~**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எமது சிந்தனைக்கு

- மறப்பதற்குச் சிரிக்க வேண்டும் சிரிப்பதற்கு மறக்க வேண்டாம்.
- நீங்களும் நன்கு வாழுங்கள் மற்றவரையும் வாழவிடுங்கள்.
- இரக்கப்படுபவன் ஏமாந்து போகலாம் ஆனால் தாழ்ந்து போவதில்லை.
- நம்பிக்கை ஒன்றுதான் மனிதனுக்கு நேரும் நோய்களுக்கு மருந்து.
- வாழ்க்கை என்பது மலர்படுக்கை அல்ல முள்ளால் ஆனது.
- வாயைக் காப்பவன் வாழ்க்கையைக் காப்பான்.
- உண்மையாக இருந்தாலும் பிறரது மனம் புண்படும் விதத்தில் பேசக் கூடாது.
- மனிதாபிமானத்தை மிஞ்சிய ஆன்மீகம் இல்லை.
- உன் அறிவில் மற்றவர் ஒளி பெறவேண்டும்.
- எல்லா நேரங்களிலும் பண்பாக நடக்க முயற்சி செய்யுங்கள்.
- கேட்பதனால் ஞானம் வருகின்றது, பேசுவதனால் வருத்தம் வருகின்றது.
- தூய்மையற்ற மனம் தனக்கும் பயன்படுவதில்லை பிறருக்கும் பலன் தருவதில்லை.
- மன ஆரோக்கியத்திற்கு சிறந்த மருந்து மௌனத்தை தவிர வேறொன்றுமில்லை.
- பல்வேறு தகவல்களை வாசிப்பதனாலேயே மனிதன் அறிவுள்ளவனாகின்றான்.
- வாசிப்பதனாலேயே மனிதன் பூரணமடைகின்றான்.
- வாசிப்பு மனிதனின் பிற்காலத்தில் பல்வேறு முறையில் உதவுகின்றது.
- கெட்ட தகவல்களை வாசிப்பதை விட நல்ல விடயங்களை வாசிப்பது மேன்மையானது.
- வாசிப்பதற்காக இடம் தேடாதீர் நூலகம் இருக்கிறது.

செல்வி .த.லேனுஜா
மட்/புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்வி

கல்வி என்பது மூன்றெழுத்து – அதைக்
கற்றுவிட்டால் கோடி எழுத்து.
கல்லாதவர் நெஞ்சம் கல்லாகும்
கற்றவர் நெஞ்சம் பூவாகும்.
பிறர் துயர் கண்டால் துவண்டுவிடும்
அவர் தம் துயர்போக்கி இன்புறுமே!
காற்றாலும் தீயாலும் மற்றும்
கடற்கோளாலும் அழியாது கல்வி.
வற்றாத ஊற்றாகும் கல்விதனை
விருப்புடனே நாம் கற்றிடுவோம்
வறியோரை வானுயர வைத்திடும்
சமூக ஏற்ற தாழ்வினை ஒழித்திடும்
ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும்
சிந்தனையை கிளறித் தெளியவைக்கும்
கல்வியே எம் உயர்விற்கு
என்றும் ஏணிபோல் உதவிடும்.
நாம் என்றும் அதனை மறவாது
போற்றி அதன்புகழ் பாடிடுவோம்.

- **மௌனம் அறிவுக்கு அழகு, பொறுமை திறமைக்கு ஏற்றது – காளிதாசர்**
- **படிக்கும் போது சோர்வை உண்டாக்காத நூல்கள் அனைத்தும் நல்ல நூல்களே – வால்டர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நூலகம்

நூலக சாலை என்பது
பெரியோர் சிறியோர் சாலை
உலகெங்கும் உள்ள விடயம்
உன்னிடமே இருக்கும்
பார் எங்கும் உலா வரும்
பத்திரிகை பெண்மணி கூட
உன்னில் தங்கியிருப்பாள்
மௌனம் என்பது உனது மொழி
உனது மொழிதானே புதிய வழி
நீ இல்லாத இடமேது
எங்கும் உள்ள உன்னை
போற்றுகிறேன் பாராய்.

அ.கெப்சிப்பா
கல்லடி முகத்துவாரம் விபுலாநந்த
வித்தியாலயம்

நூல் அளவையாகும் நுண்ணறிவு
நீ எனக்கு தந்தது கல்வியறிவு
உனது பெயருக்கு வாசிகசாலை, படிப்பகம்
என்பது வேறு நாமம்
அனைத்து நூல்களும் கொண்டிருப்பாய் நீயே
பாரெங்கும் பவனி வருவாய் நீயே
நூல் மட்டுமன்றி பத்திரிகை கொண்டிருக்கும்
நூலகமும் நீயே
அனைத்து விடயமும் காத்து
பயனழிப்பாய் நீயே
பெரியோர் மட்டுமன்றி சிறியோருக்கும் அறிவு
புகட்டு கல்விற்கு உதவும் செல்வமும் நீயே


க உ.கேசாயினி
கல்லடி முகத்துவாரம் வித்தியாலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புத்தகத்தை எவ்வாறு பாதுகாக்கலாம்?

- ❖ புத்தகத்தை அதிகமாகப் பிரிக்கக் கூடாது.
- ❖ பிரித்தபடியே கவிழ்த்து வைக்காதீர்கள்.
- ❖ மூலைகளை மடிக்கக் கூடாது.
- ❖ தலையணைக்கு கீழ் வைக்கக் கூடாது.
- ❖ குழந்தைகளிடம் கொடுக்காதீர்கள்.
- ❖ குறிப்புகளும், கோடுகளும் எழுத வேண்டாம்.
- ❖ எண்ணெய், நீர் பட்ட கைகளுடன் புத்தகத்தைத் தொடக்கூடாது.




**புத்தகங்களை யாருக்கும் இரவல் தராதீர்கள்.**
**அது உங்களுக்குதிரும்ப வராது.**
**என்னிடம் உள்ள புத்தகங்கள் யாவும் என் நண்பர்கள் எனக்கு இரவல் தந்தது தான்"**
**-பிரெஞ்சு நாவலாசிரியர் அனடோல் பிரான்ஸ்.**
**இவர் சுயசரிதை புத்தகத்தின் பெயர் "என் நண்பனின் புத்தகம்".**




**My Friend's Book**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர்களும் வாசிகசாலையும்

'கற்கக் கசடறக் கற்றபின் நிற்க அதற்குதக' என வள்ளுவர் கூறியுள்ளதையும், சீனா சென்றேனும் கல்வியை கல் என ஒரு மகான் கூறியுள்ளதையும், கல்வியை போலொரு செல்வமுளதோ என கவிஞன் பாடியிருப்பதையும் நாமறிவோம். கற்காதவன் பாதி மனிதனென்றும் கற்றவனே முழு மனிதனாக கணிக்கப்படுகிறான்.



'கசறுஅற' என வள்ளுவர் அழுத்திக்கூறி இருப்பதை ஆராய்ந்தால் எவ்வித குறைபாடுகளுமின்றி கற்கவேண்டும். பிழை இல்லாமல் சரியான கருத்தறிந்து பொருளறிந்து கற்க வேண்டும். இப்படிப் பற்பல அர்த்தங்களை அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.

பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவமணிகள் வெறும் ஏட்டுக்கல்வியை மட்டும் படித்து புத்தகப்பூச்சிகளாக இல்லாமல் பரந்த அறிவை பெறுவதற்கு நூலகமும் பெரும் பங்காற்றுகின்றது. கல்வி கற்பது இறைவனை சென்றடைவதற்கே என ஆறுமுகநாவலர் திருவாய் மலர்ந்துள்ளார். உண்மை இப்படிஇருந்தாலும், தற்போது புதிய புதிய வியாக்கியானங்கள் சொல்ல வேண்டிய ஆளலுக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதாவது கல்வி கற்பது அறிவை பெருக்கிக் கொண்டு ஒரு கல்வி மானாக, ஒரு பேராசிரியராக, ஒரு பட்டதாரியாக என்ற சிந்தனையும் கல்வியால் தன்தகுதியை உயர்த்தி பொருளாதாரத்தில் உயரவும் வாழ்வை வளப்படுத்தவும் ஒரு வேலை வாய்ப்பைப் பெறவும் இப்படி இன்னோரன்ன விதமாக பல பரிமாணங்களை இப்போது கல்வி கற்றல் பெறுகின்றது.

இன்று கல்வி கற்றுத் தேருவோர்களின் எண்ணிக்கை விரிவடைந்து கொண்டு போவதால் போட்டி நிலைமை உருவாகி உள்ளது. எனவே படித்தவர்களுக்கெல்லாம் வேலை என்ற நிலைமை இல்லை. படித்து தேறியவர்களில் பொது அறிவு உள்ளவர் யார் விவேகி யார் உலக நடப்பு விவகாரங்கள் நாட்டின் நிர்வாக கட்டமைப்புக்கள் இப்படியே பள்ளிப் படிப்போடு சம்பந்தப்படாத விவகாரங்களையும் அறிந்திருக்க வேண்டிய கட்டாயத்துக்கு மாணவர்களும் பதவி உயர்வை நாடி நிற்பவர்களும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

எனவே இப்படியான அறிவை வாசிகசாலைகளில் பெறலாம். நூலகம் என்ற பெயர் கொண்ட வாசிகசாலை மிகமிக பயன்மிக்க ஒரு இடமாகும். பத்திரிகைகள் சஞ்சிகைகளை வாங்கிபடிக்க வசதி அற்றவர்கள் எல்லோருக்கும் உதவக்கூடிய இடமாக அறிவுக் கருவூலமாக திகழும் இடம் வாசிகசாலையாகும்.

பற்றாக்குறையான வாழ்க்கை சூழலில் சிறிது வசதி உள்ளோர் ஒரு பத்திரிகைக்கு மட்டும் சந்தாக்கட்டி எடுத்துப்படித்து வரமுடியும். ஆனால் வசதியற்றவர்களும், மாணவர்களும், பல்வேறு விதமான பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் நிரம்பி வழியும் வாசிகசாலையை பயன்படுத்தலாம்.

மக்களின் நன்மை கருதி அரசாங்கமும் நகரசபைகளும் கிராம சபைகளும் இடத்துக்கிடம் நூலக வசதிகளை செய்து கொடுத்திருந்தாலும் அதை பயன்படுத்துவோர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். நாட்டில் சர்வதேசத்தின் என்ன என்ன மாற்றங்கள் எங்கெங்கு புதிய புதிய சம்பவங்கள் அதிசயங்கள் பிரச்சனைகள் நடக்கின்றன என்பதை அறிந்து கொள்ளவேண்டிய ஆர்வம் ஆவல் எல்லோருக்கும் ஏற்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேண்டும். குறிப்பாக வருங்கால சந்ததியினரை பிரதிநிதித்துவப்படுத்த இருக்கின்ற மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும். இப்பயன்களை தரக்கூடிய இடமாக வாசிகசாலை திகழ்வதால் அதை நல்லமுறையில் பயன்படுத்தி பலன் பெறுவோமாக.

கௌசிகன்பிரியசங்கரி(ஆசிரியர்)

எல்லாத்
துன்பங்களுக்கும்
இரண்டு
மருந்துகள்
உள்ளன.
ஒன்று காலம்,
இன்னொன்று

வாழ்வில் அணியாகவும் தாழ்வில் துணையாகவும் விளங்குவது தான் கல்வி. ஆழ்ந்த வாசிப்பு அறிவைப் பெருக்கும்.

- ♥ நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது மற்றவர்களை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத்தான்.~ எமர்சன்~
- ♥ வேலைக்காரனாக இருக்கக் கற்றுக்கொள்: பிறகு எஜமானாகும் தகுதி தானாக வரும் ~விவேகானந்தர்~
- ♥ ஆயிரம் உபதேசங்களை விட ஓர் அனுபவம் சிறப்பாகப் பாடம் கற்பிக்கும் ~ இங்கர்சால்~
- ♥ நாளை என்பது சோம்பேறிகளின் கூற்று. இன்றைய நாளின் அருமையை உணர்ந்தோர் உயர்ந்து கொண்டிருக்கின்றனர். ~வெயின்~
- ♥ தன்னை மட்டும் புத்திசாலி என்று நினைப்பவன் ஒன்றுமே அறியாதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பு மாதம்

வாசிப்பு மாதமாம் நூலகத்திலே
வகைவகையான நூல்கள் வரிசையிலே
நுண்ணறிவூட்டிடும் நூலகமாம்
நுகர்வோர்கள் கூட்டம் ஆயிரமாம்

பொன்னான நேரத்தை மண்ணாக்காமல்
போய் பலனடைய மக்கள் நலன்கருதி
வாய்ப்புக்கள் பலவும் செய்து
வகையான நூல்களால் ஆனது நூலகம்
கன்னியரும் காளையர்களும்
கற்றறிந்த பெரியோர்களும்
காலம் நேரம் கருதாது
கல்வியறிவைக் கற்றொழுகும் கல்விமான் கூட்டம்

பத்திரிகை சஞ்சிகை வாசிப்பு பழக்கவழக்கத்தால்
பலநாளும் எல்லோரும் நூலகத்தில் கூடி
பார் போற்றும் பரவசமூட்டும் இனிய செய்தியை
பரிவுடன் படித்து பயன் பெறும் இடமாம் நூலகம்

வாசிப்புமாதத்தில் வாசிப்புப்பழக்கத்தை நேசிக்க
வகைவகையான பத்திரிகைகளை வாரந்தோரும் பார்த்து
ஆக்கப்பூர்வமான அரசியல் செய்தியும்

மாணவமாணவியர்களின் கல்வியின் நோக்கமாய்
கரிசனையோடு காலம் தாழ்த்தாமல்
உன்னிப்பராதாயிருந்து உசாத்துணைப்பிரிவிலே
உயர்தர வகுப்பு நூல்களை உற்சாகமாக கற்கின்றனர்
நூலகத்தில் நுண்ணறிவை நுகர்ந்தோர் பலர்
நூல் பெருமையைப் பெற்று வளந்ததே சமூதாயம்
கல்விக்கு உயர்ச்சியூட்டுவதற்கு காரணம் நூலகம்
கற்றறிந்தோர் பெருமையை தாங்கி நிற்பது நூலகம்

வாசிப்பை நேசித்து வளம் பெரும் வாசகர் கூட்டம்
வருடத்தில் ஒருமுறை வாசிப்பு மாதம்
வந்தோரை வாழவைக்கும் மட்டுமா நகரின் பொற்சலனம்
வாழ்க வாழ்க வளர்க வாசிப்பு மாதம்.

ஆக்கம்: க. செல்லத்தம்பி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்வியின் முக்கியத்துவம்

வள்ளுவப் பெருந்தகை கூறியிருந்தாலும் செல்வத்துட் செல்வம் கல்விச் செல்வம். அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலையாயது என்பதே சாலப் பொருந்தும். மனித வாழ்வு மேன்மையுறக் கல்வி மிக இன்றியமையாதது ஆகும்.

ஒரு மனிதன் பூரணத்துவமுள்ளவனாக வருவதற்கு சிறந்த கல்வி அறிவைப் பெற வேண்டும். கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் சிறப்புப் பற்றியும் வள்ளுவப் பெருமான் ஒரு அதிகாரமே வகுத்து வைத்துள்ளார்.

**"கண்ணுடையர் என்பேர் கற்றோர்**

**முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"**

எங்களுக்கு அமைந்துள்ள இரண்டு கண்களும் கண்களாக மதிக்கப்பட வேண்டுமானால் நன்றாகக் கற்க வேண்டும். இல்லா விட்டால் அக்கண்கள் புண்களாகத்தான் கருதப்படும் எனக் கூறியுள்ளார். இன்னுமொரு குறளில்

**"ஒருமைக் கண்தான் கற்ற கல்வி ஒருவற்கு**

**எழுமையும் ஏமாப்பு உடைத்து"**

இதன் மூலம் ஒரு பிறப்பில் நல்ல கல்வி அறிவைப் பெற்றால் அதன் பயன் ஏழு பிறப்பிற்கும் வந்து உதவும் சிறப்புடையது. என்பதனை மிக அழகாக வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். அத்தோடு ஒரு மனிதனுக்கு அழிவில்லாத செல்வம் கல்விச் செல்வம் தான் எனவும் வள்ளுவர் கூறியுள்ளார்.

கல்வியின் முக்கியத்துவத்தையும் சிறப்பினையும் சொல்ல வந்த மகாகவி பாரதியார்.

**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**

**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**

**இன் அரும் கனிச் சோலைகள் அமைத்தல்**

**இனிய நீர்ச் சுனைகள் அமைத்தல்**

**அன்ன யாவினும் புண்ணியம் கோடி — ஆங்கோர்**

**ஏழைக்கு எழுத்தறிவித்தல்**

என்று மிக அழகாக கூறியுள்ளார்.

இவ்வாறான நற் செயல்களில் மேலானது கல்வி சொல்லிக் கொடுத்தலே எனக் கூறியுள்ளார். கல்வியின் சிறப்பினை இன்னுமொரு பாடல் அழகாக விளக்குகின்றது,

**மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்**

**மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்**

**மன்னர்கு தன் தேசம் அல்லால் சிறப்பில்லை — கண்டீர்**

**கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதிலிருந்து ஒரு கல்வி அறிவுடையவன் எங்கு சென்றாலும் அவனுக்கு மதிப்பும் சிறப்பும் உண்டாகும் என்பது தெளிவாகின்றது.

பண்டைக்காலத்தில் நல்ல கல்வியறிவுடைய புலமையாளர்கள் இருந்து அரசவையிலே தங்களது புலமைச் செயலை வெளிக்காட்டி அரசர்கள் மீது புகழ் பாடி பரிசில்கள் பெற்று சிறப்பாக வாழ்ந்து வந்தனர் அரசர்களும் கல்வி புலமை மிக்க புலவர்களுக்கு நல்ல மதிப்புக் கொடுத்து சிறப்புச் செய்தனர். கபிலர், பரணர், நக்கீரர், ஔவையார் போன்ற புலவர்களின் கல்விச் சிறப்பினை நாம் இலக்கியங்களிலே காணலாம்.

இன்றைய நவீன உலகிலே கல்வி மேலும் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. சிறந்த கல்வி அறிவினைப் பெற்ற அறிஞர்களும், விஞ்ஞானிகளும், ஆய்வாளர்களும் புதிய புதிய கண்டு பிடிப்புக்கள் மூலம் பல சாதனைகளை படைத்துள்ளனர். டிஜிட்டல் உலகிலே தொடர்பாடல் மிகச் சுலபமாக இடம் பெறுகின்றது. உலகிலே நடைபெறும் விடயங்களை உடனுக்குடன் அறிய முடிகின்றது. தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல், முகப்புத்தகம் (Face Book,Twitter) எனப்பல தொடர்பாடல் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு சிறந்த கல்வி அறிவே உதவுகின்றது. விஞ்ஞானக் கல்வி மூலம் மாணவர்கள் சிறந்த விஞ்ஞானிகளாக வருவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த கல்வியை நம் முன்னோர் தெய்வமாகவே வழிபட்டனர். கல்வியை சரஸ்வதி, கலை வாணி என வழிபட்டனர். தற்பொழுதும் நவராத்திரி தினத்தில் மூன்று நாட்களை கல்விக்கு ஒதுக்கி அந் நாட்களில் கல்வித்தெய்வத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் உலகறியச் செய்வதை நாம் காணமுடிகின்றது.

கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ள ஒரு திருக்குறளை எடுத்துக் காட்டலாம்.

**‘ விலங்கொடு மக்கள் அனையர்**

**இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்’**

கல்வி அறிவைப் பெறாதவன் விலங்கிற்கு (மிருகத்திற்கு) சமமாவான் என்ற கூற்றிலிருந்து கல்வியின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் நன்கு உணர முடிகின்றது.

**ஆக்கம்: திரு.எஸ்.எதிர்மன்னசிங்கம்.**
**மட்டக்களப்பு தமிழ்ச்சங்கம்.**

**ஒருகோடி கிடைத்தால்**
**என்ன செய்வீர்கள்**

**என்று கேட்டபோது,**

***ஒரு நூலகம் கட்டுவேன்***
**என்று பதிலளித்தாராம்**
**மகாத்மா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு நூலகம் வாழியவே

ஆசியாக் கண்டத்தின் அரும் பெரும் தீவு
பேசுவதற்கு இனிய பெருவள இலங்கை
முடிமன்னன் ஆண்ட முதிய சொத்து
குடிமக்கள் வாழும் குடியரசு நாடு.

வங்கக் கடலால் வாழ்தொழி பரப்ப
சங்கத்தமிழ் தான் இன்று இலங்கும்
கிழக்கெனக் கூறும் கிழக்கு மாகாணத்தில்
வழக்குகள் மாறா வழி வழி நடக்கும்
பட்டணமான பழம் பதியாம் மட்டக்களப்பு.

சித்தர்கள் முனிவர்கள் சீர்பெற ஆய்ந்த நூலுடன்
முத்தமிழ் முனிவன் விபுலானந்தர் யாழ்நூல்
எத்திசையும் இசைபரப்ப இளைஞர் முதியோர்கூட்டம்
தப்பாது சமூகம் தந்து தாழ்ந்து கற்கும் நூலகம்.

மட்டு வாவிமகள் தாலாட்டும் தங்கத் தாயகமாம் – எங்கள்
எட்டுத் திசையும் எழிலுறும் இன்பத் தேனகமாம்
பிட்டும் பலாப்பழமும் கமகமக்கும் அன்புத் தமிழகமாம்
மட்டு மாநகர் மறவர் குலம் வாழும் வனப்புறு மீனகமாம்.

முத்தமிழ் வித்தகன் விபுலானந்தன் தந்த யாழ்நூல் – இங்கு
நித்தமும் உத்தமர் புகழ்பாடும் உன்னத நூலகமாம்
புத்தகங்கள் நிறைந்த நல்ல அறிவு களஞ்சியம்
இத்தனையில் கல்வியைப் பறைசாற்றும் பொக்கிசம்.
பேராறும் பெருங்கடலும் வயல் வளமும் வனப்புறவே
சீராக செல்வம் சேர்க்கும் சிறப்புற மட்டுமாநகரம்
ஏராழும் எழிலகம் ஏடுதந்த வித்தகன் வாழிவாழியவே
காராளும் களனியும் களிப்புறு நூலகம் வாழியவே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாவி அன்னை தாலாட்டும் வண்ணப் பூமியிலே
தாவிச் செல்லும் வாசகரை குதூகலமாய்
காவியமும் அகவல்களும் காதுக்கு இனிமை தரும்
ஓவியமாய் ஒரு கைசிலம்பேந்தி நிற்பாள் கண்ணகியும்.

தேரோடும் திருப்படைத் திருத்தலமும் தெய்வீக அருள் – வளமும்
நீரோடு நிலவளமும் நெல் குவியும் நிறைவளமும்
வேரோடு விருட்சங்கள் விண்ணைத்தொடும் வனவளமும்
பேரோடும் புகழோடும் பேரறிஞர் நூல் நூலகம் வாழியவே.

திராவிடப் பரம்பரையின் திடமான கட்டடக்கலைக் கைவண்ணம்
விராடனன் அரண்மனைபோல் அகழியும் அழகுநிறை நூலகம்
தீராத அறிவுப் பசிபோக்கும் அமுத சுரப்பியாம் எங்கள் மட்டுநூலகம்
ஆராதனை செய்வோம் நாம் பாராத நூல்களைப் பார்த்து பிரிவுறுவோம்.

ஆக்கம்: திரு.வ.சிவசுந்தரம்
இல.492 பெரிய ஊறணி
திருமலை வீதி
மட்டக்களப்பு.



- அறிவு எங்கு சிதறிக்கிடந்தாலும் அது வானத்திற்கும் அப்பால் இருந்தாலும் அதைப் பெறுவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும் – நபிகள் நாயகம்.
- நல்ல புத்தகங்களை வாசியுங்கள் அவைகள் உங்களை உரப்படுத்தவும், உவகைப்படுத்தவும் வல்லவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசித்ததில் நேசித்தது.....

- புத்தகங்களும் நண்பர்களும் குறைவாக இருந்தாலும் நல்லவையாக இருக்கட்டும்.
- புத்தகம் நம் மௌன நண்பன்.
- நமது நன்மையான நண்பர்கள் யார் தெரியுமா? புத்தகங்கள்.
- உன்னத நூல்களின் சிறப்புப் பற்றி சொல்வதைவிட அதனை படிப்பதற்கு ஆர்வத்தை தூண்டுவதே நல்லது.
- ஒரு நல்ல புத்தகத்தை படிக்கும் போது ஒரு புதிய நண்பனை அடைந்தது போல் இருக்கும் அதனை இரண்டாவது முறை படித்தால் பழைய நண்பனை சந்தித்தது போன்று ஆனந்தத்தை கொடுக்கும்.
- கல்வி கற்பதைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்தது.
- நல்ல நண்பனை தேடும்முன் புத்தகங்களைத் தேடிக் கொள்வது நல்லது.
- புத்தகம் என்பது வாய் திறக்காத சொற்பொழிவாளர் மௌனம் வகிக்கும் மகாகவி தனிமையை தூரமாக்கும் நண்பன். மற்றொரு உலகுக்கு அழைத்து செல்லும் சிம்ம சொற்பணம்.
- புத்தகம் இல்லாத வீடு உயிர் இல்லாத உடலை போலாகும்.
- ஒரு நூல் இதயத்தில் இருந்து வெளிவந்திருந்தால் அது மற்ற இதயங்களுக்குள் புகுவதற்கு வழி செய்து கொள்ளும்.
- படிப்பவன் புத்தகத்தை மூலையில் போட்டால் என்றால் அது எழுதியவனில் தவறேயாகுமே தவிர படித்தவனின் தவறு அல்ல.
- கற்ற கல்வி வித்தைகளை மற்றவனுக்கு புகட்டும் இல்லை எனில் கற்றறிந்ததும் விழி இழந்தவனுக்கு சமம்.
- ஆசிரியர்களின் வேலை சிறுவர்களுக்கு பயிற்றுவது அன்று அவர்களுக்குப் படிப்பில் பிரியம் உண்டாக்குவதே.
- ஒரு நல்ல புத்தகத்தின் சிறப்பை எழுதிக்கொண்டே போனால் அதற்குக் கடைசி பக்கமே கிடையாது.
- பட்டு நூல்களால் வண்ணமான ஆடைகளை பெறலாம் பயன்மிகு நூல்களால் திண்ணமான வாழ்வைப் பெறலாம்.
- பல புத்தகங்களைப் படிப்பதனால் ஒரு மனிதன் அறிவாளியாகவே இருக்க வேண்டும் என்பது நிச்சயம் இல்லை. சில புத்தகங்களை நல்ல முறையில் படிப்பதே ஒருவனை அறிவாளியாக்கின்றது.
- கல்வி எங்கு நுழைகின்றதோ அங்கு அறியாமை அகல்கிறது.
- நினைவே அறிவின் தாய்.

திருமதி.நேசராணி
ஹரிதாஸ்
பொது நூலகம்
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வளமாக வாழ உதவும் வாசிப்புப் பழக்கம்

வாசிப்பு மனிதனை முழு மனிதனாக்கும். (Reading Makes a full Man) என்பது ஒரு ஆங்கிலப் பழமொழிகிரமமானவாசிப்புமூலம்சமூக,பொருளாதார,அரசியல்,மருத்துவ,விளையாட்டு,நாட்டுநடப்பு,வெளிநாட்டுச் செய்திகள் போன்ற பல்வேறு துறைகளில் பரந்த அறிவைப் பெறமுடியும். வாசிக்காதவன் மிருகத்திற்குச் சமன். கண்ணிருந்தும் குருடன். அவன் மிருகம் போல் உண்டு உறங்கி, இனப்பெருக்கம் செய்துமடிவான்.

வாசிப்புப் பழக்கம் எமது இரத்தத்துடன் ஊறியதொன்றாகும். சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு குருகுலக் கற்கைநெறி மூலம் மக்கள் அறிவைத் தேடிக்கொண்டனர். கடதாசி இல்லாத காலத்தில் எமது முன்னோர் பனை ஓலையில் எழுதி வாசித்தார்கள். ஆன்மீகத்தை மேம்படுத்தவும் வளமான வாழ்க்கை வாழவும் உதவும் பல நூல்களைத் தந்துள்ளனர். இவ்வாறான நூல்களை வாசித்தோர் சிறந்த ஆன்மீகவாதிகளாகவும்,அறிஞர்களாகவும்,கலைஞர்களாகவும்,விஞ்ஞானிகளாகவும் திகழ்ந்தனர். எமது கலாசாரவிழுமியங்கள் வாசிப்பை ஊக்குவித்தன.

வாசிப்பு ஒரு பொழுதுபோக்குமல்லாது சிறந்த பண்பாகும். அபிவிருத்தியடைந்த மேலைநாடுகளில் வாசிப்புப் பண்பாட்டுவிழுமியங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. எமது நாட்டில் தற்போது வாசிப்புப் பழக்கம் மிகவும் விரைவாக குன்றிவருவது கவலைக்குரியவிடயமாகும். வாசிப்புப் பழக்கமின்மை பிற்காலத்தில் எமதுநாட்டில் சிறந்த இலக்கியவாதிகள்,அறிஞர்கள்,அரசியல்வாதிகள்,கலைஞர்உருவாகுவதில் பாரியதாக்கத்தை ஏற்படுத்தும் நிலைகாணப்படுகிறது. தொலைக்காட்சி,கணனி,கையடக்கத் தொலைபேசி போன்று நவீனதொழில்நுட்பச் சாதனங்கள் மக்களின் முக்கியமாகமானவர்களின் வாசிப்புத் திறனை மளிங்கடித்துவிட்டன. அதிகநேரம் இவற்றில் செலவிடப்படுவதால் வாசிக்கநேரம் கிடைப்பதில்லை. எமது மக்கள் இவ்வாறான நவீனசாதனங்களுக்குபோதைப் பொருளுக்கு அடிமையாதல் போல் அடிமையாகிவிட்டனர். இதன் காரணமாகவே நாட்டில் பல்வேறுசமூகப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. மக்கள் சீரியமுறையில் சிந்திக்க வாசிப்பு உதவுவதால் இவ்வாறான பிரச்சினைகள் குறையும்.

இவ்வாறான நவீன தொழில்நுட்பசாதனங்களைக் கண்டுபிடித்த நாடுகளில் வாசிப்புப் பழக்கம் எமது நாட்டைப்போல் குறையவில்லை. ஐரோப்பா,வடஅமெரிக்கா,யப்பான்,தென்கொரியா போன்ற நாடுகளின் அபிவிருத்திக்கு வாசிப்பும் ஒருமுக்கிய காரணமாகும். பஸ்வண்டி,புகையிரதம்,ஆகாயவிமானம் போன்றவற்றில் பயணிக்கும் போதும், பஸ் நிலையம்,புகையிரத நிலையம்,விமான நிலையம் போன்றவற்றில் பயணத்தை மேற்கொள்ள காத்திருக்கும் போதும் பயணிகள் ஒரு நூலை கையில் வைத்துக் கொண்டு வாசிப்பதையும் பூங்காவில் இருப்போர் வாசித்துக் கொண்டிருப்பதையும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணமுடிகிறது. அங்கே சிறுவயதிலிருந்தே பெற்றோரால் வாசிப்புப் பழக்கம் ஊக்குவிக்கப்படுகிறது. பால்குடிக்கும் குழந்தைகள் கேட்கும் படி பலத்த சத்தத்தில் தாய் ஒரு நூலைவாசிப்பார். நாளடைவில் அவர்கள் பெரியவர்களானதும் அப்பழக்கத்தைக் கைப்பிடிப்பர். மேலும், ஆரம்பப் பாடசாலைகளில் வாசிப்பு ஒரு கட்டாயபாடமாகும். ஒவ்வொரு வகுப்பறைகளிலும் பல்வேறு துறைகளைச் சார்ந்த புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கும். மாணவர்அவர்களின் வயதிக்கேற்ப சரியான நூலைத் தெரிவு செய்ய ஆசிரியர்கள் உதவுவர். இதனால் மாணவர்களின் கற்கும் திறன் அதிகரிக்கும். வாசிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதோடு உடல்,உளநலத்தையும் மேம்படுத்தும். செயல் திறனை அபிவிருத்தி செய்யும். உலகமக்களையும் அவர்களின் மொழி,சமய,பண்பாடுவிழுமியங்களையும்,பொருளாதாரஅபிவிருத்தியையும் அறிய உதவும். இளம் வயதில் வாசிக்கும் திறனை மேம்படுத்துதல் சீவியகாலம் முழுவதும் சிறந்த நூல்களை வாசிக்க ஊக்குவிக்கும்.

சிறந்தபடையாளிகளாகவும், புதுமைகாண்பவர்களாகவும் திகழ வாசிப்பு உதவும். வாசிப்பு அதிகரிக்க அதிகரிக்க சிறந்த சிந்தனைகளும், கருத்துக்களும் மனதில் தோன்றும். இவை பல்வேறு புதிய கண்டு பிடிப்புக்களை மேற்கொள்ள உதவும். இதனால் தான பல்வேறு புதிய கண்டுபிடிப்புக்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் செய்யப்படுகின்றன. புதிய கண்டுபிடிப்பாளர்களைக் கொண்டநாடுகளில் ஒன்றா ஜயப்பான் திகழ்வதற்கு அங்குள்ள வாசிப்புப் பழக்கமே காரணமாகும் என்றால் மிகையாகாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒருவரிடம் சகிப்புத்தன்மை, சாந்தம், சமாதானம் மேலோங்க வாசிப்பு உதவும். ஒரு கிறிஸ்தவர் இஸ்லாமிய சமய நூல்களை வாசிக்கும் போது இஸ்லாமிய சமயக் கோட்பாடுகளை அறியமுடிகிறது. அதே போன்று இஸ்லாமியர் கிறிஸ்துசமயம் போதிக்கும் தன்னைப்போன்று பிறரையும் நேசிக்கும் கருத்தை அறியமுடிகிறது. அதனால்சாதி, சமயகருத்துவேற்றுமைகள், மோதல்கள் ஏற்படுதல் தவிர்க்கபட்டுகிறது .நல்ல நூல்கள் நல்லநண்பர்கள் போன்றவை. பிரச்சினை ஒன்றினால் மனஉளைச்சல் ஏற்பட்ட போது ஒரு நூல் வாசித்தால் மனஉளைச்சல் அகன்று சந்தோசம் மேலோங்கும். ஒருவர் வாசிக்கும் நூல்களைக்கொண்டு அவர் எப்படிப்பட்டவரென ஊகிக்கமுடியும். சிலர் சிறைவாசம் அனுபவிக்கும் போதும் கூட நூல்களை வாசிப்பதை விட்டுவிடுவதில்லை. புத்தகஅலுமாரி ஒன்று உள்ளவீட ஒருபல்கலைக்கழகம் போன்றது.

மாணவர்களுக்கு வாசிப்பு மூளைக்குசே வலைகொடுப்பதால் மூளையின்செ சயல் திறன் அதிகரிக்கும். இதனால் ஞாபகசக்தி ,பகுப்பாய்வு, சிந்திக்கும் திறன், கிரகிக்கும் தன்மை, கற்பனைத் திறன் போன்றவை அதிகரிக்கும். வாசிப்போர் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குச் சளிப்படையாமல் முகம்கொடுப்பர். அவர்கள் கட்டுப்பாடானவாழ்க்கை வாழ்வர். செய்யும் தொழிலை மிகவும் திறமையுடன் செய்வர். எடுக்கும் முடிவுகள் விரைவாகவும் சரியாகவும் இருக்கும் மனநிறைவான சீரிய வாழ்க்கை வாழ்வர். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். முதுமைக் காலத்தில் மூளை சோர்வின்றி செயலாற்றும். இதனால் முதுமையில் ஏற்படும் மனஉளைச்சல்,ஞாபகமறதி,நோய் (Alzheimer's Diseaபோன்றவைஏற்படாதுதடுக்கப்படும். சுய பெருமதிப்பு (Self-esteem) அதிகரிக்கும். இவைஅனைத்தும் மனிதனின் வாழ்க்கை முறையை மாற்றியமைத்து வளமாகவாழ வழிவகுக்கும். இங்குள்ளதனியார்சர்வதேசபாடசாலைகளில் காணப்படுவதால் அவை தற்போது பிரபல்யமடைந்துள்ளன. எமது நாட்டுக் கல்வி முறை விக்டோரியா இராணி காலத்தில் ஆங்கிலேயரால் அறிமுகம் செய்யப்பட்டதொன்றாகும். அவர்கள் இம் முறையை மாற்றி விட்ட போதிலும் இது எமது நாட்டில் தொடர்கிறது. சம்பந்தப்பட்டோர் இம் முறையை மாற்றியமைக்க வேண்டும். பாடசாலைகளில் வாசிப்புபாடத்தைக் கட்டாயபாடமாக அமுல்ப்படுத்தப்படல் வேண்டும். மாணவர்கள் பல்வேறுவிடயங்கள் சம்பந்தமான நூல்களை அவர்களின் வயதுக்கேற்ப வாசிக்க ஊக்குவிக்கவேண்டும். பாடசாலைகள் தோறும் தரமான நூல்களை நிறுவ வேண்டும். தேசியவாசிப்புமாதம் எனக்கூறிக்கொண்டு கவர்ச்சிகரமான பதாதைகளையும் கொடிகளையும் பறக்கவிடுவதாலும், சுவரொட்டிகளை ஒட்டுவதாலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதாலும் எந்தப் பலனும் கிடைப்பதில்லை. மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே வாசிக்கும் கலாசாரத்தை அரசாங்கம் ஊக்குவிக்கும் செயல் திட்டங்களை அமுல்ப்படுத்த வேண்டும். இது கஷ்டமான காரியமென்றாலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் எமது கனவு நனவாகும். மேலை நாடுகளில் பஸ்களில், புகையிரதங்களில், விமானங்களில் வாசித்தல் போன்ற காட்சியை எமது நாட்டிலும் காணமுடியும்.


கலாபூஷணம் செல்லையாதுரையப்பா

யோகாசிகிச்சைநிபுணர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனையிலும் தேவையொரு நூலகம்

நல்ல பல நூல்கள் நாடி
நாளும் நீ கற்று விடு
உள்ளத்துள் உவகை கூடி
உதித்து வரும் அறிவு கோடி
புத்தகமே நல்ல நண்பன்
புரிந்து உடன் நட்பார்க்கு
வித்தகனாய் மாற்றியுனை
விந்தைகளை உனதாக்கும்
அமைதியுள்ள இடம் தேடி
அறிவுதான் வருமுனை நாடி
மனமதனை மாற்றியுனை
மனிதரென ஆக்கிவிடும்
பார்ப்பதெல்லாம் படித்திடவே
பண்டிதனாய் உனை ஆக்கும்
பயம் போக்கி பெரும் சபையில்
பண்பான கேள்வி பூக்கும்
அறிவுப் பெட்டகமாம் நூலகத்தை
அனு தினமும் நீ நாடு
அறிவு வட்டமதை அகலமாக்கி
அகலத்துள் அகலை ஏற்றும்
பள்ளமதை நோக்கி ஓடும்
வெள்ளமென மாறி விடு
நல்ல பல நூல் தேட
நாளும் நூலகம் நீ நாடு
பனுவல் இல்லா இல்லமது
பாழ்படும் பாலையடா
மானுடத்தை மாற்றிவிட
மனையிலும் நூலகம் தேவையடா

திரு.க.முரளிதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நல்ல வாசகன்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாறுபட்ட நிலைகளில் வேறுபட்ட தடங்களில் இருந்து வாசிப்பின் மகத்துவம் சம்பந்தமான கருத்துக்கள், ஆக்கங்கள், போட்டிகள், நூல்களின் கண்காட்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இம்மாதத்திலே 'வாசகன்' யார்? அந்த வாசகன் எப்போது உருவாகின்றான் என்பதை சற்றுச் சிந்திப்போமானால் அரிதான மானிடப்பிறப்பிற்கு வழங்கியுள்ள வரப்பிரசாதங்களில் 'அறிவு' முக்கியமான பிரசாதமாகும். அறிவை பெறும் வழிகளில் ஒன்று வாசிப்பாகும்.

வாசிப்பின் மூலம் ஒரு மனிதன் பூரணமடைகின்றான் என்பது பொன்மொழியாகும். பல பயனுள்ள நூல்களைத் தேடலுடன் வாசிப்பவன் சிறந்த வாசகனாக இருப்பான். பசுமரத்தாணி, தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? வளரும் பயிரை முளையிலே தெரியும் போன்ற பழமொழிகள், அறிஞர் வாக்குகள் குறிப்பிடும் பருவத்தை நோக்கும் போது ஒரு வாசகனை உருவாக்கும் அடித்தளம் சிறப்பாக உறுதியாக இடப்பட்டால் மேலே எழுப்பப்படும் கட்டிடமும் உறுதிமிக்கதாக அமையும்.

தாயின் மடியிலிருந்து பல கேள்விகளைக் கேட்டும் குழந்தை தன்னைச் சுற்றியுள்ள சுற்றாடலில் சுற்றிப் பலவற்றைப் பார்க்கிறது அழகானது. மொழி விருத்தியின் முதற்படியாக கேட்டல், பார்த்தல், வாசித்தல் அமைகின்றது. எந்தக் குழந்தையும் பிறந்தவுடன் நடக்கத் தொடங்குவதில்லை என்பது உண்மையோ அது போன்றே மொழிவிருத்தியும் அமைகின்றது. சிறுவர்களாக இருக்கும் போதே வாசிப்புப் பழக்கத்ததை ஊக்கப்படுத்த வேண்டியவர்கள் பெற்றோர், ஆசிரியர்கள், பெரியோர்கள் ஆவர். அறிஞர் **பெம்பேர்கர்** குறிப்பிடும் போது ஓர் இளம்பிள்ளையின் வளர்ச்சியில் நூல்களின் தாக்கம் திட்டவட்டமானதாகும். அவை ஒருவரின் கற்பனா சக்தியை விரிவடையச் செய்வதோடு, உணர்ச்சிகளை பண்படுத்தி மனதை நெறிப்படுத்துகின்றது. அறிவை வளம்படுத்தி தார்மீகத் துறையில் தீர்வுகாண உதவுகின்றது எனக் கூறுகின்றார்.

சிறுவர் மலரிலிருந்து ஆரம்பித்து ஆத்திசூடி, கொன்றைவேந்தன், சிறிய பொன்மொழிகள், பொது அறிவு, சிறுவர்கதை, சிறுகதை, ஆராய்ச்சிக் கட்டுரைகள், வரலாறு, கவிதை, நகைச்சுவை துணுக்குகள், சமய, சமூக, பொருளாதார, அரசியல், தொழிநுட்பம், இதிகாசங்கள், புராணங்கள், இலக்கியங்கள், இலக்கணங்கள் போன்றவற்றை வயதுக்கேற்ப, தேவைக்கேற்ப வாசித்து படிப்படியாக முன்னேறிச் செல்லும் போது அந்த வாசகன் அறிவாளியாக, எழுத்தாளனாக, சாதனையாளனாக அத்துடன் எதிர்காலத்தில் சிறந்த மனிதப்பண்புள்ளவனாக திகழ்கின்றான்.

அறியாமை அகன்று அறிவை பெறுவதற்கான உற்றதுணையாக நண்பனாக நல்வழிகாட்டியாக நல்ல நூல்கள் பல உள்ளன.

அடுத்து சமூகமேம்பாட்டில் வாசிப்பதற்கு துணைபுரியும் சிறந்த வாசகனை உருவாக்குவதில் நூலகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார் ஒரு நூல் நிலைய கதவு திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலைக் கதவு மூடப்படுகின்றது. துரச்சிக் கவிஞன் பாரதியோ பயிற்றிப்பல கல்விதந்து இந்தப் பாரினை உயர்த்த வேண்டும் என்கிறார்.

வித்துக்களாக நூலகங்களே காணப்படுகின்றன. பாடசாலை நூலகங்கள், பொது நூலகங்கள் களமாகக் காணப்படுகின்றன. சிறுவர்பகுதி, பத்திரிகை, சஞ்சிகைப்பகுதி, உசாத்துணைப்பகுதி, இரவல் வழங்கும் பகுதி என பகுக்கப்பட்டு நூலக சேவை வழங்கப்படுகின்றது. இதனை சரியாகப் பயன்படுத்தும் போது வாசிப்பு என்னும் பழக்கம் வழக்கமாகி விடுகின்றது. பணக் செலவு இன்றிய பயனுள்ள பொழுது போக்காகவும் அமைகின்றது.

அத்துடன் நூல் நிலையங்கள் வாசகர் வட்டங்களை சிறுவர், மாணவர்கள், இளைஞர், ஆசிரியர் அறிவும் அனுபவமுள்ள பெரியோரை கொண்டதாக அமைக்கப்பட்டு நூலகத்தின் சிறப்புக்கள், கதை நிகழ்ச்சிகள், போட்டி நிகழ்வு வாச கள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கி ஊக்குவித்தல், கையெழுத்துப் பிரதிகள், வீதிநாடகங்கள் என்பன செயற்படுத்தப்படும் வாசிப்புப் பழக்கம் குறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


கொண்டு செல்கின்றது என்னும் நிலை மாறி வாசிப்பே உயிர்மூச்சு என்னும் நிலை ஏற்படுவதற்கு சமூகத்தின் பங்களிப்பு மிக மிக முக்கியமானதாகும்.

பிறந்தநாள் வரும்போது விலையுயர்ந்த ஆடைகள், விருந்துபசாரங்கள் என செலவழிக்கும் பணத்தில் ஒரு பயனுள்ள நூலை பரிசளிக்கும் பழக்கத்தை வீட்டிற்கு வீடு வழக்கப்படுத்தும் போது ஒரு சிறு நூலகமே வீட்டிலும் உருவாகிவிடும். குழந்தை, குடும்பம், பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகம், சமூகம் என்ற ரீதியில் தேடலுடலான வாசிப்பு படிப்படியாக முன்னேற்றப் பாதையில் செலுத்தி எதிர்காலத்தில் ஒரு நல்ல பிரஜையை நாட்டிற்கு வழங்கிவிடும். இன்றைய சிறுகுழந்தை வாசகன் நாளைய புத்திசாலியாக நல்வழிகாட்டியாக, சாதனையாளனாக நல்ல மனிதனாக திகழ்வான் என்பது திண்ணமாகும்.

**‘கற்க கசடற கற்றவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக’**

சுந்தரமதி வேதநாயகம்
ஆசிரியை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெகுசன தொடர்பாடலில் நூலக தகவல் அபிவிருத்தி

சமூகத்தின் எழுத்தாவணங்களை எண்ணிமயப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை ஊக்குவிப்பதோடு தகவல் வளங்ளையும் அறிவுச்சேகரங்களையும் ஒழுங்குபடுத்தி அனைவருக்கும் கிடைக்கச் செய்து வரும் இலாப நோக்கற்ற தன்னார்வ முயற்சி.

நூலகசேவை தொடர்பாடல் என்பது ஓரிடத்திலிருந்து இன்னொரு மூலத்திற்குத் தகவலைக் கடத்தலாபம் இது பொதுவாக மொழியினுடாகவே நடைபெறுகிறது. அதனடிப்படையில் மனிதன் ஒரு தொடர்பாடும் விலங்கு மனிதன் எப்போதும் குழுக்களாவே வாழவிரும்புகிறான். தனியாகவாழ விரும்பவில்லை. குழுவாக வாழும் போது அங்கத்தவர்களிடையேயும் குழுக்களுக்கிடையேயும் தொடர்பாடல் செய்ய ஒருமுறைமை தேவைப்பட்டதன் காரணமாக தொடர்பாடல் முறை உதயமானது. தொடர்பாடல் என்னும் சொல்லானது பொதுமைப்படுத்தல் அல்லது ஐக்கியப்படுத்தல் என்ற சொல்லிருந்து தோற்றம் பெற்றது. என்பது அனுப்புதல் அல்லது பரப்புதல் என்று அகராதி விளக்கமளிக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு குறித்த ஓர் எண்ணத்தை செய்தியை அனுப்புதல் பரப்புதல் செயற்பாடானது தொர்பாடல் எனப்படுகிறது. எண்ணத்தை அல்லது செய்தியை அனுப்புவதற்கோ அல்லது பரப்புவதற்கோ முக்கியமான ஓர் ஊடகம் ஒன்று அவசியமாகிறது. தொடர்பாடலுக்குத் தேவையான பிரதான ஊடகங்களாக மொழி சைகை குறியீடுகள் ஒளி சித்திரம் பேச்சு என்பன காணப்படுகின்றன.

தொடர்பாடலின் முக்கியத்துவம் எத்தகையது என நோக்கும் போதுபல்லேறு கருத்துக்களை முன்வைக்கலாம்

1 கருத்துக்களை ஒருவர் மற்றவருடன் பகிர்ந்து கொள்வதற்கு
2 தகவல்களை பரிமாற்றிக் கொள்ள
3 உணர்ச்சிகளை வெளிப்படுத்திகொள்வதற்கு

என்பவற்றை கூறலாம்.

தொடர்பாடல் தொடர்பாக எச்.யு எல்லின். ஓர்த் என்பவர் "தொடர்பாடல் என்பது நெகிழும் தன்மை வாய்ந்த ஒரு கருத்துப்படிவம் ஆகும். பொதுவாக இரண்டு இடங்களில் ஒருவகை ஆற்றல் இணைக்குமானால் அங்கு தொடர்பாடல் ஏற்படுகிறது" என்கிறார். இதனடிப்படையில் தொடர்பாடல் வெகுசனத் தொடர்பாடல் என்பதற்கு இடையே பாரிய இடைவெளி காணப்பட்டாலும் வெகுசனத் தொடர்பாடல் என்பதற்கு வழங்கப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட செய்திப் பரிமாற்றல் முறைமை என வரையறை வழங்கலாம். இவற்றிற்கு உதாரணமாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி, திரைப்படம், இணையம் என்று பலவற்றைக் குறிப்பிடலாம். இவற்றினை அச்சு ஊடகங்கள் இலத்திரணியல் ஊடகங்கள் எனவும் வேறுபடுத்தி நோக்கப்படுகின்றது.

நூலக தகவல் அபிவிருத்தி நூலகம் இலத்தீன் மொழியின் [Liber] என்ற சொல்லுக்கு "நூற்தொகுதி" என்னும் பொருளாகும். இச்சொல் காலப்போக்கில் மருவி பின்னர் சீனமொழியில் ஒழித்து வைத்திருக்கும் இடம் பயன்படுத்தப்பட்டு ஆங்கில பதத்தில் லைப்பிரரி என உச்சரித்து கொண்டு உலகம் புராகவும் பேசப்படுகிறது. இதனை ஒகஸ்டின் என்ற மேதை ஆங்கிலத்தில் பின்வமாறு கூறுகிறார்

"This world is great book of Which thay who never stir from Home read onlya page"

நூலக வரலாறு ஆய்வானது கி.பி.5000ஆண்டுகளுக்கு முன்னர் பாபிவோண்யர்கன் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக களி மண்ணால் செய்யப்பட்ட சிறிய தட்டுக்களைப்பயன்படுத்தினார்கள். அத்துடன் பிரித்தானிய புதைபொருள் ஆரய்ச்சியாளர்கள் ஈராக்கிலுள்ள "Ninch"என்னுமிடத்தில் அகழ்வாராச்சியின் போது ஆயிரத்திற்கும் அதிகமான புத்தகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 11ம் நூற்றாண்டில் பழமைவாய்ந்த அலெக்ஸஸாண்டியா வாசிகசாலையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எழுதுவதற்கு பயன்படுத்தக் கூடிய"சைப்பிரஸ்"தாவரத்தினால் இருந்தும் மிருகங்களின் தோலிலும் எழுத எகிப்தியர்களாலேயே உரோம நகரங்களில் மக்கள் பாவனையில் இருந்தது. கி.பி.1440 ஆம் ஆண்டளவில் ஜோணி குட்டான்பேக் காகிதத்தில் அச்சிடும் முறையை கண்டுபிடித்ததால் எகிப்து சீனா போன்ற நாடுகளில் உற்பத்தி தொடர்பான நூலகங்களில் பங்களிப்பு பாராட்டத்தக்கதாக அமைந்தன. சீனாவில் இருந்து காகித பாவனையானது அரேபியா ஊடாக மேற்கு நாடுகளுக்கு பரவியது. புத்தகங்களை மக்கள் சொந்தமானதாக வைத்திருப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

நூலகம் தோற்றம் பெற்று இன்று பரிணாம வளர்ச்சியடைவதற்கு பிறிமன்ட் நைடர் முக்கியமுன்னோடியாக திகழ்கின்றனர் இவற்றின் பரிமான அடத்த கட்டமாக கி.பி1876இல் பில்டொல்பியா அமெரிக்கமாநிலத்தில் நூலகசங்கத்தை [library Association in Amarica] பௌகர் மெல்லில்டுயீ'கார்லசுகட்டார் ஆகியோரினால் உருவாக்கப்பட்டது. இதன் நூலக சேவையில் பின்வரும் சிறப்பம்சங்கள் காணக்கூடியதாக இருந்தது.

1. ஓவியங்களின் கை வண்ணங்கள்
2. கவிஞர்களின் கைப்படைப்புகள்
3. கதாசிரியர்களின் கற்பனைகள்
4. அறிவு மொழிப்போதனைகள்

அயர்லாந்து எழுத்தாளர்கள் கவிஞர்கள் ஓவியர்களுக்கு அந்த அரசு வருமான வரியை நீக்கியதால் நூற்தொகுதிகளின் பாரிய வளர்ச்சி வீதத்தை எய்தினார்கள். இரண்டாம் ஷகமீன் மன்னர் காலத்தில் அறிவியல்துறை கவிதை கட்டுரை அலங்கார எழுத்தாணிக்கு கூடிய பங்களிப்பு செய்ததினால் அதிகமான பெண் எழுத்தாளர்கள் சோவியத் நாட்டில் தோன்றினார்கள். 1731 ஆம் ஆண்டு ஜெண்டில் மேன்ஷ் மெகனில் என்பவரால் வார மாத இதழ்களை உருவாக்கியதால் "மெகனின்' என்னும் தினசரிகளை 'டெய்லீஸ்' நாமம் சூட்டப்பட்டது. கி.பி.1400 எகிபிதை அண்டரமேஸ் மன்னர் வீட்டில் 36000 புத்தகங்களைக் கொண்ட நூல் நிலையம் இருந்தது போன்றன வரலாற்றுப் பதிவுகளாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இன்று உலகம் வெகு வேகமாக மாறிவருகின்ற நிலையில் அதன் வேகத்தோடு ஈடுகொடுக்ககூடியவாறு ஊடங்களும் மாறிவருகின்றது. ஆனால் பலவேறுபட்ட தகவல்கள் நிகழ்வுகளையும் கருத்துக்களையும் இலகுவாகவும் விரைவாகவும் மற்றவர்களுக்கு பதியவைக்கக் கூடியதாக அமைதல் வேண்டும். என்ற அடிப்படையில் பல்வேறுபட்ட கற்கைநெறிகள் உள்வாங்கப்படுகிறது. இதனுடைய அடுத்தகட்டமாக ஆராய்ச்சி நூலகசங்கம், நூலக ஒத்தழைப்புகள் போன்றன விரிவாக்கம் பெற்றுள்ளன. இன்று பவ்வேறு நாடுகளின் பல்கலைகழகங்களில் நூலக அபிவிருத்தி சார்ந்த துறைகள் விரிவாக்கம் பெற்றுள்ளன.

மக்களின் அன்றாட அறிவுத்தேடலுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி வெளியீடுகள் வழிகாட்டலாக அமைந்துள்ளன. இவற்றினை நெறிப்படுத்தி அறிவுத்தேடலுக்கான வளர்ச்சி அடைவை வழங்கக் கூடிய நிறுவனமாக நூலகம் விளங்குகின்றமை நிதர்சனமான உண்மை. இன்று உலகம் நவீன விஞ்ஞான சாதனங்களில் பின் சென்று கொண்டு இருக்கையில் நூலகம் தனக்கென தனித்துவத்தைபெற்றும் விஞ்ஞான தொழில்நுட்பத்தை உள்வாங்கிக் கொண்டு செயற்படுகிறது.

நூல்களின் களஞ்சியமாக இருக்கின்ற நூலகம் வாசகர்களின் நுகர்விடம். நூல்களையும் வாசகர்களையும் இணைக்கும் பாலம் நூலகம். நூல் வாசகருக்கு நூலாசிரியரின் கருத்தோட்டத்தை கடத்தக்கூடிய செயற்பாட்டு வடிவம். இன்று பல்வேறுபட்ட நவீன தகவல்அறியும் சாதனம் வந்தாலும் அச்சுருவாக்கம் பெற்ற நூல்களுக்கு தனித்துவம் உண்டு. நூல்கள் பல்வேறுபட்ட சமூகபொருளாதார அரசியல் கட்டமைப்புக்கு உட்பட்ட வாசகர்களினால் உள் வாங்கப்படுவதனால் அவற்றிற்கான வெளிப்பாடு அல்லது வெளியீடு வேறுபட்டதாக காணப்படும். இது ஒரு புதிய சமூகபொருளாதார அரசியல் சித்தாந்தத்தை உருவாக்கும் தன்மை பொருந்தியது. உதாரணமாக உலக அரசியல் வரலாற்றை ஆதாரமாக காட்டலாம். சோசலிசம் என்ற விடயம் ஜேர்மனில் வாழ்ந்த கால்மாக்ஸ் என்பவரால் உதயமாகி இருப்பினும் கால்மாக்ஸின் சிந்தனையை அடியேட்டில் இருந்து வந்த லெனின்மாவொசேதுங் பிடல்கஸ்ரோ போன்றோர் தங்களின் காலம் நாடு மக்கள் சமூகம் பொரளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


அரசியல் கட்டமைப்பு என்பவற்றிற்கு உட்பட்டு புதிய சோசலிச கம்யூனிசிய சித்தாந்தங்களை உருவாக்கி இருந்தனர் இவை வரலாற்று அரசியல் பதிவு.

நூலகங்களின் தேவை வாசிப்பின் அவசியம் உணரப்பட்ட இக்கால சமூக சூழலில் நூலங்களின் புத்துருவாக்கம் அத்தியாவசியமான ஓர்விடயம் சமூகம் அரசு சர்வதேச ஸ்தாபனங்கள் நூலகங்களின் தேவையையும் வாசிப்பின் பூரணத்துவத்தையும் உணர்த்தக்கூடிய வகையில் சர்வதேச ரீதியில் வாசிப்பு மாதம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வாசிப்பின் மகத்துவத்தை தாங்கி நிற்கும் ஒக்டோபர் மாதம் நாளைய எதிர்கால இளைய சமூகத்தின் வளர்ச்சியின் குறிகாட்டியாகவும் சிந்தனை வளர்ச்சியின் புத்துருவாக்கமாகவும் திகழ வேண்டும் என்பதே அனைவரதும் அவாவாகவுள்ளது என்பதோடு வெகுஜன தொடர்பாடலில் நூலக சேவை வளர்ச்சியடைய வேண்டும்.

சரண்யா கேசவராஜா
நாவற்குடா.

**தெரிந்து கொள்வோம்**

- உலகில் போதைப் பொருட்களைப் பாவிக்க சட்டத்தின் மூலம் அனுமதித்துள்ள நாடு எது?
  உருகுவே
- அமெரிக்காவின் உலகப் புகழ் பெற்ற சுதந்திர சிலையை செதுக்கி அந் நாட்டுக்கு வழங்கிய சிற்பி யார்?
  பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஃப்ரெட்ரிக் ஒகஸ்டே பார்த்தோல்டி.
- 'கங்கணம் ஸ்டைல்' என்ற பாடல் மூலம் உலகப் புகழ் பெற்றவர் யார்? அவர் எந்த நாட்டவர்?
  தென் கொரியாவைச் சேர்ந்த 'ஷை' என அழைக்கப்படும் பார்க் ஜே சாங் என்பவர்.
- ஒலிம்பிக் பந்தயங்களில் பெண்கள் முதன் முறையாகப் பங்கேற்ற ஆண்டு 1912




- நல்ல நூலைப் போன்ற சிறந்த நண்பன் வேறில்லை.
- நல்ல நூல்நிலையம் ஒன்றின் பாதிப் பகுதியை திரட்டினால் ஒரு புத்தகம் எழுத முடியும் - ஜான்சன்
- நல்ல நூல்களைப் படிப்பது தலை சிறந்த மனிதருடன் உரையாடுவதைப் போன்றது.
- நல்ல புத்தகம் காலம் என்னும் பெருங்கடலில் எழுதிய கலங்கரை விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாம் எங்கே போகின்றோம்?

நாகரீகத்தில் முன்னேற்றமடைந்து விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்று எல்லாவற்றிலும் உயர்ந்து நிற்கும் மனித குலம் பண்பிலும் சமூக அக்கறையிலும் வேகமாகப் பின்னோக்கிப் போவது யாவருக்கும் வேதனை தரும் விடயம்தான். இது பற்றித் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம். உயர்கல்வி, தொழிற்கல்வி எனப் போட்டி போட்டுக் கற்கும் எம்பிள்ளைகள் உயர்பதவி பெற வேண்டும். என எதிர்பார்க்கும் நாம் அவர்கள் நேர்மையான, அன்பான, சமூக அக்கறையுள்ளவர்களாக வாழ வேண்டுமென்று நினைப்பதுமில்லை. அவை பற்றி அறிவுரை கூறி வளர்க்கத் தவறிவிடுகின்றோம். பிள்ளைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் பெற்றோர்களாக வாழவும் முயற்சி எடுப்பதில்லை. பெற்றோர் மட்டுமல்லாது பாடசாலைகளும் தொண்டு நிறுவனங்களும் ஒழுக்கம், பண்பாடு பற்றிய விடயங்களில் அதிக அக்கறை எடுக்க வேண்டிய அவசியம் உணரப்படுகின்றது.

ஒவ்வொரு மனிதனும் "நான்""என் குடும்பம்" எனச் சிறு சிறுவட்டங்களுக்குள் எமது சகல நடவடிக்கைகளையும் சுருக்கி விட்டோம். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி போன்றவையும் திருக்குறளும் காட்டி வந்த பாதைகள் மூடப்பட்டு விட்டன. பாடப்புத்தகத்தில் அவற்றைப் படித்தாலும் புள்ளிகளை அதிகரிக்கும் நோக்கத்துடனே படிக்கிறார்களே தவிர வாழ்க்கையில் நீதி, தர்மம் என்பவற்றில் நம்பிக்கை கொள்ளவும் எவ்வித இடர்கள் வந்தபோதும் மனம் தளராமல் நல்ல கொள்கைகளுடன் வாழும் வாழ்வே உயர்வானது என்ற உறுதியுடன் வாழ முயற்சிக்கின்றோமா?
நல்லவனாகவும் வல்லவனாகவும் வாழாமல் நல்லவனாகவும் வல்லவனாகவும் நடித்துப் பிறரை ஏமாற்றவும் புகழுக்காக ஏங்கவும், அது கிடைக்காத சந்தர்ப்பத்தில் மனம் புழுங்கிச் சோர்ந்து விடுகின்றோமே.

உலகில் யாவரும் சமம் எனக் கூறப்பட்டாலும் ஒருவரோடு உரையாடும் போது அவரது கல்வி, பதவி, தகுதி என்பவற்றை மனதில் கொண்டே அவருடன் உரையாடுகின்றோம். எனவே நாம் மனிதனை மதிப்பதை விட பதவி பணத்தையே உயர்வாக எடை போடுகின்றோம்.

எச்செயலை செய்வது பாவம் என்று விலக்கப்பட்டதோ அச்செயலை இரகசியமாகச் செய்வது புத்திசாலித்தனம் என்று நினைக்கின்றோம். அதன் வினைபயன் எம்மைப் பழிவாங்கும் என்பதை உணர மறுக்கின்றோம். இதுவே திருவள்ளுவர் தெளிவாகச் சொல்கிறார்.

"எனைப்பகை உற்றாரும் உய்வன் வினைப்பகை வீயாது அடியுறைந்தற்று" எப்படியாவது வாழலாம் என்ற கருத்திலிருந்து மாறுபட்டு இப்படித்தான் வாழ வேண்டும். என்ற நல்ல விழுமியங்களுடன் நல்ல கொள்கைகளுடனும் வாழ்ந்தால் இவ்வுலகம் அமைதியான சொர்க்கமாகிவிடும்.

தினமும் நீராடி உடலைத் தூய்மைப்படுத்த சவர்க்காரம் உதவுவது போல எம் உள்ளத்தில் எழும் தவறான எண்ணங்கள் நல்ல நூல்களைப் படிப்பதால் அகன்று விடுகின்றன. தினமும் ஒரு நல்ல நூலின் ஒரு பகுதியையாவது வாசிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடித்தால் நம்மையறியாமலே நாம் பல துறைகளிலும் பரந்த அறிவைப் பெறக்கூடியதாக இருக்கும்.

எனவே எமது குழந்தைகளுக்கும் சிறுவயதிலிருந்தே நல்ல நூல்களை வாசிக்கும் ஆர்வத்தை கூட்டுவதும் அவர்களை நன்நெறியில் உலகிற்கு உபயோகமான மனதனாக வாழ வைப்பதும் நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

ஒரு நூலகத்தைத் திறப்பதன் மூலம் பல சிறைச்சாலைகளை மூடக்கூடியதாக இருக்கும். தற்போது சிறைச்சாலையில் உள்ளவர்களின் தொகைதான் அதிகரித்துக் கொண்டு வருவதும் நூலகத்தில் சேர்ந்து பயன் பெறுவோர் எண்ணிக்கை குறைந்து கொண்டு போவதும் வேதனை தரும் விடயமாக இருக்கின்றது.

எனவே எமது சமூகம் மனிதத்தன்மையுடன் சமூகத்துடன் இணைந்து நற்பிரசையாக வாழ வேண்டுமாயின் ஒவ்வொரு வீட்டாரும் நூல் நிலைய அங்கத்துவம் பெற்று அறிவையும் பண்பையும் மேம்படுத்துவது அவசியமாகும்.

திருமதி. கலா மகேந்திரராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## எங்கள் நூலகம்

மட்டு நகர் எங்கள் தாயகமாம்
எத் திசையும் புகழ் பரப்பும் தேனகமாம்
மட்டு நகர் வாவியிலே
மீனினம் பாடிடுமாம்

வாவியின் அருகினிலே
அறிவொளி வீசும்
எங்கள் பொது நூலகமாம்

ஏழை பணக்காரன் பேதமின்றி
ஏற்றதாழ்வு பார்ப்பதில்லை எங்கள் நூலகம்

தெளிவான அறிவாற்றல் உள்ளோரை
தன்னகத்தே இழுப்பதே எங்கள் நூலகம்
முடிவில்லா கல்வியின் முறைசார் தோட்டம்

அமைதியான
அடிமைத் தனத்தை
விட, ஆபத்தான
சுதந்திரமே
மேலானது.

~ ரூசோ ~

அமைதியின் மூலமே
முட்டாள்தனத்தை
புரிந்து
கொள்ளலாம்!

~ பேகலியட் ~

**சிகரெட் புகையுங்கள்,**
**மது அருந்துங்கள்,**
**பான் மசாலா சாப்பிடுங்கள்,**
**பரிசுகளை வெல்லுங்கள்!**

முதல் பரிசு : மரணம்
இரண்டாம் பரிசு : புற்று நோய்
மூன்றாம் பரிசு : காசநோய், பக்கவாதம்
ஆறுதல் பரிசு : பண நஷ்டம்
பரிசளிப்பவர் : எமதர்மராஜா


பரிசுகள் 100% உத்திரவாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பின் பயன்பாடு

சிறுவர் தினம், ஆசிரியர் தினம், முதியோர் தினம், இளைஞர் தினம் என்றேல்லாம் பல தரப்பட்ட தினங்களின் முக்கியம் குறித்து விசேட நிகழ்வுகள் கொண்டாட்டங்கள் நடைபெறுவதைக் காண்கின்றோம். இவற்றை விட வாசிப்பு மாதம் என்னும் நிகழ்வு மிக முக்கியம் பெறுகிறது என்பதைக் கருத்தில் கொள்வது சிந்திக்கத் தக்கதாகும். ஏனைய நிகழ்வுகளுக்கு ஒரே ஒருநாள் சிறப்பு வழங்கப் பெற வாசிப்பு நிகழ்ச்சி வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஒரு மாத காலம்ஒதுக்கப்படுகிறது. ஏன் இவ்வளவு நீண்டகால செயற்பாட்டு நிகழ்ச்சி என்பதை எண்ணிப் பார்ப்பது மிகப் பொருத்தமாகும். சமூக வளர்ச்சியில் வாசிப்பு மிக முக்கிய இடத்தை வசிக்கிறது என்பதை நாம் சிந்திப்பதால் பல கருத்துக்களை உளங்கொள்ள முடியும். எழுத்தறிவு, அதை வாசித்துக் கருத்தினை அறியும் அறிவு என்பன மிக முக்கியமானவை.



நம்மைச் சுற்றிலும் பல்லாயிரம் புத்தகங்கள், அறிவிப்புகள், விளம்பரங்கள், கல்வெட்டுகள் இன்னபிற கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தாகி நிற்கின்றன. இவற்றையெல்லாம் வாசிப்பின் மூலமே நாம்எடைபோடுகின்றோம். பயன்பாடுகளை உள்ளங் கொள்ளுகின்றோம். நம் முன்னோர்கள் அறிவுக் கருவூலங்களை எழுத்தில் பொதிந்து எண்ணத்தை விரித்து நூல்கள், ஏடுகள், சாசனங்கள், கற்றூண்கள் வடிவில் அமைந்து நமக்கு உரித்தாக்கி வைத்துள்ளார்கள். அவை நமக்கு அழியாத வரலாற்றுக் களஞ்சியங்களாக இன்றும் இருக்கின்றன. இனிமேலும் இருக்கப் போகின்றன.

இத்தகைய வரலாற்றுச் சாசனங்களின் உள்ளடக்கங்களை நாம் படித்தால் தான் பயன் பெறலாம். அதனால் வாசிப்பு ஆற்றல் மிக வேண்டத்தக்க இடத்தைப் பெறுகிறது.


மனித சமூதாயம் கடந்த கால, தற்கால, எதிர்கால நூற்படைப்புகளைப் பேணவும், படித்துப் பயன் பெறவும், பிறர் அறியும் படியாக உரத்துப் படிக்கவும் வாசிப்பு ஆற்றல் அழகுற வளர்க்கப் படவேண்டும். எழுத்துத்துறை, வாசிப்புத்துறை, மிக முன்னேனற்றம் கண்டுள்ள தற்காலத்திலும் வாசிப்பு ஆற்றல் முழுமை அடையவில்லை என்றே கருதப்படுகிறது. அதனை வளர்க்க அரசுகளும் அறிவியல் மன்றங்களும் நூலகங்களும் மிகமுயன்று வருவதை நாம் அறிவோம். எனினும் சகல ஆர்வலர் கழகங்களும் வாசிப்பு ஆற்றல் பரந்து விரிந்து பரிமளிக்கப் பாடுபடல் வேண்டும். மூலை முடுக்கெல்லாம் நூல் நிலையங்களில் அப்பழுக்கற்ற ஆட்சி அரசேர்க்க வேண்டும். இதற்கமைய அரச அமைப்புகளும், நிறுவனங்களும் அறிஞர்களும் மிக முயன்று உழைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நூலகம் ஒரு பொக்கிஷம்

செல்வி:றெம்சி லோகநாயகம்
மட்/வின்சன் மகளிர் உயர்தர
பாடசாலை




நூல் பலவே பொக்கிஷமாம்
நூதனமாய் உன்னிடத்தில்
நூறுகளாய் வைத்திருக்கும்
நூலகமே நீ பொக்கிஷமே

புத்தகசாலை ஒன்றின்
புதுக்கதவு திறக்குமாம் - அன்று
சிறைச்சாலை ஒன்று – சிதைந்து
சின்னா பின்னமாகுமாம்.

உன்னிடத்தில் அறிவு தனை
ஊற்றாய் எமக்களித்திட – உள்ளே
பனுவல்கள் பலவாம்
பழையதும், புதியதுமாய்

பல்கருத்தை எமக்கூட்டிடப்
படுவாய் நாளும் பாடுகள்
வாழ்வில் சிறப்பாய் நாம் வாழ
வான் போல் எமைக் காத்திடுவாய்

பாலர் முதல் பாவலர் வரை
பார்த்தவன் நீயல்லோ - இத்தரணியது
போற்றும் புகழ்மிகு அவர்களோ
உன் உடலின் நிழலேயாம்

அமைதி தனை நாமடைய
அத்தனை சக்தியும் உன்னிடத்தில்
இத்தனை நன்மை உன்னிடத்தில்
இன்புற்று நாம் வாழ்ந்திடவே

அறிவுப் பசியது தீர
அலைந்தோடி வந்தோமே
அணைத் தெடுப்பாய் பாலர் எமை
அகிலம் போற்றச் செய்திடுவாய்

பொக்கிஷம் நிறை பொக்கிஷமே
பொய்மையில்லாப் பொக்கிஷமே
அறிவு எனும் பொக்கிஷத்தை
அன்பாய் அளிப்பாய் நூலகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### சிந்தனையாளர்களின் சில கருத்துக்களை முன்வைப்போம்

- நூலகம் எல்லாச் செயல்களையும் விட பெரியது நாம் விரும்பும் பொருட்கள் எதனையும் அதனோடுஒப்பிட முடியாது. **(B.Bury)**
- மனிதன் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு படைப்பு நூல்கள் அவர் தீர்மானித்த போது எதுவும் நீடித்து நிலைப்பதில்லை. மாளிகைகள் சரியலாம் தேசங்கள் அழியலாம். நாகரீகங்கள் கூட வீழ்ச்சியடைவர் பல இனங்களும் அழிந்து போகலாம். ஆனால் நூல்கள் நீடித்து வாழ்வடையும். **(C.Day)**
- மூடிக்கிடக்கும் நூலகங்களே எனக்கு அதிய சோகத்தைத் தருபவை. **(B.Tuchman)**
- வாசிக்கத் தெரிந்திருத்தல் ஒரு பெரிய விடயமல்ல எதனை வாசிக்க வேண்டுமென்பதே முக்கியமானது. **(J.Ellul)**
- நூலானது சிறந்த தோழன் சரியாக தெரிவு செய்யப்பட்ட நூல் வாழ்க்கை நீடித்த தோழன் **(D.Jerood)**
- நாகரிகம்வேண்டுமாயின் நாடுகள் நூல்களுக்கு ஏராளம் செலவிட வேண்டும் **(E.Hubbard)**



மத்திய தரைக்கடலின் ‘சாவி’ என அழைக்கப்படுவது எது?

ஜிப்ரால்டர் நீரிணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தினமும் திறக்கும் நேரம்
காலை 8.30

நாற்பது வயதில் தான்
முதன் முதலாய்
அவன்
நூலகம் செல்கின்றான்........

இதுவரை
போகாத ஒரு இடம்
போய் வரலாம் என.......

அங்கே
இவ்வளவு
புத்தகங்கள்
இருக்கின்றனவா......

இவற்றை எல்லாம்
அவன் படிக்காமல்
இழந்து விட்டானா?

அவனது
மனச்சாட்சி அவனை
மெதுவாக
குறை கூற
தொடங்கியது.........

அந்த
புத்தகங்கள்
அவனோடு
உரையாடுவது போல்
அவனுக்கு தோன்றியது........

உடல் வளைந்த
படம் தாங்கிய யோகாசன புத்தகம்
‘ஏய் மனிதா என்னை
படிக்காமல்
ஏன் தொலைத்தாய்
இளமையை என்றது’

அங்கே
ஆப்ரகாம் லிங்கனின்
சுயசரிதம்
‘வாழ்வின் தோல்வியின்
முறையடிப்பை சொல்லித்தர
நான் இருந்த போதும்
ஏனை படிக்காத நீ

ஏமாந்த மனிதனே
என
ஏளனம் செய்தது.....

கலைந்து போன வாழ்வை
காணத்தெரியாத கனவை
நான் கற்றுத்தர
காத்திருந்தேன்
நீ ஏன் தள்ளி சென்றாய்
என்றது
அக்கினி சிறகுகள்.......

Encyclopedia அடுக்குகள்
அந்த
கிணற்று தவளையை பார்த்து
‘ஏன் நீ
உலகை காண மறந்தாய்’
என்பதாய்
பரிகாசித்தன.......

அதோ
அந்த கிராமிய வாசம் கலந்த
நூல்கள்
‘அடடா சொந்த ஊரின்
மண்வாசனையை நுகராத
மடையன் நீயடா’
என்று உரைத்தன.......

‘ராஜ ராஜன் உருவிய
வாளும்
கரிகாலனின் திண்ணிய
தோளும்
அறியாத மூடனே
நீயும்
மனிதனா’
என்றன நாவல்கள்.......

‘அந்த நீள் கடலில்
அமீரோடும் கண்டிய
தேவரோடும்
கடலோடும் இளைய
பல்லவனின்
கம்பீரமுணர்த்த
அவன் சாகச சமர்காட்ட
ராஜ தந்திரம் உணர்த்த
உன்னையும்
ஏற்றிச் செல்ல
நான் பாய் விரித்து
காத்திருந்தேனே
நீயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்தாள் விரித்து
நூலாட மறந்தாய்
மூடனே'
என்பதாய் சிரித்தது
கடல் புறா.........

விரிக்கப்படாமல்
மூடியிருந்த நிலையிலும்
பல்லவன் உளியோசைக்கு
பாத சலங்கை ஜதியோடு
பரதமிசைத்து ஒலித்தது
சிவகாமியின் சபதம்

'எங்கோ
ஒரு சுவரில்
எனது சாரம் படித்தாய்
ஆனாலும்
அற்புத கருத்துக்களின்
ஆழமறிய மறந்தாயே'
என்றது
கீதை.........

கற்பனைக்கு எட்டாத
கதையாய்
மாபெரும் காவியமாய்
வியாசர் தந்து
விநாயகர் எழுதிய
என்னை
தொட்டுப் படிக்காமல்
தொலைந்த வாழ்வுனது
என்றது
மகாபாரதம்........

புறநாநூறு
பத்துப்பாட்டு
ஐந்து பெரும் நூல்கள்
அகத்திய தமிழி
அனைத்தும்
அழைத்தன அவனை.......

'துரோகத்தை
வீரத்தின் விளை நிலத்தை
காதலின் கனிவை
கணவனின் உயர்வை
காணலாம்
வா' என்றது
ஒரு நாவல்

அடிப்படை சட்டமும்
அழகிய கவிதையும்
அறுசுவை சமையலும்
அறியலாம்
வா வா' என்றன
நூல்கள்........

'ஆங்கிலமும்
பிறமொழியும்
பயில்வோம்'
என்றழைத்தன
புத்தகங்கள்.......

அங்கிருந்த
கரப்பான் பூச்சிகள்
அவனை பரிகாசித்தவாறு
நூல்கள் மீது
தேரோட்டம் காட்டின......

கண்கள் பனிக்க
இவ்வளவும்
இழந்தோம் என
எண்ணியவனாய்
ஒரு புத்தகத்தை
மெதுவாய்
தொட்டான்..........

ஒரு
குரல் ஒலித்தது
'ஐயா நூலகம்
மூடும் நேரமாகிறது'........

அவனுள்
மனசாட்சி சப்திக்கிறது
'வாசிக்காதவன்
உண்மை வாழ்வை
வசிக்காதவன்'........

வீடு செல்லும் வழியில்
ஒரு புத்தக கடையில்
சுய முன்னேற்ற நூலொன்று
வாங்குகிறான்.........

முதல்
அத்தியாய தலைப்பு
'கற்பதற்கு வயதெல்லை
துடையில்லை'........

அவனுள்
உற்சாக ஆறு
ஓடுகிறது.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இரவு வேளை
நூல்கள்
தன்னிடம் பேசிய
அறிவு உபதேசங்களை
நினைத்தவாரே
உறங்க முயல்கிறான்........

திடீரென
மின்னலாய்
பொறி தட்டி
ஒரு வாசகம்
நினைவு வருகிறது......

அது
நூலகவெளி சுவரில் எழுதி
இருந்த
'திறக்கும் நேரம்
தினமும்
காலை 8.30'........

பரிதி புத்திரன்
Dr.ப.சதீஸ்குமார்

### தெரிந்து கொள்ளுங்கள்

- உலகில் மிகப்பெரிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது?
- கிரேக்கம் 158 வசனங்களைக் கொண்டது

- விமானத்தின் கறுப்புப் பெட்டியின் நிறம் என்ன?
- செம்மஞ்சள் நிறம் -

- கணனி நகரம் என்றழைக்கப்படும் நகரம் எது?
- சென்பிரான்சிஸ்கோ

- உலகில் எந்த நாட்டு மக்கள் கைத்தொலைபேசியை அதிகளவில் பயன்படுத்துகின்றனா்.?
- சீன நாட்டு மக்கள்

- மனித உடலின் மிகப் பெரிய உறுப்பு தோலாகும். இரண்டாவது பெரிய உறுப்பு எது?
- ஈரல்

**Batticaloa என்று பெயர் பெற்ற விதம்ஒல்லாந்தர் மொழியில் Batti என்றால் "நெல்" என்று பொருள். நெற்கள் அதிகமாக கிடைத்ததால் நெற்குவியல் என்பதற்கு பொருளாக Batticaloa என பெயரிடப்பட்டது.**

தகவல்:திரு.க.பரராஜசிங்கம்
(இளைப்பாறிய அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பின் மகிடி நாடகம் – ஓர் அறிமுகம்

இலங்கையில் தமிழர் பாரம்பரியமாக வாழ்கின்ற பிரதேசங்களுள் மட்டக்களப்பு பிரதேசமும் ஒன்று. தனக்கெனத் தனித்துவமான சமூக அமைப்பினையும், பண்பாட்டம் சங்கங்களையும் இது கொண்டுள்ளது. தமிழ் நாட்டிலிருந்து இது மிகத் தொலைவில் அமைந்திருப்பதும், ஆகம வழிபாட்டம்சங்கள் இங்கு அதிகளவு அறிமுகமாகாமலிருப்பதும் மிஷனறிமார்களின் ஆங்கிலக்கல்வி மயமாக்கல் இங்கு அதிகளவு செயற்படாமையும், நவீனவர்க்கம் இங்கு பெரியளவில் உருவாகாமையும் இத்தனித்துவம் பேணப்படுவதற்கான காரணங்களாகும்.

ஓர் இனத்தின் புராதன பண்பாடுகளை அறிய விரும்பும் மானிடவியலாளர், அவ்வினத்தின் பின் தங்கிய பிரதேசங்களையும் புராதன மனிதக் குழுக்களையும் நாடுவர். இவ்வகையில் ஈழத்தமிழரின் புராதன பண்பாடுகளையும், தனித்துவம் மிக்க கலாசார அம்சங்களையும் ஆராய விரும்பும் ஆராய்வாளருக்கு மட்டக்களப்பு ஒரு முக்கிய களப் பிரதேசமாகும். தமிழர் வாழ்கின்ற வட பிரதேசம் வரலாற்றுப் போக்கில் பல்வேறு கலாசார மாற்றங்களுக்குட்பட்டு விட்டதனால் தமிழரின் புராதன பண்பாட்டம்சங்களை மூலவடிவில் இங்கு காண்பது மிக அருந்தலாக உள்ளது. இந்நிலையில் மட்டக்களப்புப் பிரதேசம் தமிழர் கலாசார ஆய்விற்குரிய பிரதேசமாக மாறுதல் இயல்பே.

## மகிடி நாடகம்

இப்பகுதியின் பண்பாட்டம்சங்களாக திழ்வனவற்றுள் முக்கிய கவனம் பெற வேண்டியவை இப்பகுதியில் நிகழும் மரபு வழி நாடகங்களாகும். மட்டக்களப்பின் வடமோடி, தென்மோடி, வசந்தன் நாடகங்கள் பற்றி அறிஞர்களும், ஆர்வலர்களும் நிறைய எழுதியுள்ளனர். அவை மட்டக்களப்புக்கு வெளியே பிரபல்யமாகியுள்ளன. ஆனால் இதுவரை அறிஞர்களால் அறிமுகப்படுத்தப்படாமலும் இன்றும் அருந்தலாக வழக்கில் இருப்பதுமான ஒரு நாடகம் மட்டக்களப்பில் உண்டு. அதுவே மகிடிநாடகம் ஆகும். இதனை இப்பிரதேச மக்கள் மகிடிக்கூத்து என்றும் அழைப்பர். இந்நாடகம் சமயச்சடங்களினின்று விடுப்பட்டதும் அதே நேரம் மட்டக்களப்பில் இந்து மத சமயச் சடங்குகளிற் பயன்படுத்தப்படும் வணக்கமுறைகள், கிரியை முறைகள், தாள வாத்தியங்கள் பயன்படுத்தப்படுவதுமான நாடகமாகும். இவ்வகையில் பெரு வளர்ச்சி பெற்ற வடமோடி, தென்மோடிக் கூத்துகளுக்கு இடைப்பட்ட ஒரு நாடக வடிவம் இதேபோல் அமைந்த கோலம், சொக்கரி போன்ற நாடகங்கள் சிங்கள மக்கள் மத்தியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மகிடி என்ற சொல்லுக்கு பல கருத்துக்கள் உண்டு. மந்திர தந்திரங்களைக் காட்டும் விளையாட்டு என்ற ஒரு அர்த்தமும் அதற்கு உண்டு. இம்மகிடிக்கூத்தில் பெரும் இடத்தைப் பிடிப்பது அதுவே. மட்டக்களப்பு மந்திரத்துக்குப் பெயர் போனது என்ற ஒரு ஐதீகம் உண்டு. இங்கு முன்பிலிருந்து மந்திரவாதிகள் பற்றியும் அவர்களின் திறமைகள் பற்றியும் வாய்மொழிக்கதைகள் பல வழங்கியுள்ளன. எனவே அப்பிரதேசத்திற்குரிய நாடகம் இப்பண்புகளை கொண்டிருத்தல் இயல்பு. இவ்வகையில் மட்டக்களப்பின் புராதன பண்பாட்டின் ஓர் அம்சத்தை பிரதிபலிக்கும் நாடகம் இது எனலாம்.

## மூவகை மகிடிக்கூத்துக்கள்

இம் மகிடிக்கூத்து சித்திரை வருடப்பிறப்பன்றோ அல்லது வருடப்பிறப்பின் பின்னர் அதனை அண்மித்த நாளிலோ ஆடப்படுகின்றது. மூன்று வகையான மகிடிக்கூத்துக்கள் மட்டக்களப்பில் வழக்கிலுள்ளன.

1. முதலாவது வகை மகிடிக்கூத்தில் அலையாள நாட்டிலிருந்து வரும் ஒண்டிப்புளியும் அவன் மனைவி காமாட்சியும் தமது கூட்டத்தாருடன் மட்டக்களப்புக்கு வந்து அங்கு வாழ்ந்த மந்திரவாதியுடன் போட்டியிட்டு வென்று அப்பிரதேசத்தில் குடியேறியமை நிகழ்த்திக்காட்டப்படுகிறது.

2. இரண்டாவது வகை மகிடிக்கூத்தில் கதை அம்சம் அதிகம் இல்லை. மந்திரவேலைகள் நடைபெறுகின்ற மகிடியினை வேடன், வேடுவிச்சி, வெள்ளைக்காரன், வெள்ளைக்காரி ஆகியோர் பார்க்க வருவது இதில் நிகழ்த்திக் காட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

3. மூன்றாவது வகை மகிடிக்கூத்து முதலிரண்டு மகிடிக்கூத்துக்களையும் விட வித்தியாசமானது. இதிலும் மந்திர தந்திர விளையாட்டுக்கள் இருப்பினும் கம்ப காமாட்சி, மீனாட்சி, வசிட்டர் ஆகியோர் சம்பந்தமான கதையும் குற்றாலக்குறவஞ்சியின் சாயல் பொருந்திய கதையும் நிகழ்த்திக் காட்டப்படுகின்றது.

இம் மகிடிக்கூத்துக்கள் திறந்த வெளியில் பகல் வேளைகளில் நடைபெறுகின்றன. முதலிருவகை மகிடிக்கூத்துக்களும் ஏனைய நாடகங்களைப் போன்று ஒத்திகை பார்த்து பழகி திட்டமிட்டு ஆடப்படுவது. அன்று இதற்கெனத் திட்டவட்டமான உரையாடல்கள் இல்லை. கர்ண பரம்பரைக்கதை ஒன்றினை நடிகர்கள் தம் திறமைக்கு ஏற்ப உரையாடி நிகழ்த்து புதிதளிக்கும் அரங்கு வகையானது. இடல் பாடல், உரையாடல் என்பன இதில் இடம்பெறும்.

## மேடை

வீதியோரங்களில் இதற்கென மேடையிடப்படும். இங்கு மேடை என்பதைப் பார்க்குமிடம் என்ற அர்த்தத்திலேயே கொள்ள வேண்டும். எனெனில் இம்மகிடி மேடைகள் உயரமானவையன்று. சமதள அளவில் அமைந்தவை. வெறும் தரையில் ஐம்பது யார் நீளம் பதினைந்து யார் அகலத்திற்குச் சுற்றிவரக் கம்புகளை பத்தடிக்கொன்றாக நாட்டி அவற்றைக் கயிற்றினால் இணைத்து நாடகம் ஆட ஆக்கப்பட்ட அரங்கே இந்நாடகம் நடைபெறும் மேடையாகும்.

இம்மேடையின் ஒரு பக்கம் கிடுகினால் (பின்னிய தென்னோலை) அடைக்கப்பட்டு அக்கிடுகு வேலியின் மறைவில் இருந்து மேடையில் இருக்கும் மேடைப்பொருள்களை இயக்க அவை மந்திரத்தால் அசைவது போலக் காட்டுவர். இம்மேடையில் மேடைப்பொருள்களாக பூரணகும்பம், கொடிமரம், வட்டாமடை, கொட்டில்கள், பந்தல்கள் என்பன இருக்கும். இம்மகிடிமேடையைச் சூழ நின்று கொண்டோ அல்லது அமர்ந்து கொண்டோ தமது வசதிக்கேற்ப அங்கு நடைபெறும் மகிடி நாடகத்தை பார்வையாளர் பார்த்து மகிழ்வர்.

## நடிகர்– பார்வையாளர் உறவு

முதலாவது மகிடிக்கூத்தில் மட்டக்களப்பாளருக்கு வேடமிடுவர். மேடையினுள் நாடகம் தொடங்கு முன்னர் வந்து தமக்குரிய கொட்டிலினுள் இருப்பர். மலையாளத்தாருக்கு வேடமிடுவோர் அயல் ஊரினின்று வேடமிட்டு வீதியால் ஆடிவந்து மேடைக்குள் இறங்கி, நாடகத்தை ஆரம்பித்து நடத்தி முடிப்பர். இந்த நாடகத்தின் போது பார்வையாளருடன் நடிகர் உரையாடுவர். அங்கு நடைபெறுவதைப் பார்வையாளருக்கு விளக்குவர். இவ்வண்ணம் நடிகர் – பார்வையாளர் இணைப்பில் இந்நாடகம் நடைபெறும்.

இரண்டாவது வகை மகிடிகூத்தின் மேடையமைப்பும் பெரும்பாலும் முன்னையதைப் போன்றதே. ஆனால் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. முன்னைய மகிடியில் நடிகர் ஒரு பக்கத்து வழியினால் மேடையினுள் நுழைய இதில் நடிகர் இரண்டு வழிகளினால் உள்நுழைவர். இது முழுக்க முழுக்க ஒரு வேடிக்கை நிகழ்ச்சியாகவே அமையும். சாம்பலாண்டி என்றழைக்கப்படுவோரும் அவரது உதவியாளரும் இதிற்பார்வையாளரை அமைதிப்படுத்தி நடைபெறப்போகும் நாடகத்தை விளக்கி இதனை நடத்துவர் இடையிடையே விளக்கமளிப்பார். இவ்வகையில் இவர்கள் நவீன நாடக அரங்கின் எடுத்துரைஞர்களை ஒத்தவாகளாயுள்ளனர்.

## பழைமையும் கட்டுப்பாடும் இணைந்த வடிவு

மூன்றாவது வகை மகிடிக்கூத்தின் மேடையமைப்பு முதலிரு வகைகளை விட வித்தியாசமானது. முதல் இருவகை மகிடிக்கூத்தின் மேடை அமைப்புப்போல இது அமையினும் இம்மேடை இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதியில் மட்டக்களப்பின் தென்மோடி, வடமோடிக் கூத்தாட்டங்களுக்கு அமைக்கப்படும். மேடைபோல ஒரு வட்ட மேடை (வட்டக்களரி) அமைக்கப்படும். இது இலைகளாலும், குருத்துக்களாலும் அலங்கரிக்கப்படும். மற்றப் பகுதி வழக்கமான மகிடி மேடைபோல அமைக்கப்படும். அங்கு கொடிமரமும், கும்பங்களுக்கு மேடைப் பொருள்களாயிருக்கும். பாத்திரங்களின் தோற்றமும் வரவுத்தாளமும் தருவும் பாடலும் கூத்துப்போல வட்டக்களரியில் நடைபெறும். ஆட்டம் முடி யசம்பாஷணை மூலமாகக் கதையை நிகழ்த்த மற்ற அரங்கிற்கள் பாத்திரங்கள் வந்து விடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எழுத்தில் ஏட்டிலுள்ள கதை வட்ட அரங்கினுள்ளும் ஏட்டில் இல்லாத கர்ண பரம்பரைக் கதை மற்ற அரங்கினுள்ளும் நடைபெறும்.

இவ்வகையில் இது ஒரு கட்டுப்பாடான நாடகம் புராதன நாடகமும் இணைந்த ஒரு நாடக வடிவு எனலாம். இங்கும் வட்டமேடை அல்லாத பகுதியில் நாடகம் நடைபெறும் போது பார்வையாளருடன் குறவன், குறத்தி, வேடன், வேடுவிச்சி ஆகியோர் உரையாடுவர். பார்வையாளா நாடகத்திற் பங்காடுவர். பார்வையாளர் நாடகத்திற் பங்கேற்றல் இங்கு இடம்பெறும். வட்டமான மேடைக்குள் தோன்றி ஆடும் பாத்திரங்களுக்குத் தாளக்கட்டும் ஆட்டமும் உண்டு. இவை வடமோடித் தாளக்கட்டுக்களாயுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் வடமோடித் தாளக்கட்டுக்கள் இவற்றைவிடச் செம்மையும் முழுமையுமுடையவை.

## பொதுத்தன்மை

இம்மகிடிக்கூத்துக்கள் இடத்துக்கு இடம் வித்தியாசப்பட்டாலும் தமக்குள் ஒற்றுமையுடையனவாகவுள்ளன. இதில் இடம்பெறும் மந்திர தந்திரக்கதைகளும் மேடையமைப்பும் பார்வையாளர்கள் பங்கேற்றலும் குறவன், குறத்தி முதலிய பாத்திரங்களும் இவற்றிற்கு ஒரு பொதுத் தன்மையைத் தருகின்றன. ஆனால் இவற்றினிடையே ஒரு வளர்ச்சிப் போக்கினையம் காணமுடிகின்றது. கர்ண பரம்பரையாக வந்த ஒரு கதையை ஆரம்பத்தில் நிகழ்த்திக் காட்டத் தொடங்கிப் பின்னால் அதற்கென கதையமைப்பினையும் வட்ட மேடையினையும் ஆட்ட முறைகளையும உள்ளடக்கிய வரலாறாக இதை நொக்கின் இதன் வளாச்சியைப் புரிந்து கொள்ளலாம்.

## இடம் பெயர்ந்த ஐதீகம்

இந்நாடகம் மட்டளப்பாரை மலையாளத்தார் வென்ற கதைக் கூறுவதால் இதற்கு ஒரு சரித்திரப் பெறுமதியுண்டு. முதலாவது மகிடிக்கூத்தில் வந்து மட்டக்களப்பாரை வெற்றி கொள்ளும் குழுவின் தலைவன் ஒண்டிப்புலி ன்பதும், மட்டக்களப்பின் தலை நகர் புளியன்தீவு என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கவை. மட்டக்களப்பு பண்பாட்டுக்கும் மலையாளப் பண்பாட்டுக்கும் நிறைந்த ஒற்றுமையுண்டு. மட்டக்களப்பிற் காணப்படும் பெண் தெய்வ வணக்கமுறை ஆகம முறையில்லாத கிரியைகள், தாய்வழியுரிமை,உறவு முறைகள், பெயர்கள், பழக்க வழக்கங்கள் என்பன மலையாளத்திலும் காணப்படுபவை என்ற கருத்தும் உண்டு. எனவே மட்டக்களப்பில் குடியேறிய புராதன குழு ஒன்றினத கதையெ மகிடியாகக் கர்ண பரம்பரையாக நடத்தப்படுகின்றது என்று கொள்ளலும் பொருந்தும். இதனை மானுடவியலாளர் இடம் பெயர்ந்த ஐதீகம் எனவும் அழைப்பர். இவ்வகையில் மகிடிக்கூத்து நாடக நிலையில் மாத்திரமனறி மானுடவியல் சமூகவியல் நிலையிலும் அணுகும். பெற்றியது.

## ஈழத்தமிழர் புராதன நாடகம்

ஈழத்துத் தமிழரின் புராதனமான நாடக வடிவம் மகிடிக்கூத்து எனலாம். அத்தோடு ஈழத்துத் தமிழரின் வீதி நாடகமும் இதுவே எனலாம். வீதி நாடகத்திற்கென்று சில முக்கிய பண்புகள் உள்ளன. பார்வையாளர் தமது வசதிக்கேற்ப இருந்தோ நின்றோ பார்த்தல், சுற்றிவர் பார்வையாளர்கள் இருத்தல்ஈ பார்வையாளர்கள் நாடகத்திற் பங்கேற்றல், நடிகர்கள் பார்வையாளாகளுடன் உரையாடல், வீதியே மேடையாக அமைதல், காட்சிச் சோடனைகள் இன்மை, கற்பனைக்கு அதிக இடம், அதிகளவு ஆடை அலங்காரம் ஒப்பனை இன்மை, பகலில் நடைபெறுதல் என்பன வீதி நாடகத்தில் சில தன்மைகளாம். இவை மகிடியிற் காணப்படுகின்றன.

புகழ்பெற்ற வங்காள நாட்டுக்காரரான பாதல் சர்க்காரின் நாடகங்கள் வீதி நாடக வகையினவே. அவர் மூன்றாவது அரங்கு என்ற கோட்பாட்டினை நாடக உலகில் ஏற்படுத்தியுள்ளார். எளிமையான வசதி குறைந்த இந்திய கிராமிய பாட்டாளி மக்களுக்கு நாடகத்தின் இலக்கணம் குன்றா வகையில் வீதி நாடகப்பாணியில் நாடகத்தை அளித்தலே அது. மட்டக்களப்பில் மகிடி நாடகத்தின் சாரத்தினின்று நாமும் நமக்கென ஒரு மூன்றாவது அரங்கினை உருவாக்க முடியும்.

மட்டக்களப்பின் வடமோடி, தென்மோடி நாடகங்கள் வழக்கில் வந்த பின்னும் அதற்கு அரச அங்கீகாரமும் , படித்தோர் அங்கீகாரமும் கிடைக்கத் தொடங்கிய பின்னர் மகிடி நாடகம் அருகத் தொடங்கியத. இன்று இதனை மிகக் குறைவாகவே ஆடுகின்றனர். இளம் தலைமுறையினர் இதில் ஈடுபடுவது குறைவு. மட்டக்களப்பை வெளியில் அறிமுகப் படுத்தும் தனித்துவம் வாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூத்துக்களையெ கைவிடும் இன்றைய இளம் தலைமுறையினர் மகிடி நாடகத்தைக் கைவிடுவதிலும் ஆச்சரியம் இல்லை.

ஆனால் கலாசாரத் தனித்துவமும், தமிழர் தேசிய தனித்துவமும் பேசும் நாம் நமது அருகில் வாழும் சிங்களச் சகோதராகளை அவதானிக்க வேண்டும். அவர்கள் தமது புராதன நாடகங்களைப் பேணப்பாதுகாக்கின்றார்கள். வளாக்கின்றார்கள். அதன் மூலம் தமது தனித்துவங்களை பேணுகின்றார்கள். அவர்களின் நாடகங்களான கோலம், சொக்கரி என்பன இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவை. எமது மகிடிக்கும் அவர்களது சொக்கரிக்கும் இடையெ ஒற்றுமைகளுண்டு. தொலைக்காட்சியிலே இவற்றைச் செம்மைப் படுத்திக் காட்டுகின்றனர். பெருமையோடு அவற்றைத் தமது கலாசாரச் சின்னங்களாகக் காட்டுகின்றனர். தொலைக்காட்சியின் தமிழ்ப்பிரிவினரும் இவ்வகையிற் தமது கவனத்தைத் திருப்புதல் வேண்டும். கொழும்பு வாழ் தமிழ் மக்களின் உயர் கலாசாரத்தையே ஈழத்துத் தமிழ்க் கலாசாரமாக காட்டுவதைக் குறைத்து மண்ணிலிருந்து கிளைக்கும் தமிழ் மக்கள் கலைகளையும் காட்ட முயல வேண்டும். இவ்வகையில் மகிடிக்கூத்தும் கவனிப்பிற்குரிய ஒன்றாகும்.

இவ்மகுடி நாடகம் யாழ்ப்பாணத்திலும் பண்டுதொட்ட இருந்தது என அறியமுடிகிறது. இந்நாடகம் மூதூர், வவுனியாப் பகுதிகளிலும் அத்தி பூத்தாற்போல நடைபெறுகின்றது. என்ற தகவல்களும் கிடைத்துள்ளன. இவை ஆராயப்பட வேண்டடம். இத்தகவல்கள் பொதுவாக இந்நாடகம் ஈழத்தமிழரின் புராதன நாடகம் என்பதைச் சுட்டி நிற்கின்றன.

மகிடிக்கூத்து பற்றி ஆய்வம் தேடலும் ஈழத்துத் தமிழரின் புராதன நாடகத்தையும் அதன் நாடக முறையும் எமது கலாசாரத்தின் கூறுகளின் சில தனி அம்சங்களையும் காட்டும் இவ்வகையில் அமைந்துள்ளது என ஆய்வாளர்களும் அபிமானிகளும் கூறுகிறார்கள்.

கலாநிதி சி. மௌனகுரு



**வாழ்க்கை என்பது**

ஒரு சந்தர்ப்பம் - நழுவ விடாதீர்கள்

ஒரு கடமை – நிறைவேற்றுங்கள்

ஒரு இலட்சியம் - சாதியுங்கள்

ஒரு சோகம் - தாங்கிக்கொள்ளுங்கள்

ஒரு போராட்டம் -

- எனக்கு சுயமான சக்தி இல்லா விட்டாலும் நூல்கள் என்னைச் சிந்திக்கத் தூண்டாமல் இருப்பதில்லை - நெப்போலியன்
- கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே மேல் - பிளாட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பை ஆட்சி செய்தவர்களும் தடயங்களும்

கி.மு-35000 - கி.மு-5000 வரலாற்றுக்கு முற்பட்ட காலம்- PRE HISTORIC PERIOD ஆதிக்குடிகள் வேட்டையாடல் நாடோடி வாழ்க்கை ஆதி திராவிடர் ஒஸ்ரலோயிட் இனம் ஒஸ்ரிக்மொழி.

கி.மு-350000 - கி.மு-10000 பழைய கற்காலம்- PALEOLITHIC PERIOD

வேட்டையாடல்இ நாடோடி வாழ்க்கைஇ குகைகளில் இருப்பு.

கி.மு-10000-க மு -8000 இடைக்கற்காலம் சிறுகாலம் -Mesolithic or micro lithic period வேட்டையாடல் மரவழிபாடு கல்வழிபாடு பாம்பு வழிபாடு பயிர்தொடங்கல்.

கி.மு-8000- கி.மு -50000 புதியகற்காலம் NEOLITHIC PERIOD

வேட்டையாடல், வேல்வழிபாடு, மரவழிபாடு, இலிங்கவழிபாடு, பாம்பு வழிபாடு, பயிரிடல், நிரந்தரமாகத் தங்குதல்.

கி.மு-3500 கி.மு-2000 பெருங்கற்காலம் MEGALITHIC PERIOD

நிரந்தர வசிப்பிடம், எழுத்து தோற்றம், இலிங்கவழிபாடு, வேல்வழிபாடு, தாய்த் தெய்வழிபாடு, இறந்தோரை பெருமந்தாழியில் புதைத்தல், நினைவுச்சின்னம் உ-ம் கதிரவெளியில் கானப்பட்டது.

கி.மு-5000-கி.மு-2000 வரலாற்று இடைக்கற்காலம் PROTO HISTORIC PERIOD. நிரந்தரவாழ்கை, பிராமிலிபி குகைப்பொறிப்புகள்.

இராவணன் காலம்

இலிங்கவழிபாடு, அரசு முறை.

கி.மு-543 விஜயன் இலங்கைக்கு வந்தது.

இந்துசமயம்,இயக்க,நாக, இலிங்கவழிபாடு, ஐந்து ஈச்சரங்களின் சிறப்பு.

கி .மு-600 வரலாற்றுக் காலம்

கி.மு-317-கி.மு-307 பந்துவாசன்(பந்துகாபயன்) காலம்

கி.மு-312-கி.மு-296 மட்டக்களப்பு முதல் தமிழ் மன்னன் ஸ்ரீகுலசேனன், கூத்திகன். சிங்காரத்தோப்பு(சிங்காரகண்டு) மாளிகை அமைத்தது,மளிங்கம்,காலிகட்டத்திருந்து படையாட்சித்தலைவர்மளை குடியேற்றியமை, வீரர்முனை (வீரமுனை) மன்கல் புட்டி(மலகம்புட்டி) பிரதேசங்களை உருவாகியமை.

கி.மு-161-கி.மு-137 எல்லாளன் ஆட்சி.

கி.மு-38-கி.மு-18 வாகூரன் ஆட்சி.

கி.பி-498- கி.பி-518 உலகநாச்சி அரசியும் மண்முனை அரசியும

கொக்கட்டிச்சோலை சிவன் கோயில் புனருத்தானம்.

குணசிங்கன்-மட்டக்களப்பு.மன்னன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கி.பி-907-கி.பி-941 தர்மசிங்கன்இசேனன். மன்னர்கள்.

கொக்கட்டிச்சோலை 3தேரமைப்பு. அவ்வாலயம் கல்லமைப்பு பெற்றது.

கி.பி-1215-கி.பி-1255 கலிங்க மாகன் ஆட்சி

தோப்பாவயை(பொலநறுவை)தலைநகராக்கொன்டு முழுவதும் இலங்கையையும் ஆட்சி செய்தான்செய்தான்.வீரசைவம் எழுச்சி

வன்கிமைகள் வகுத்தல்

7 வன்னிமைகள் 7வன்னியராட்சியும்

குளக்கோட்டன் இவனது முக்கிய தளபதி. இவன் திருக்கோயில்

கி.பி-1300 மலாயன் மலாயர்கள். கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்ற எடுத்த முயற்சி தோல்வி.

போத்துகேயர் வருகை.

கி.பி -1602 டச்சுக் கிழக்கு இந்தியக்கம்பனி ஆரம்பம்.

கி.பி-1603 டச்சு கடற்படை தளபதி ஸ்பில்போள் தனது படையுடன் மட்டக்களப்பை அடைய எடுத்த முயற்சி தோல்வி அடைந்தது.

கி.பி-1622 போத்துகேயர் மட்டக்களப்பை தனது நிர்வாகத்துக்குள் உட்படுத்திக் கோட்டையைக் கட்டியமை.

கி.பி-1627 போத்திகேயர் மட்டக்களப்பு கோட்டையை கட்டி முடித்தமை.

கொக்கட்டிசோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலை இடிக்கச் சென்று தோல்வியுற்றுத்திரும்பியது. போத்துகேயரால் துரத்தப்பட்ட முஸ்லிம்களை கன்டி மன்னன் மட்டக்களப்பில் குடியேற்றினான் .

கி.பி-1614 மட்டக்களப்பில் சிற்றரசன்னாகிய குமாரபன்டார பழுகாமத்தின் சிற்றரசனிடம் தோல்வி கன்டபின் மட்டக்களப்பு பழுகாம சிற்றரசனிடம் சேறக்கப்பட்டான்.

கி.பி-1624 தான்டவன்வெளியில் போத்துகேயரால் முதல் றோமன் தேவாலயம் கட்டப்பட்டது.

கி.பி-1638 டச்சுகாறர் போத்துகேயரிடம் இருந்து மட்டக்களப்பைக்கைப்பற்றி இராசசிங்கன் மன்னனிடம் ஒப்பந்தம் செய்து கொன்டனர்.

கி.பி- 1639 போத்துகேயரிடமிருந்து ஒல்லாந்தர் கோட்டையை கைப்பற்றியதும் இகரும்கல் கொன்டு அமைக்க தொடங்கியது.

கி.பி-1660 புளியந்தீவு புனித மரியநாயகம் தேவாலயம் உருவாகியது.

கி.பி-1672 பிரான்சிய கடற்படைத்தளபதி டெலா கேயிஸ் மட்டக்களப்பை அடையும் முயற்ச்சி தோல்வியுற்று திரும்பி மலைக்கு பயனமானர்.

கி.பி-1682 டச்சுகாறர்களால் மட்டக்களப்பு கோட்டை திரும்பவும் கட்டி முடிக்கப்பட்டது.

கி.பி-1707 ஒல்லாந்தர் கோட்டையின் முன்புறத் தொகுதி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது.

கி.பி-1766 சிங்கள மன்னர்களுக்கும் டச்சுக்காறர்களுக்கும் இடையில் ஒப்பந்தம் -ஒருபடை தளபதியின் கீழ் மட்டக்களப்பு கண்டி மாகாணத்தின் பகுதி .என்னும் நிலையை கிழக்கு இந்தியக் கம்பனி ஆதரித்தது.

கி.பி-1780 ஒல்லாந்தர் கோட்டையை புதுப்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கி.பி-1795 மேஜர் பிரேஸியரின் தலைமையில் இருந்த பிரித்தானியப் படைகளுக்கு மட்டக்களப்பு சரனடைந்தது.

கி.பி-1814 வண.வ்ல்லியம் ஒல்றட் வருகைஇ மெதடிஸ்த மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது

வண வ்ல்லியம ஒல்றட் மட்டக்களப்பில் வெஸ்லியன் மிஷனரி இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

கி.பி-1822 அமிர்தகழி கப்பலேந்தி மாதா தேவாலயம் உருவாகியது

கி.பி-1833 இலங்கையை 05 நிர்வாகப்பிரிவுகளாகப் பிரித்தபோது மட்டக்களப்பு கிழக்கு மாகனப்பிரிவில் சேர்கப்பட்டது.

கி.பி-1838 வின்சன்ற் பாடசாலை வீட்டுப்பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.

கி.பி-1847 மட்டக்களப்பில் முதல் ஐரோப்பியருக்குரிய தென்னந்தோப்பு டாக்டர் -சொற்றேயினால் தன்னாமுனையில் அமைகப்பட்டது.

கி.பி-1849 வின்சன்ற் வீட்டுப்பாடசாலை மிஷன் பாடசாலையாகி 1895ல் வின்சன்ற் பாடசாலையானது.

கி.பி-1855 தோட்ட முதலாழிகள் குடும்பங்களுக்காக மட்டக்களப்பு நூல்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

கி.பி-1870 முறையின் என்றழைக்கப்படும் மாட்டுமந்தை றோயால் 8570 மாடுகள் அழிந்தன

கி.பி-1872 புனித மிக்கேல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது

கி.பி-1876 மட்டக்களப்பில் உள்ளூர்சபை ஆராம்பிக்கப்பட்டது.

கி.பி-1877 மருதமுனையிலும் அதன் அயல் கிராமங்களிலும் காலரா நோய் உன்டாகி அநேகர் உயிரிளந்தன்.

கி.பி-1878 பெரும் வெள்ளத்தால் அநேகருக்கு சேதம்.

கி.பி-1880 தபால் தந்தி இலாகா மட்டக்களப்பில் காரியமாற்றத் தொடங்கியது.

கி.பி-1888 மட்டக்களப்பில் பிரிட்டிஷாரால் ஆரம்பித்த கப்பற்சேவை திருமலை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு கல்குடா வாழச்சேனை மட்டக்களப்பு அம்பாந்தோட்டை காலி ஊடாக கொழும்பை அடையும்.

கி.பி-1907 மட்டக்களப்பு பகுதி பெரும் புயல் காற்றினால் பாதிக்கப்பட்டது. உயிரும் பொருளும் பெரும் சேதம் ஏற்பட்டது.

கி.பி-1909 றின்டன பெஸ்ட் என்னும் மாட்டு மந்தை நோயினால்43843 மாடுகள் அழிந்தன

கி.பி-1911 குடிசன மதிப்பீடு- சோனகரின் ஒரேகுடியிருப்பான காத்தான்குடி சனசெறிவானது பின்பு ஏறாவுர் கொடுக்கப்பட்டது.

கி.பி-1915 முகத்துவாரத்தில் வெளிச்சவீடு கட்டப்பட்டது. 1878ல் நேர்ததை விட பெரிய வெள்ளம் ஏற்பட்டது.

கி.பி-1916 முதலாவது அச்சு இயந்திரம் இயங்கும்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

கி.பி-1923 கல்லடிப்பாலம் நிறுவப்பட்டது.

கி.பி-1927 மட்டக்களப்பு புகையிரதச் சேவையைக் கண்டது.

கி.பி-1950 பொது நூல்நிலையம் நிறுவப்பட்டது.

கி.பி-1953 மட்டக்களப்பில் நகரசபை மண்டபம் திறக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கி.பி-1957 மட்டக்களப்பு வெள்ளத்தில் மூழ்கிப் பெரும் சேதம்

கி.பி-1958 மட்டக்களப்பில் நவம்பர் 7ல் விமானசேவை ஆரம்பிக்கப்பட்டது.

கி.பி-1963 மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை வேறாக்கப்பட்டது.

வண வில்லியம ஒல்றட் மட்டக்களப்பில் வெஸ்லியன் மிஷனரி இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

கி.பி-1822 அமிர்தகழி கப்பலேந்தி மாதா தேவாலயம் உருவாகியது

கி.பி-1833 இலங்கையை 05 நிர்வாகப்பிரிவுகளாகப் பிரித்தபோது மட்டக்களப்பு கிழக்கு மாகனப்பிரிவில் சேர்கப்பட்டது.

கி.பி-1838 வின்சன்ற் பாடசாலை வீட்டுப்பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.

கி.பி-1847 மட்டக்களப்பில் முதல் ஐரோப்பியருக்குரிய தென்னந்தோப்பு டாக்டர் -சொற்றேயினால் தன்னாமுனையில் அமைகப்பட்டது.

கி.பி-1849 வின்சன்ற் வீட்டுப்பாடசாலை மிஷன் பாடசாலையாகி 1895ல் வின்சன்ற் பாடசாலையானது.

கி.பி-1855 தோட்ட முதலாழிகள் குடும்பங்களுக்காக மட்டக்களப்பு நூல்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

கி.பி-1870 முறையின் என்றழைக்கப்படும் மாட்டுமந்தை றோயால் 8570 மாடுகள் அழிந்தன

கி.பி-1872 புனித மிக்கேல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது

கி.பி-1876 மட்டக்களப்பில் உள்ளுர்சபை ஆராம்பிக்கப்பட்டது.

கி.பி-1877 மருதமுனையிலும் அதன் அயல் கிராமங்களிலும் காலரா நோய் உன்டாகி அநேகர் உயிரிளந்தன்.

கி.பி-1878 பெரும் வெள்ளத்தால் அநேகருக்கு சேதம்.

கி.பி-1880 தபால் தந்தி இலாகா மட்டக்களப்பில் காரியமாற்றத் தொடங்கியது.

கி.பி-1888 மட்டக்களப்பில் பிரிட்டிஷாரால் ஆரம்பித்த கப்பற்சேவை திருமலை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு கல்குடா வாழச்சேனை மட்டக்களப்பு அம்பாந்தோட்டை காலி ஊடாக கொழும்பை அடையும்.

கி.பி-1907 மட்டக்களப்பு பகுதி பெரும் புயல் காற்றினால் பாதிக்கப்பட்டது. உயிரும் பொருளும் பெரும் சேதம் ஏற்பட்டது.

கி.பி-1909 றின்டன பெஸ்ட் என்னும் மாட்டு மந்தை நோயினால்43843 மாடுகள் அழிந்தன

கி.பி-1911 குடிசன மதிப்பீடு- சோனகரின் ஒரேகுடியிருப்பான காத்தான்குடி சனசெறிவானது பின்பு ஏறாவுர் கொடுக்கப்பட்டது.

கி.பி-1915 முகத்துவாரத்தில் வெளிச்சவீடு கட்டப்பட்டது. 1878ல் நேர்ததை விட பெரிய வெள்ளம் ஏற்பட்டது.

கி.பி-1916 முதலாவது அச்சு இயந்திரம் இயங்கும்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

கி.பி-1923 கல்லடிப்பாலம் நிறுவப்பட்டது.

கி.பி-1927 மட்டக்களப்பு புகையிறதச் சேவையைக் கன்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | |
|---|---|
| கி.பி-1950 | பொது நூல்நிலையம் நிறுவப்பட்டது. |
| கி.பி-1953 | மட்டக்களப்பில் நகரசபை மண்டபம் திறக்கப்பட்டது. |
| கி.பி-1957 | மட்டக்களப்பு வெள்ளத்தில் மூழ்கிப் பெரும் சேதம் |
| கி.பி-1958 | மட்டக்களப்பில் நவம்பர் 7ல் விமானசேவை ஆரம்பிக்கப்பட்டது. |
| கி.பி-1963 | மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை வேறாக்கப்பட்டது. |

தொகுப்பு- ரு. பிரியவதன்

**ஒன்று, இரண்டு, மூன்று வரிச் செய்திகள்**

- ✗ காற்று நகரம் என்றழைக்கப்படும் நகரம்
  "சிகாகோ"
- ✗ உலகில் ஓவியர்கள் அதிகம் பயன்படுத்தும் நிறம்
  "சிகப்பு"
- ✗ ஆங்கிலம் தெரியாத இங்கிலாந்து மன்னர்
  "முதலாம் ஜார்ஜ்"
- ✗ கொசுக்கள் இல்லாத நாடு
  "பிரான்ஸ்
- ✗ உலகின் அதிகமாக செய்தித்தாள்கள் வெளிவருவது
  "சுவீடனில் 12000 செய்தித்தாள்கள்"
- ✗ நோபல் பரிசு தெரியும் அது ஆண்டு தோறும் எத்தனை பேருக்கு கொடுக்கப்படுகிறது.
  "08 நபர்களுக்கு"

- ✓ நல்ல நண்பருக்கு அடுத்த இடம் வகிப்பவை நல்ல நூல்களே ~ கோல்டன்
- ✓ நல்ல புத்தகங்கள் நம்மை நல் வழிக்கு இட்டுச் செல்லும் ~ ஜோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்கள் நேரத்தை விரயமாக்கும் எதிரிகள்

1) அடிக்கடி ஒலிக்கும் தொலைபேசி அழைப்புக்கள்.

2) உறுதியற்றவராயிருத்தல்.

3) நீண்ட நேரம் எடுக்கும் கூட்டங்கள்.

4) முன்னுரிமைகளை அடிக்கடி மாற்றுதல்.

5) தெளிவான குறிக்கோள் மற்றும் நாளாந்த திட்டம் இன்மை.

6) தனிப்பட்ட ஒழுங்கீனங்கள்.

7) ஒழுங்குபடுத்தப்படாத உங்கள் அறை/அலுவலகம்.

8) திறமையாக கையளிக்கத் தெரியாமை.

9) தேவையற்ற கடதாசி/கடிதங்களை அகற்றாமை.

10) உரிய மற்றும் தரமான உபகரணமின்மை.

11) தேவையின்றி மற்றவர்களுக்குப் பின்னே அலைதல்.

12) இயலாத வேலைக்கு "இல்லை" என்று சொல்லத் தெரியாமை.

13) ஒரு வேலையை முடிக்காமல் மற்றொரு வேலைக்கு செல்லும் பழக்கம்.

14) ஒழுங்கற்ற தகவல் மற்றும் தொடர்பாடலில் தங்கியிருத்தல்.

15) அளவுக்கதிகமாக விழாக்களில் பங்கேற்றல்.

16) உங்களுக்கு தொடர்பற்ற மற்றவர் செயல்களை எப்போதும் கண்காணித்தல்.

17) திட்டமிடாத வேலையை மேற்கொள்ளல்.


பிரம்பும் தடியும் உபயோகிக்காமல் கோபமும் குறையும் இல்லாமல் சம்பளத்தையும் வெகுமதியையும் எதிர்பார்க்காமல் நமக்கு கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# My Hobby (Reading)

1. My Hobby is reading.
2. I Love reading books and newspapers.
3. I read English and Tamil books.
4. I enjoy reading articles in the children's corner of the Sunday observer and vij paper.
5. I borrow books from the library and my friends.
6. Sometimes my father buys me books.
7. I have good collection of children's books.
8. I exchange them with my friends.
9. Books are our silent companions.



Mas.S.Babeeshan
St.Michael's College

நுட்பமான அறிவு தரும் நூல்கள் பாரினில் உண்டு.
புத்தகங்களே உன் அகத்தை புத்தகமாய் வைத்திருக்கும்.
புத்தகமே புத்துணர்வைத் தரும்.
நூல் ஒரு நேரப் போக்கி.
நூல் ஒரு நேர்படுத்தி,
நூல் ஒரு அறிவாக்கி,
நூல் ஒரு அறனாக்கி,
நூல் ஒரு திறனாக்கி,
கிழிந்த ஆடையைத் தைக்க நூல் கூட இல்லாத நிலை கூட இழிவில்லை ஆனால் நித்தம் நூலைக் கற்க எண்ணம் இல்லாமல் இருப்பதே இழிவானது.

வாழ்வில் அணியாகவும் தாழ்வில் துணையாகவும் விளங்குவது தான் கல்வி.
ஆழ்ந்த வாசிப்பு அறிவைப் பெருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குழந்தையின் ஞாபக சக்தியை அதிகரிப்பது எப்படி?

ஞாபகம்ஒருவியாதி, மறதிஒருவரம்என்றுசொல்வார்கள்,
ஆனால்நம்குழந்தைபடித்ததைஎல்லாம்மறக்கும்போதுமறதிஒருசாபம்போல நமக்குதோன்றும்.

**ஞாபகம்குறித்துசிலதகவல்கள்:**

நாம்பார்க்கும், கேட்கும், உணரும், சுவைக்கும், முகரும் அனைத்துமே நமது ஞாபகங்கள் ஆகும். இது முதலில் குறைந்த நேரமே மனதில் இருக்கும் (சென்சரிமெமரி). உடனே மறந்து விடும்.

இந்த சென்சரி மெமரியில் நாம் முழுகவனத்தை செலுத்தி ஆழ்ந்து கவனித்தால் அது ஷார்ட்டெர்ம் மெமரிஆக பதிவாகும். இதுவும் சில மணித்துளிகளுக்கு மட்டும் இருக்கும்.

ஷார்ட்டெர்ம் மெமரிஐ திரும்பத்திரும்ப செய்யும் போது அது நாள்பட்ட ஞாபகசக்தியாக மாறும். எனவே ஞாபகசக்திக்கு மிகவும் முக்கிமானது இரண்டு: ஆர்வம் மற்றும் கவனம், திரும்ப திரும்ப செய்தல்.


**இனி நினைவுதிறனை அதிகரிக்கும் வழிகள்:**

- எதையும் தாய்மொழியிலேயே சிந்திக்க வேண்டும், நீங்கள் படிப்பதுஆங்கிலமோ, ஹிந்தியோ, பிரெஞ்சோ - உங்கள் தாய்மொழி என்னவோ அதில் சிந்தித்து மனதில் பதிய செய்ய வேண்டும்.
- புரியாமல் எதையும் படிக்ககூடாது. ஒருவரிபுரிய ஒருநாள் ஆனாலும்பரவாயில்லை.
- முழு கவனம் மிகஅவசியம்.
- mnemonics வைத்து படிப்பது ஒருகலை. அதைஉங்கள் குழந்தைக்கு கற்றுகொடுங்கள்.

**உதாரணம்:** news - north, east, west, south



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




- படித்தவுடன் எழுதிபார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். ஹோம்வொர்க் என்ற பெயரில் கடமைக்கு எழுதும் சடங்கு பயனில்லை.

- படங்களுடன் கூடிய தகவல்கள் மனதில் பதியும். படவிளக்கங்களை திரும்பதிரும்ப வரைந்து பார்க்கச் சொல்ல வேண்டும்

- நல்ல உறக்கம் அவசியம். குறைந்தது 8 மணி நேரதூக்கம்க ண்டிப்பாக தேவை.

- இரவில் சீக்கிரம் தூங்கி அதிகாலை படிக்கும் படி சொல்ல வேண்டும்.

- தூங்க போகும்முன் அன்று படித்த அனைத்தையும் ஒருமுறை மேலோட்டமாக நினைவுபடுத்தி பார்க்க வேண்டும். அப்படி செய்யும் போது நாம் தூங்கினாலும் நம் மூளையின் சில மூலைகள் விழிப்புடன் இருந்து தகவல்களை ஷார்ட்டெர்ம் மெமரியில் இருந்து லாங்டெர்ம் மெமரியில் பதிவு செய்து கொண்டு இருக்கும். இதுமிகமுக்கியமானபயிற்சிஆகும்.

- மாவு சத்து உள்ள உணவுகள் மந்த நிலையை ஏற்படுத்தும், எனவே புரதம் நிறைந்த எளிதில் சமிபாடடையும் உணவை சேர்த்து கொள்வது நல்லது.

மௌனம் ஆயிரம் வார்த்தைகளை உற்பத்தி செய்கின்ற தென்றால், வாசிப்பு ஆயிரம் சொற்களை அறிமுகம் செய்கிறது.

- ஒரு பெரும் ஆன்மாவின் விலை மதிப்புமிக்க ஜீவரத்தமே, ஒரு நல்ல புத்தகம் – மில்டன்
- இந்த நாட்களின் உண்மையான பல்கலைக்கழகம் புத்தகங்களின் தொகுப்பே – கார்லைல்
- புத்தகங்கள் எனப்படுபவை ஒரு கனிசமான உலகம், பரிசுத்தமான நல்ல உலகம் – வாட்ஸ்வர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சமூகச் சீர்கேடும் அதன் விளைவுகளும்

சமூக சீர்கேடுகளும் அதன் விளைவுகளும் என்ற தலைப்பை ஆராய முன்னரே சமூகத்தின் வகையினையும் சமூகம் என்றால் என்ன என்பதற்கான வரைவிலக்கணங்களை யும் இணங்கண்டு அதன் தெளிவினைப் பெற்றிருப்பது நம் ஒவ்வொருவரது கடமையாகும். முதலில் சமூகத்தின் வகைகளாக நகர சமூகம், கிரம சமூகம் என இரண்டாக சமூகத்தினை வகுத்துள்ளனர். அடுத்து சமூகம் என்றால் என்ன என்பதற்கான வரைவிலக்கணத்தை பார்போமானால் சமூகம் என்பது 'வேறுபடுத்தப்பட்ட ஒரு நிலப்பரப்புக்கள் நிரந்தரமாக வாழும் மக்கள் தமது ஆசைகள், தேவைகள், விருப்புவெறுப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக உருவாக்கி கொண்டுள்ள நிறுவனங்கள், சங்கங்கள், அமைப்புகள், கட்டமைப்புகளின் ஒட்டுமொத்தமான இணைப்பு' சமூகம் எனப்படும்.

இச்சமூகமானது அன்றைய நிலையில் எவ்வாறு காணப்பட்டதென்றும் இன்றைய நிலையில் எவ்வாறு காணப்படுகின்றதென்றும் பார்த்தால் அன்றைய சமூகமானது கூட்டாகவும் ஒற்றுமையாகவும் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பர புரித்துணர்வுடனும் ஒருமித்த நோக்குடனும் செயற்படும் சமூகமாகக் காணப்பட்டதென்றால் அது மிகையாகாது. ஆனால் இன்றைய சமூகமானது தனித்தனியாகவும் வேற்றுமையாகவும் ஒருவரையொருவர் எதிர்க்கின்ற சமூகமாகக் காணப்படுகின்றது. இதனாலேயே இன்றைய சமூகத்தில் சீர்கேடுகள் அதிகரித்துக் காணப்படுகிறது எனலாம்.

இவ்வாறு அதிகரித்துச் செல்கின்ற சமூகச் சீர்கேடுகளே நாளுக்கு நாள், மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் நம் செவிகளைச் சாய்த்துச் செல்கின்றன. அவ்வாறு செவிகளைச் சாய்த்துச் செல்கின்ற சமூகச் சீர்கேடுகளாக பல காணப்படுகின்றன. அவையாவன பாலியல் துன்புறுத்தல்கள் இளவயது திருமணம், சிறுவர் துஸ்பிரயோகம், கொலை முயற்சிகள், பெற்றோர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பில் கொண்ட மோகம், மது பாவனை, புகைத்தல் எனப் பல வகையான சீர்கேடு முறைகள் காணப்படுவதனால் இன்றைய சமூகமானது பல வழிகளிலும் சீரழிந்து செல்கின்றது எனலாம்.

சமூகச் சீர்கேடுமுறைகளில் மிக முக்கியமான விடயம் என்னவென்றால் அடிக்கடி எமது செவிக்கு வந்தடையும் செய்தி பாலியல் துன்புறுத்தல்கள் எனலாம். அண்மையில் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் உள்ள மஞ்சந்தொடுவாயில் நிகழ்ந்த பருவம் அறியா பச்சிளம் பாலகியின் பாலியல் துன்புறுத்தல் மூலம் கொலை செய்த செய்தியையும் ஒருகணம் ஞாபகப்படுத்தி பார்போமானால் 'இன்றைய சமூகத்தில் என்ன வகையிலும் சீர்கேடுகள் நடைபெறலாம் அதில் ஒருமுறையே பாலியல் துன்புறுத்தல் எனலாம்.' இவைகளும் சமூகச் சீர்கேட்டு முறைகளில் முக்கிய இடம் வகிக்கின்றதெனலாம்.

அடுத்த சமூக சீர்கேட்டு முறைகளில் இளவயது திருமணத்திதைக் குறிப்பிடலாம். இளவயது திருமணம் என்பது வயது பருவமடையாமலே பெற்றொர்கள் வறுமை சூழ்நிலையால் கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைக்கும் முறையாகும். பெரும்பாலும் இவ் திருமணமானது அதிகமாகக் கிராமப்புறங்களில் நடைபெறுகின்றது. இவ் இளவயது திருமணத்ததால் வளமற்ற சமூகத்தையும். சீர்அற்ற கல்வி, வளர்ச்சியற்றதும் எதிர்கால நோக்கற்றதுமான சமூகத்தினை உருவாக்கும். எனவே பல வழிகளிலும் பார்க்கும் போது இளவயது திருமணமென்பது சமூகத்தை சீரழியவே செய்கிறது.

இவ்வாறு சமூகம் சீரழிந்து செல்லும் வழிகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி கொண்டே செல்லலாம். அந்த வரிசையில் அடுத்த முறையானது அடிக்கடி பேசப்படும் சிறுவர் துஷ்பிரயோக அடிமைதனமாகும். பதினெட்டு வயதுக்கு குறைந்தவர்கள் சிறவர்களாக கருதப்படுகின்றனர். ஆனால் இன்றைய சமூகத்தில் சிறுவர்கள் மதிக்கப்படாமல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். பெற்றோர்கள் வீட்டுவேலைக்கு அனுப்புதல், பாடசாலைக்கு அனுப்பாமல் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும், வீட்டை பராமரிப்பதற்காகவும் அவர்களை வீட்டில் இருக்கச் செய்தல், கூலிவேலைக்குஅனுப்புதல் என்பன சிறுவர் துஷ்பிரயோகம் எனலாம்.
அடுத்து சமூகச் சீர்கேட்டு வழிமுறைகளில் கொலை முயற்சி முக்கிய இடம் வகிக்கின்றது. அண்மை காலங்களில் அனைவரும் அறிந்த விடயம் செங்கலடிக் கொலைச் சம்பவம். தனது காதலுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தன்னுடைய காதலனை வைத்து பத்து மாதம் சுமந்து பெற்ற தாயையும், பாதுகாவலாகவும் உறுதுணையாக நின்ற தந்தையையும், கொலை செய்ய எப்படி மனம் வந்தது? என்று சற்று சிந்தித்து பார்ப்பது பிள்ளைகளின் கடப்பாடாகும். அதுமட்டுமல்ல இவ்வாறன சம்பவங்களுக்கு காரணம் பெற்றோரை மதிக்காத பிள்ளைகளும், கல்வி கற்ப்பிக்கும் ஆசானை மதிக்காத பிள்ளைகளும் சமூகத்தில் காணப்படும் வரை சமூகமானது சீரழியும் என்பது உறுதி.

பாலியல் துஷ்பிரயோகம் எனும் போது வேன், பஸ் நடத்துனர்கள் மாணவமாணவி மீது நடத்தும் பாலியல் சேட்டைகள், உறவினர்கள் தங்களது பிள்ளைகள் மீது செய்யும் பாலியல் துஷ்பிரயோகம், வழிப்போக்கர்கள் சிறுவர்களுக்கு பொருட்களை வாங்கிக் கொடுத்து ஏமாற்றி துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்துகின்றனர். மற்றும் சகபாடிகளின் தீய பழக்கங்கள் மதுபானம் புகைத்தல் போன்ற தீய பழக்கங்களாலும் சமூகங்கள் கட்டுண்டு காணப்படுகின்றது. இவ்வாறான சீரழிவுகளை உற்று நோக்கும்போது எவ்வாறான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதை அறியலாம்.

பாலியல் துன்புறுத்தல் மூலம் கொலை செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோருக்கு மனஉளைச்சலும், சஞ்சலமும், அமைதியின்மையும் ஏற்படும். அவர்கள் வாழ்வில் எதை ஒன்றை பறிகொடுத்தாற் போல் காணப்படுவர். அதேவேளை பாலியல் துன்புறுத்தற்கேற்பட்ட சிறுவ சிறுமிகளுக்கு மன கூச்சமும், தைரியமற்ற நிலையும், தாழ்வான மனபாங்கும், எதையும் இலகுவில் புரிந்து செயற்படாத தன்மையும், உடஉள பாதிப்பும் காணப்படும். இளவயது திருமணத்தால் ஏற்படும் பாதிப்பு பெற்றோரின் வெளிநாட்டுவேலை வாய்ப்பினால் பிள்ளைகள் எதிர்நோக்கும் சமூக சீரழிவு பெற்றோரின் குடும்ப தகராறுகளும், மதுபோதையும், துர்நடத்தையும் சமூகத்தில் பல சீர்கேட்டு விளைவுகளை ஏற்படுத்தும்.

அன்றைய சமூகத்தில் காணப்படாத சமூகச் சீரழிவுகள் இன்றைய சமூகத்தில் காணப்படுகிறது. எனவே இன்றைய சிறுவர்கள் நாளைய உலகின் தலைவர்கள் என்பதற்கமைய சமூகத்தினர் நல்ல பழக்க வழக்கங்களையும் ஒழுக்கங்களையும் தொகுத்துக் கொடுப்பது தலையான கடமையாகும். இதனைக் கருத்திற் கொண்டு சிறந்த சமூகத்தை உருவாக்குவோமாக.

ஞா. நளன்
மட்/சிவானந்தா தேசிய பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாசத்துடன் எம்மை பாதுகாருங்கள்

நாம் இந்த சமுதாயத்தில் ஓர் அங்கத்தவர். இங்கு சகல உரிமைகளும் மற்றவர்களைப் போல் எமக்கு இருக்கின்றன. நாம் சிறுவர்கள் எனும் வேலியைக் கடந்து இளைஞர்கள் என்ற மாறெும் அரங்கில் நுழையப்போவதற்கிடையில் எமக்குள்ள கடமைகளை நாம் உணர வேண்டும். அதை உணர வைப்பது பெற்றோர்களாகிய எமது அன்னை தந்தையை சேரும். அதன்பின் அறிவை உருவாக்கும் பள்ளிக்கூடம்.

இங்கு ஆசிரியர்கள் எமக்கு கல்வியறிவுடன் உலக அனுபவங்களையும், மற்றவர்களுடன் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும் அன்பு, இரக்கம், கருணை, உதவும் மனப்பான்மை, சேவைசெய்தல் போன்ற பல ஒழுக்கப் பண்புகளை கற்றுத்தருகின்றனர். பல அறிவுரைகளையும் கூறி வழிப்படுத்துகின்றனர். நாம் இங்கு கற்றுக்கொள்ளும் அறிவுதான் எமது வாழ்க்கை பெறுமானம் மிக்கதாகச் செய்வதற்கான முதற்படி. வாழ்வதற்குத் தேவையான பொருளாதாரத்தை பட்டம், பதவி மூலம் பெற்றுக் கொள்வதற்கான கல்வி அறிவு, வாழ்க்கை அனுபவமும் பெருமளவு இங்குதான் கிடைக்கின்றன.

எங்கள் பெற்றோர்கள் எமக்கு வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். நாம் அவர்களில் நன்றி செய்யவேண்டும். அவர்களது முதுமை பருவத்தில் அவர்களைப் பராமரிக்க வேண்டும். எமது அயலவர்களை, உறவுகளை சமுதாயத்தின் பல தரப்பட்டவர்களை நாம் மதித்து வாழ வேண்டும். இவை எல்லாம் எமது அனுபவ பாடங்கள். ஆன்மீக அநெறியில் இறைவனை முன்னிறுத்தி வாழும் போது சந்தோசமான எதிர்காலத்தை சந்திக்கமுடியும். ஆனால் இன்று பல சவால்கள் எமது வாழ்வை சூறையாடக் காத்திருக்கின்றன. சமூகத்தில் வாழ்கின்ற சிலர் நெறிதவறியவர்களால் தமது வாழ்க்கை சீரழிக்கப்படுகின்றது. பாலியல் துஷ்பிரயோகங்கள் எனும் கொடியமிருகம் எங்கள் உயிர்களை சிதைக்கின்றது. இன்றைய ஊடகங்கள் அடிக்கடி இதைத்தான் அறிவிக்கின்றன.

பாடசாலை சமூகத்திலும் கூட இந்த நிகழ்வுகளால் எமக்கு ஆபத்து காத்திருக்கின்றது. சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பொருள் பாவனை, ஆபாசப் படங்கள் போன்ற தீமைகள் மலிந்துவிட்டன. அறிவைப் புகட்டும் அறிவாளர்களே இதில் ஈடுபடுகின்றவர்கள் என்பது தான் கவலைக்குரிய விடயமாகும். இவைகளுக்கெல்லாம் தீர்வு யாரிடம்?

ஆகவே எங்களைப் புரிந்து கொள்ளுங்கள் எங்கள் உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுங்கள். பாசத்துடன், அன்புடன், பரிவுடன் அணுகுங்கள் நீங்கள் எங்கள் வேலிகளாக இருந்து வளரும் பயிர்களாகிய எங்களை செழிப்பாக வளர்த்து பயனுள்ள மனிதர்களாக வாழ்க்கை விழுமியத்தை உடையவர்களாக உருவாக்குங்கள்.

ர.வினோஜன்
மட்/சிவானந்தா தேசிய பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பழைய கல்லடிப் பாலத்தின் வரலாறு

எமது பிரதேசமான கல்லடி அண்மைக் காலம் வரை இலங்கையில் புகழ்பெற்ற இடமாக இருந்தது. இதற்கு காரணம் இங்கு அமையப் பெற்ற கல்லடிப் பாலமே. அந்நியர் ஆட்சிக் காலத்திலே இது அமைக்கப்பட்டது. தற்பொழுது உள்ள மட்டக்களப்பு நகர் பகுதி முன்பு புளியந்தீவு என்று அழைக்கப்பட்டது. இப் பகுதிக்கும் கல்லடிக்கும் இடையே மட்டக்களப்பு வாவி ஓடி கடலோடு கலக்கிறது. இதனால் அக் காலத்தில் தரை வழி போக்குவரத்து இடம்பெறவில்லை. இதற்காகவே கல்லடிப் பாலம் அமைக்கப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் ஆற்றங்கரைக்கு அப்பாற்பட்ட கபுதிகள் அந்நியர் ஆட்சியின் கீழ் காணப்பட்டது. அதாவது போத்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இப் பகுதிகள் காணப்பட்டது.

அந்நியர் ஆட்சி செய்த காலகட்டத்தில் கல்லடி, கல்முனை, அக்கரைப்பற்று, காரைதீவு ஆகிய பிரதேசங்கள் கண்டி மன்னன் விமலதர்மசூரியன் ஆட்சியின் கீழ் காணப்பட்டது. இதனை வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறிந்துகொள்ளலாம். உதாரணமாக மட்டக்களப்பு மான்மியம் என்ற நூலின் ஊடாக அறியலாம். இந்த வகையில் விமல தர்மசூரியனின் ஆட்சி புகழ் பெற்று விளங்கும் வேளையில் ஒல்லாந்த ஆளுநர் (ஸ்பில் பேர்ஜன்) கல்லடி எனும் ஊரில் உள்ள டச்பார் எனும் கிராமத்தில் 1602ம் ஆண்டு தனது படகுகளுடன் வந்து இறங்கினார். அந்த சமயத்தில் விமலதர்மசூரியன் ஆட்சி செய்து கொண்டிருந்ததை அறிந்த (ஸ்பில் பேர்ஜனுக்கு) அவனைக் காண வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

மன்னனைக் காண கல்லடி ஆறு ஒரு தடையாக இருந்த போதிலும் அவ் ஆற்றைக் கடந்து மன்னனை சந்தித்து அவனுடன் கலந்துரையாடி பல ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டான். (ஸ்பில் பேலர்ஜன்) மன்னனை சந்தித்து சில வருடங்களின் பின் விமலதர்மசூரியன் இறந்துவிட்டான். இவனுடைய இறப்புடன் இப் பிரதேசம் ஒரு வீழ்ச்சித் தன்மையைக் கண்டது.

இதன் பின்னர் இப் பிரதேசத்தை ஆட்சி செய்ய ஆசைப்பட்ட போத்துக்கேயர் இப் பிரதேசத்தை கைப்பற்றி ஆட்சிசெய்தனர். இவர்களுடைய ஆட்சியை நிறுவ வேண்டும் என்ற நோக்குடன் ஒரு கச்சேரியை அமைக்க திட்டமிட்டனர். திட்டத்தின் படி போத்துகேயர் ஆளுநரான (கொண் ஸ்டியி டி சூசா) என்பவரை வரவழைத்து 1627ஆம் ஆண்டு அடிக்கல் வைக்கப்பட்டு மட்டக்களப்பு கோட்டை கட்டப்பட்டது.

இவர்களுடைய ஆட்சி சில வருடங்கள் இடம்பெற்றது. இதன் பின்னர் போத்துக்கேயருடைய மட்டக்களப்பு கோட்டையை கைப்பற்ற வேண்டும் என்று ஒல்லாந்தருக்கு ஆசை ஏற்பட்டது. இதன்படி 1638.05.18இல் போத்துகேயருடைய மட்டக்களப்பு கோட்டை ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டது. மட்டக்களப்பு கோட்டையை கைப்பற்றியதற்கான காரணம் என்னவென்றால் அவர்களுடைய ஆட்சியினை அடையாளப்படுத்தவும், மறைந்திருந்து பீரங்கித் தாக்குதலை நடத்தவும் ஆகும். இவ்விடம் இவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கோட்டை என்று அழைக்கப்பட்டது. இந்த நிலையில் ஒல்லாந்தருடைய ஆட்சி பெரும் வளர்ச்சியைக் கண்டது.

இதன் பின்னர் பரித்தானியர் ஒல்லாந்தருடன் யுத்தம் செய்து மட்டக்களப்பு கச்சேரியை தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். மட்டக்களப்பு கச்சேரியை சென்று அடைவதற்கு கல்லடி ஆறு ஒரு தடையாக இருந்தபோதிலும் ஆற்றைக் கடந்து கச்சேரியை சென்றடைந்தனர். இது இவர்களுக்கு பெரும் சிரம நிலையை தோற்றுவித்தது. கல்முனை, காரைதீவு, அக்கரைப்பற்று, கல்லடி ஆகிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் கச்சேரியை பார்க்க வேண்டும் என்ற அவாக்கொண்டனர். அந்த வகையில் பார்க்க வந்த மக்கள் கல்லடி ஆற்றிற்கு வெகுதொலைவில் கச்சேரி இருப்பதால் இங்கு செல்வதற்கு சிரம்ப்பட்டனர். இதை அறிந்த பிரித்தானியர் இதற்கு ஒரு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வந்தனர். இந்த முடிவின் படி ஒரு பாலத்தை அமைக்க வேண்டும் என்று பிரித்தானிய ஆளுநர்களும் நலம் விரும்பிகளும் திட்டமிட்டனர்.

இவ்வாறு பாலத்தை அமைக்க திட்டமிட்ட பிரித்தானியர் அந்த நாட்டு ஆளுநரை வரும்படி கடிதத்தில் மழைப்பு விடுத்தனர். இதன்படி பிரித்தானிய ஆளுநரான (ஹென்ரி மனிங்) அவர்களால் 1918 ஆம் ஆண்டு பாலத்தை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பாலத்தை கட்டும் முயற்சியில் பிரித்தானியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈடுபட்டனர். 1918இல் அடிக்கல் வைத்து கட்டத் தொடங்கிய இப்பாலம் சுமார் இரண்டு வருடங்களின் பின் 1920இல் கட்டி முடிக்கப்பட்டது.

இரண்டு ஆண்டுகளின் பின் கட்டி முடிக்கப்பட்ட இப்பாலம் 1920ஆம் ஆண்டு பிரித்தானிய ஆளுநர் ஹென்ரி மனிங் அவர்களின் மனைவியாகிய லேடிங் மனிங் அவர்களால் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. கல்லடிப் பாலத்திற்கு அண்மையில் உள்ள நெடும் வீதி ஹென்ரி மனிங்கின் மனைவியாகிய லேடிங் மனிங் அவர்களின் பெயரினாலே அழைக்கப்படுகிறது. இப் பாலம் கல்லடிப் பாலம் என மக்களால் அழைக்கப்படுகிறது.

இந்த கல்லடிப் பாலம் சுமார் 96 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும். இது இன்றும் மக்களின் மனதில் இருந்து அழிக்க முடியாத ஒரு சொத்தாக காணப்படுகிறது. 'மீன்பாடும் தேன் நாடாம்' மட்டக்களப்பிற்கு ஒரு பெருமையை ஈட்டிக்கொடுத்துள்ளது. இப்பாலம் 96 வருடங்கள் பழமை வாய்ந்ததாக காணப்பட்டடையினால் இடிந்து விழும் அபாயத்தில் இருந்தது. இதனால் புதிய கல்லடிப் பாலம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டனர். இது சீனா நாட்டின் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டு 2013.03.22ஆம் ஆண்டு நம்நாட்டு ஜனாதிபதியாகிய மகிந்தராஜபக்ச அவர்களால் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

இப்பாலம் இரண்டும் ஒன்றுக்கொன்று அண்மையில் இருக்கின்றமையால் பழைய பாலம் மக்களின் பார்வையில் இருந்து விடுபடாதவகையில் உள்ளது. தற்பொழுது பாதசாரிகளும், துவிச்சக்கரவண்டியில் செல்வோரும் இப்பழைய பாலத்தை பாவித்தாலும் வரலாற்றுச் சின்னமாக இது என்றும் விளங்கும் என்பது திண்ணம்.

வி.யுவராஜ்
மட்/சிவானந்தா தேசிய பாடசாலை

## வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு ஆனால் அடிமையாகிவிடாதே !

இரக்கங்காட்டு ஆனால் ஏமாந்து போகாதே !

பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே !

கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே !

சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சனாய் இராதே !

வீரனாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே !

சுறுசுறுப்பாய் இரு ஆனால் பதட்டப்படாதே !

தர்மம்செய் ஆனால் ஆண்டியாகி விடாதே !

பொருளைத்தேடு ஆனால் பேராசைப்படாதே !

உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்து விடாதே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆசாரங்கள்

சோளகம் தன் ஆங்காரத்தின் இறுதி வரிகளை எழுதிக்கொண்டிருக்கும் ஓர் புரட்டாதி மாதம். மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கெல்லைக் கிராமமான கதிரவெளியின் ஓர் ஓலை வீட்டுக்குள், வேதக்காரவாத்தியாரென்றும் சின்னத்துரை வாத்தியாரென்றும் அழைக்கப்பட்ட, உலகத்தைச் சுருட்டித் தன் சுங்கானுக்குள் வைத்திருந்த குருசு வாத்தியார் ஆறடிப் பலகையில் தன் இறுதிப் பயணத்துக்காகப் படுத்திருந்தார்.

சராசரித் தமிழாசிரியனாய் சொற்ப சம்பளத்தில் வாழ்ந்த அவரின் பொருளாதாரம், பெரிதாய் சாதிப்பதற்கு இடந்தரவில்லையென்பதற்கு அவரது சிறிய மண்வீடே சாட்சியாயிருந்தது. சித்திரை வருடத்துக்கு வெளிச்சுவர் மீது இரண்டு பிரிவாகப் பூசப்பட்டிருந்த வெள்ளை,சிவப்புக் களியும், அதன் மிது ஆங்காங்கே வரையப்பட்டிருந்த சிறிய கோலங்களும், வாத்தியார் திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டியாரபுரத்தைச் சேர்ந்தவர் என்றாலும் கதிரவெளியில் திருமணமானதன் பின் அதன் கலாசார, பாரம்பரியங்களுக்குள் எவ்வாறு இரண்டறக் கலந்தார் என்பது இன்று வரை அவரை அறிந்த யாவருக்கும் அதிசயமாய் இருந்தது.

“கொட்டியார புரத்திலிருந்த என்ர ஆக்கள் வந்து எனக்கெல்லாம் செய்வானுகள். நீ தங்கம் ஒண்டுக்கும் கவலப்படாத” என்று சாவதற்கு முன் செடம் இழுக்கும் நேரத்திலும் மனைவியிடம் கூறியதும்,“மீன் செத்த அன்றெ சினையும் செத்துப்போச்சு”என்று அவரால் மிகவும் நேசிக்கப்பட்ட மருமகன் செல்லப்பாக்கியம் உட்பட ஓரிரு உறவுகள் வந்ததும் தெரியாது. போனதும் தெரியாத என்ற நிலையிலும் அந்த ஏழைக்கிராமமே வாத்தியாரைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

தான் இறுதியாகக் கற்பித்த கதிரவெளியில் அவரது மனைவி இறந்து அவர் தபுதாரனானதும், அதே ஊரில் விதவையான அன்னமுத்துவைக் கைப்பிடித்து தன் பிள்ளைகள் போலவே அவளது பிள்ளைகளையும் நேசித்து வளர்த்ததையும் யாரால் தான் மறக்க முடியும். அது தவிர பாடசாலைக்கு வராத பிள்ளைகளை வீடு வீடாய் தேடிச் சென்று கூட்டி வந்து எழுத வாசிக்கக’ கற்றுக் கொடுத்ததையும் ஊரால் மறக்க முடியுமா? இன்று கூட கையெழுத்துப் போடும் ஒவ்வொருவனும், இது குருசுவாத்தியார் இட்ட பிச்சை என்றுதான் சொல்வார்கள்.

வேஷ்டியும், ஆள்வாரமும் சால்வையுமாக இரண்டு கைகளையும் வீசி கம்பீரமாக நடக்கும் அவரைப் போன்ற அந்த நாள் ஆசிரியனை நினைத்துப் பார்ப்பவர்களால் இந்தநாள் ஆசிரியர்களை ஏனோ ஏற்றுக்கொள்ள இயல்வதில்லை தான். அந்தக் கம்பீரம் எல்லாம் அந்த நாட்களுக்குச் சொந்தமானவைதான்.

தலைமழைக்கு முன்னர் பழஞ்சேனை வெளியாக்குவதிலும், புதுக்காடு பற்ற வைப்பதிலும் ஈடுபட்டிருந்த குடும்பங்கள் சாவியளங்கேட்டு மாலையானதும் அதிக எண்ணிக்கையில் வரத்தொடங்கினர். வீட்டுக்குள் ஒன்றும், வெளியில் ஒன்றுமாக பெற்றோமெக்ஸ் விளக்குகள் வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருந்தன. வாத்தியாரின் குழந்தைகள் அழுத களைப்பாலும் பசிக்களையாலும் உறங்கிப்போயின. அன்னமுத்து மட்டும் தலைமாட்டில் உட்கார்ந்து ஓய்து அழுது கொண்டிருந்தாள். தனக்குக் கிடைத்த இரண்டு வாழ்க்கைகளும் தன்னைவிட்டு போனதன் ஆற்றாமை அவளத ஒவ்வொரு ஒப்பாரியிலும் பிரதிபலித்தது.

“எங்களைத் தனியா விட்டுற்றுப் போறீங்களே” என்றவள் பிலாக்கணமெடுக்க,“நாங்கெல்லம் இருக்கக்க, ஏனக்க தனியாய் போனியெண்டு கத்திறா........” என்றவள் தங்கை காளி சொல்லியும் அன்னமுத்து எதையும் ஏற்றுக்கொள்வதாய் தெரியவில்லை. அன்னமுத்து என்ன, தான் பிறந்த ஊரைப்பற்றித் தெரியாதவளா. தங்கள் குடம்பங்களையே கொண்டு நடாத்த வக்கில்லாத இனசனத்தால் தன்னை எப்படிப் பராமரிக்க இயலுமென்பதை அறியாதவளா. ஆனால் “அத்தான் செய்த புண்ணியங்களெண்டாலம் உன்ட குடும்பத்தக்கக் காப்பாத்தும் அக்க” என்று அவள் தம்பி சீனி போதையில சொன்னாலும் அதற்கு அர்த்தமிருப்பதாக உணர்ந்து கொண்டாள்.

புண்ணியங்ளென்றதும் அன்னமுத்துவுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. வீடுதேடி யார் எந்த நேரத்திலும் வந்தாலும்,“குடுறி குடுறி .................. ஏழைச்சனங்கள்” என்று எதையாவது கொடத்து விடுவாரே.

குருசுவாத்தியார் அன்னமுத்துவைக் கைப்பிடித்த புதிது. கதிரவெளியிருந்த சிறிய உபதபர் கந்தோருக்குப் பாடசாலையிலிருந்து நாள் தோறும் கடிதங்கள் பார்க்கப்போவார். அங்கு அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாட்களில் தபாற் சேவகர் என்று எவருமில்லை. முத்திரை குத்துவதிலிருந்து தபால் பஸ்சுக்கு தபால்பை கொடுப்பதுவரை சகலதும் உபதபாலதிபர் தான் செய்ய வேண்டும்.

அப்படிச் சென்று மெயில் பஸ்ஸை எதிர்பார்த்து நின்ற ஒருநாள், கதிரி கந்தோருக்கு அருகில் இருந்த பொதுக்கிணற்றடியில் வெகுநேரமாக குடமொன்றை வைத்துக் கொண்டு நின்றதைக் கண்டு அருகிற் சென்ற, விசாரித்த போதுதான், அவள் வண்ணார் அம்பட்டர் கிணற்றுத் துலாவைத்தானும் தொடக்கூடாதென்றும், தங்களைத் தவிர்ந்த ஊரார் எவராவது வந்து தண்ணீரள்ளித் தரும்வரை அவர்கள் காத்திருக்க வேண்டமெனக் கூறியது தெரிய வந்தது அவருக்கு.

இது வாத்தியாருக்கு புதுமையாகவும், வேதனையாகவுமிருந்தது. ஆகமங்கள் ஒன்று சொல்ல, அறியாத சனங்கள் வேறுவிதமாய் அவற்றுக்கு அர்த்தங்கள் கர்ப்பிக்கிறாகளென்பதால் ஒரு பக்கம் இந்தப் படிப்பறிவற்றை சனத்தின் மீது ஆத்திரமும் வந்தது.

யூதர்கள் கீழ்தரமாக மதிக்கும் அந்தச் சமாரியப் பெண்ணிடமே தண்ணீர் வாங்கி குடித்த இயேசுவை வணங்குபவரல்லவா அவர்.

> யூதனாகிய நீர் சமாரியப் பெண்ணான என்னிடம் தண்ணீர் கெட்பதெப்படி என்றவள் கேட்க, கடவுளுடைய கொடை இன்னதென்பதையும், உன்னிடம் கேட்பவர் இன்னாரென்பதையும் ......................"

மூன்று பிள்ளைகள் பெற்றதும், மசுவாது என்கிற நிலையில் வாழ்ந்தாராயினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தன் திரிகாலச் செபங்களையோ இராச்செபங்களையோ சொல்ல மறந்தவரல்லர். அதேபோன்று இந்துக்களுக்கு சமானமாக தேவார தேவார திருப்பாசுரங்களை மனனஞ் செய்து உருக்கமாகப்பாடவும் வல்லமை பெற்றிருந்தார்.

இவரா இந்தச் சலரின் வைராக்கியத்துக்குப் பலியாவார்.! கட்டாடிக் குடிக்குக் கிணறு அமைத்துக் கொடுப்பதற்கு நன்றியாகக் கதிரி, வாத்தியாருக்கு மிகவும் விருப்பமான புகையிலையை எப்போதாவது கொண்டு வந்து கொடுக்கத் தவறுவதில்லை. அந்தக் கதிரிகூட வாத்தியாரின் கால்மாட்டில் ஊனுறக்கமின்றி அழுத வண்ணமிருந்தாள்.

வடிந்ததும் சவ அடக்கத்துக்கான முஸ்த்தீப்புகளில் மைத்துனன் சீனி இறங்கினான். இந்து முறைப்படி வாழை, தென்னங்குருத்து முதலிய கொண்டு பாடையும், தயாரனது. என்ன நினைத்தாளோ அன்னமுத்து வெளியில் வந்து "சுவாமியாரும் வரமுடியாதெண்டு சொன்னாலும், அவர அவர்ர வேதமுறைப்படித்தான் தாக்க வேணும். ஆராவது வாகரைக்குப் போய் வாங்க. நம்மட முறைப்படி நான் செய்ய உடமாட்டன். எல்லாரும் என்ன மன்னிச்சுக்குங்க" என்று முடிவாய்க்கூறி வீட்டினுள் சென்று விட்டாள். அதனை எதிர்க்க யாருக்கும் திராணியில்லாததால் பாடை பிரிக்கப்பட்டது. ஒரு வேளை மூதூர் வேதக்காரர் குருத்தைக் கோவிலுக்குள்கூட அனுமதிப்பதில்லை என்கிற ஐதீகத்தை வாத்தியார் அன்னமுத்துக்கு எப்போதாகிலும் கூறியிருக்கலாம்.

எனவே, வாகரையிலிருந்து விபரங்கள் அறிந்து தட்டி தயாரிக்கப்பட்ட முதிரையாற் செய்யப்பட்ட பெட்டியில், பெயர், பிறப்பு, இறப்பு ஆகிய முகாந்திரங்கள் எழுதப்பட்ட சிலுவை முன் செல்ல, கதிரவெளிக் கிராமத்துக்கு முற்றிலும் புதிதான பிரதேச ஊர்வலம் மயானத்தை நோக்கிச் நகர்ந்தது.

இடத்து என்ன செய்வதென்பதறியாத அன்னமுத்து, தனது சமய முறைப்படி மூன்றாம் நாட்கிரியைகளைச் செய்ய திராணியற்று, ஒரிருவருடன் வாத்தியாரின் மிகவும் பிரியமான மகன் நவரத்தினராசாவை அனுப்பிக் கல்லறையை தரிசித்து விட்டாகிலும் வருமாறு அனுப்ப, கல்லறையில் நாட்டப்பட்டிருந்த சிலுவை உடைக்கப்பட்டு நிலத்தில் வீழ்த்தப்பட்டுக் கிடந்ததைக் கண்டு, தந்தை இறந்ததை விட மேலும் துக்கமடைந்து அன்று முழுவதும் அழுதான்.

அன்னமுத்துவுக்குத் தெரியும் இதை யார் செய்திருப்பார்களென்று. ஆசாரங்களுக்குப் பலியான ஒருவரின் புதிய சரிதம் அங்கு எழுதப்பட்டதை அங்கீகரிக்காத அன்னமுத்து மகனிடம்,"பென்சன் எடுத்த முதல் வேலையா அப்புவுக்கு கல்லால் கல்லற கட்டுவம்" என்று சொல்ல தனது அப்பாவுக்கு அழிக்க முடியாத கல்லறையொன்று அமையப் போகின்றதென்று அசையாத நம்பிக்கையில் நரரெத்தினராசா உறங்கிப்போனான்.

- கல்வியின் ஆரம்பம் கசப்பானாலும் அதன் முடிவோ தேனைவிட இனிமையானது.
- கல்வி என்பது விரும்பி உண்ணப்படுவது ஊட்டப்படுவதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருசேத்திரபுரம்

குருசேத்திரப் போரின் பதினாறாம் நாள் அன்றை போரில் கௌரவ வீரர்களுக்கு தளபதியாக துரியோதனின் உற்ற நண்பன் மாவீரன் கர்ணன் தனது தேரின் மீது நின்றிருந்தான். பாரதப்போர் ஆரம்பமாகியதில் இருந்து தளபதியாகப் பொறுப்பேற்ற பீஷ்மர் கர்ணனை ஒரு சாதாரண வீரனாக கருதி புறக்கணித்தமையின் காரணமாக யுத்தகளத்தில் இருந்து விலகிச் சென்றிருந்தவன் கர்ணன். பத்தாம் நாள் போரில் பீஷ்மர் வீரமரணம் எய்தியதைத் தொடர்ந்து துரோணச்சாரியார் தளபதிப் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றார். பார்த்தசாரதியின் தந்திரத்தால் துரோணரின் மகன் அசுவத்தாமன் யுத்தகளத்தில் மாண்டான்' எனத் தர்மன் வாயால் பொய் சொல்லச் சொல்லி மகனின் இழப்பின் துயரில் நின்ற துரோணரை இலகுவாக வெற்றி கொண்டதன் பின்னர் பதினைந்தாம் நாள் போர் முடிவுக்கு வந்தது.

பாரதப்போர் ஆரம்பிக்க முன்னரே அப்போரின் வெற்றி கருதி மாயக்கண்ணனின் தந்திர வேலைகள் பல வழிகளில் காண்டவர்களுக்கு துணையாகவே இருந்தது. விதுரனை வில் உடைக்கச் செய்து கௌரவர்கள் பக்கம் போரிடாமல் செய்தது தொடக்கம் கர்ணனின் மார்போடும் காதோடும் ஒட்டியிருந்த மார்புக்கவசத்தையும் குண்டலத்தையும் இந்திரனை அனுப்பியாசகம் பெற்றது. குந்தியைக் கர்ணனிடம் அனுப்பி "அர்ச்சுனனைத் தவிர வேறு பாண்டவர்களை போரில் கொல்வது இல்லை எனவும், நாகாஸ்திரத்தை அர்ச்சுனனின் மீது ஒரு தடவைக்கு மேல் பாவிப்பதில்லை" என்ற வரங்களை யாசிக்க வைத்ததும்" தனது மகன் அபிமன்யுவை கொண்ட மன்னன் சயத்திரதனை "மறுநாள் போரில் சூரியன் மறைவுக்கு முன்னர் கொல்வேன் அல்லது உயிர்துறப்பேன்" என்ற அர்ச்சனனின் சபதம் வெற்றி பெற அர்ச்சுனனை கைலாயமலைக்கு அழைத்துச் சென்று சிவனிடம் இருந்து வரம் வாங்கியதும் பொய்கையில் ஒழிந்திருந்த சயத்திரனை சூரியனை மறையச்செய்து அவனை வெளியே வரச் செய்து அர்ச்சுனன் தன் சபதம் முடிக்க உதவியது. எனப் பல அரசியல் காய்நகர்த்தல்களையும், ராஜதந்திர வேலைகளையும் செய்விக்க கண்ணன் பாண்டவர்களுக்கு அர்ச்சுனனின் தேரோட்டியாக மட்டுமல்லாமல் பாண்டவ படைகளின் தளபதி போலவே செயற்பட்டிருந்தான்.

கர்ணன் தனது கௌரவ சேனையை மகரவியூகமாக வகுத்து அதன் முன்னால் நின்றிருந்தான். அங்க தேச மன்னனின் மகுடத்தில் திகழும் மணிகள் சூரியக் கதிர்கள் போல ஒளிவீச காதுகளில் அணிந்திருந்த பொன் குண்டலங்களும் மார்பில் அணிந்திருந்த பொன் கவசமம் கால்களில் கட்டியிருக்கும் வீரத் தண்டைகளில் பொருத்தியிருக்கம் மஜொலிக்கக் கர்ணன் தன்தந்தை சூரியனைப் போலவே பிரகாசித்துக் கொண்டிருந்தான்.

16200905 எண்களில் காலம் கரைந்து கொண்டிருந்தது. புதிய புதிய போர்க்களங்கள் உலகம் எங்கும் திறக்கப்பட்டு மனித உயிர்கள் தத்தம் விருப்பங்களுக்கு ஏற்ப பலி கொல்லப்பட்டதன் தொடர்ச்சி வீதி எங்கும் இரத்தச் சிதறல்கள் பிய்த்தெறியப்பட்ட சதைத்துண்டங்களின் உஷ்ணம் இன்னும் அடங்கவில்லை. கருகிச் சாந்திருந்த மரங்களின் மீது மனிதச் சிதிலங்கள். ரத்தவீச்சையின் துர்நாற்றம் எங்கும் வியாபித்திருக்கவீதியில் சிதறிக் கிடந்த உடலங்களை இழுத்துக்கொண்டு நாய்கள் பற்றைகளை நாடிச் சென்றன. ரத்தவெறி கொண்ட மிருகங்கள் தங்கள் கரங்களில் புதிய புதிய கடைக்கலங்களைத் தாங்கிய படி அப்பாவி மான்களை வேட்டையாடிக் கொண்டிருந்தன.

நாடு சருங்கி ஊர்களாகி உர்கள் சுருங்கி கிராமங்களாகி கிராமங்கள் சுருங்கி மக்கள் ஒரு பொது வெளி நோக்கிக் குவிந்தனர். மக்களை நான்கு திசைகளிலும் சுற்றிவளைத்த ஆக்கிரமிப்புக்கரங்கள் ஒன்றாய், பத்தாய்,நூறாய் பலி கொள்ளத் தொடங்கியது.

உலக வல்லரசு முதல் தம் நலன்களை மட்டுமே முக்கியத்துவப்படுத்தும் சிறிய நாடுகள் வரை கரங்களை இணைத்து வானயெங்கும் ஏவுகணைச் சோதனை நடாத்திக் கொண்டிருந்தன. புதிய நவீன ஆயுதங்களின் விற்பனைத்தளமாக வெள்ளோட்ட பவனி முல்லை மண்ணின் மூலை முடுக்கெல்லாம் நடாத்தப்பட்டு கொண்டிருந்தது. மனிதப் பேரவலத்தின் உச்சக்கட்ட நாடகம் அரங்கேறிக் கொண்டிருந்த தருணமது. தம் வாழ்வில் இறுதிக்கணங்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும் இனிமேல் ஒன்றுமே செய்ய முடியாது என்ற நிலையில் வீரகாவியங்கள் பல எழுதி டிவெளியிட்ட எழுத்தாளன் மீண்டும் ஒரு காவியத்தினை எழுதத் தயாரானான். அந்தக் காவியத்திற்கான நடிகர்களை அழைத்து காவியத்தின் கதையையும் அதன் உயிர்ப்பு நிலையையும் எடுத்துச் சொன்னான். இந்தக் காவியத்திற்கு "காவியத்தலைவன்"ஒன்று ஒருவன் இல்லை. கதை மாந்தர்கள் அனைவருமே தலைவர்கள் தான். உங்களின் நகர்வுகள் நிங்கள் படைக்கும் வீர அத்தியாயங்களின் முழு மொத்த வடிவமே.

வி. மைக்கல்கொலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பின் பொன் மொழிகள்

- கல்வி அழகு கற்றோரை சேர்தல்.
- படிக்க நேரத்தை எடுத்துக்கொள் அதுவே அறிவின் வாயில்.
- நல்லசிந்தனைகள் அடங்கியநூல்களே.
- நம் உள்ளத்திற்கு உகந்தவையாகும்.
- புத்தகங்களை படிக்கும் பழக்கம் உள்ளவன்.
- ஒரு போதும் தனிமை உணர்வை பெறுவதில்லை.
- நூலை நீ தேடினால ˙உலகம் உன்னைத்தேடும்.
- நூலை தோழனாக்கு அது உன்னை அறிஞனாக்கும்.
- நீ நூலடியில் இருத்தால் உலகம் உன் காலடியில்.
- நூலகம் நுழைவோம் உலகை வெல்வோம்.
- மோசம் செய்யாத நண்பன் அவனுடைய நூல்களே.
- வாசிப்பு என்பது மௌனமான உரையாடல்.
- கல்விக்க உயிர் ஊட்டியவன் ஒருபொழுதும் மரணிப்பதில்லை.
- வாசிப்பதற்கு நேரம் ஒதுக்கு அது அறிவிற்கே அத்திவாரம்.
- வாசிக்கும் மனிதன் தேசத்தின் சொத்து.
- சிந்தனையின்றி வாசிப்பது ஜீரணம் இன்றி உண்ணுவதற்கு சமம்.
- கல்வியே வாழ்வின் ஒளி கற்றலே நமது பணி.
- வாசிப்பின் மூலம் அறிவான சமுகத்தை காட்டியெழுப்புவோம்.
- வாசிக்கும் இன்றைய சிறார்கள் வைத்து நாளைய சமுகத்தை கட்டியெழுப்புவோம்.
- புத்தகங்கள் எமது அரிய அருமை நண்பன்.
- அறிவு வளர்ச்சிக்கும் சிந்ததை விரிவிற்கும் அடித்தளமாக விளங்குவது வாசிப்பே.
- புத்தகம் ஒன்றே இறவாத் தன்மையுடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மற்றவரிடம் பேசுவது எப்படி?

தாயிடம் அன்பாக பேசுங்கள் !

ஆசிரியரிடம் பண்பாகப் பேசுங்கள் !

சகோதரரிடம் அடக்கத்தோடு பேசுங்கள் !

சகோதரியிடம் அளவோடு பேசுங்கள் !

துணைவியிடம் உண்மையாகப் பேசுங்கள் !

குழந்தைகளிடம் ஆர்வமாகப் பேசுங்கள் !

உறவினரிடம் பரிவோடு பேசுங்கள் !

நண்பரிடம் பணிவாகப் பேசுங்கள் !

அதிகாரிகளிடம் பணிவாகப் பேசுங்கள் !

வியாபாரிகளிடம் கறாராகப் பேசுங்கள் !

தொழிலாளரிடம் மனிதநேயத்துடன் பேசுங்கள் !

அரசியல்வாதியிடம் ஜாக்கிரதையாக பேசுங்கள் !

கடவுளிடம் மரியாதையாகப் பேசுங்கள் !

பேசுங்கள் ! பேசுங்கள் ! ஆனால் ?


புரிந்து பேசுங்கள் ! புரியும்படி பேசுங்கள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# குழந்தையின் பண்புகள்

- இழிவு படுத்தப்படும் குழந்தை முரட்டுத்தனத்தை கற்றுக் கொள்கிறது.
- உண்மையோடு வளரும் குழந்தை நீதி நியாயத்தை கற்றுக் கொள்கிறது.
- ஒற்றுமையோடு வாழும் குழந்தை சகிப்புத் தன்மையைக் கற்றுக் கொள்கிறது.
- கல்விச் சூழலில் காணப்படும் குழந்தை அறிவு ஞானத்தை கற்றுக் கொள்கிறது.
- மகிழ்ச்சியாக வாழும் குழந்தை நேர்த்தியையும் அழகையும் கற்றுக் கொள்கிறது.
- பாசத்தோடு வளரும் குழந்தை அன்பு செலுத்த கற்றுக் கொள்கிறது.
- புகழப்படும் குழந்தை மெச்சக் கற்றுக் கொள்கிறது
- நம்பிக்கை வைக்கப்படாத குழந்தை ஏமாற்றுவதற்கு கற்றுக் கொள்கிறது.
- விமர்சிக்கப்படும் குழந்தை திட்டுவதற்குக் கற்றுக் கொள்கிறது.
- தொல்லைகளை எதிர கொள்ளும் குழந்தை எதிர்ப்பதற்கு கற்றுக் கொள்கிறது.



## அமுத வாக்கு

பிரம்பும் தடியும் உபயோகிக்காமல் கோபமும் குறையும் இல்லாமல் சம்பளத்தையும் வெகுமதியையும் எதிர்பாராமல் நமக்குக் கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே. நூல்களைச் சென்றடைந்தால் உறங்காமல் சோர்வு கொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிக்கும். நீங்கள் தேடும் போது எதையும் மறைக்காமல் அளிக்கும். நீங்கள் பெரும் தீங்கு செய்தாலும் வசை மொழி கறாமல் உங்கள் அறியாமையைக் கண்டு நகைக்காமல் கற்பிப்பனவும் நூல்களே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கற்றவன் யார்?

ஒரு காலத்தில் மனிதன் உணவுக்காக மட்டும் உழைக்க வேண்டியதாக மட்டும் இருந்தது. அவனுக்கு உணவை சமைக்க பாத்திரங்கள் தேவைப்படவில்லை. அவன் அப்போது நெருப்பை கண்டு பிடிக்காத காரணத்தினால் உணவுகளை பச்சையாகவே உண்ணப் பழகிக் கொண்டான்.

பழவகைகள், தாவர கிழங்கு வகைகளை உண்டு நோய் என்றால் என்ன என்று தெரியாதவனாக வலிவும் வனப்புடன் நீண்ட நாட்கள் உலகில் வாழ்ந்தான். காடுகளிலும் மலைக் குகைகளிலும் வாழ்ந்த மனிதன் சிந்திக்கத் தொடங்கினான். அவனிடம் அப்போது தான் ஒரு மறுமலர்ச்சி உருவாகியது. தான் இருந்த இடத்தை விட்டு ஊரத் தொடங்கினான். அவைகள் ஊராகின பிறகு அவன் முன்னேறி நகர்ந்தான். அவை நகரங்களாகின ஆனால் இன்று ஆதி மனிதன் நினைத்துப் பார்க்காத அளவுக்கு இன்றைய மனித சமூகம் முன்னேறி உள்ளது. மனிதன் இந்த அளவுக்கு விஞ்ஞான வளர்ச்சி கண்டதற்கு காரணம் மனிதன் சிந்திக்க தொடங்கியதன் மூலம் அறிவியல் வளர்ச்சி கண்டுள்ளது. மனிதனின் அறிவு பெருகியதனால் மண்ணிலும் விண்ணிலும் புதைந்து கிடக்கம் புதையல்களை வெளிக்கொண்டு வரும் முயற்சியில் சளைக்காமல் மென்மேலும் முயன்று கொண்டு இருக்கின்றான் மனிதன் இன்றுவரை.

வுாழ்க்கைக்கு தேவையான உலக அறிவுகளை நூல்கள் படிப்பதின் மூலந்தான் பெற முடியும். ஒரு மனிதனிடம் உள்ள அறிவின் அளவுகோல் "நூல் அளவே யாரும் நுண்ணறிவு" என கூறப்படுகின்றது. ஒருவன் எவ்வளவு நூல்களை படித்திருக்கிறானோ அதன் அளவே அவனிடம் அறிவு காணப்படும். 'வாழ்க்கைக்கு தேவையான அறிவை சீன தேசம் சென்றாவது கற்றுக் கொள்' என நபிகள் நாயகம் கூறி உள்ளார்கள்.

ஒரு அறிவான விடயத்தைக் கண்டதும் படிக்க வேண்டம். நாளைக்கு பின்னே என பிற்போடக்கூடாது. அது சோம்பல் தன்மையாக உள்ளது. 'கண்டதும் கற்க பண்டிதன் ஆவான்." எனக் கூறப்படுகின்றது.

எந்த விடயத்தையும் கற்கும் போது தெளிவாக விளங்கும் படி படிக்க வேண்டும். **"கற்க கசடற கற்ற பின் நிற்க அதற்கு தக"** எனக் கூறப்படுகின்றது. நூல்களை படிக்கும் போது தான் ஒரு மனிதன் பூரண மனிதனாகின்றான். நாம் கற்று விட்டோம் என மமதை கொள்ளக் கூடாது. "கற்றது கை அளவு. கல்லாதது உலகளவு" என்பது சான்றோர் வாக்கு. கற்றவன் யாரென்றால் தான் கற்ற அறிவை செயலில் காட்டுபவன் தான். செயலில் காட்டாதவனின் அறிவு ஏட்டுச்சுரக்காய் போல அந்த அறிவால் எந்த பிரயோசனமும் இல்லை. நாம் கற்ற கல்வியை ஆளுகிறவர்களாக மாற வேண்டும். "கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" நாம் நூல்களை நாளாந்தம் சிறிய அளவிலாவது படிக்க முயல வேண்டும்.

ரு.லூாசனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்

**விலங்கொடு மக்க ளனையர்**
**இலகு நூல் கற்றவரோடு ஏனையவர்"** என்றார் வள்ளுவர். கல்வி அறிவுரையாரே மனிதர் என்றும் கல்வி அறிவற்ற ஏனையவர் விலங்குகள் என்றும் இக்குறள் விளம்புகின்றது. இக்குறள் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் அதன் உயர்வு பற்றியும் உணர்த்துகின்றது.

மனிதனை மனிதனாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் கல்வியறிவினை தேடிக்கொள்ளுதல் வேண்டும். கல்வி அறிவை பெற்றுக் கொள்வதற்கு பல வசதிகள் உண்டெனினும் அவற்றுள் மிகவும் சிறந்தது நல்ல நூல்கள் மூலம் பெற்றுக் கொள்வதேயாகும்.

நூல்கள் மூலம் அறிவை பெற்றுக் கொள்வதாயின் நாம் நிறைய நல்ல நூல்களை வாசிக்க வேண்டும். வாசிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்த வேண்டும். தேடல்கள் இருக்க வேண்டும். அதன் மூலம் நல்ல பழக்கங்கள், பண்புகள் எம்மோடு ஒட்டிக் கொள்ள வாய்ப்புண்டு. ஆங்கில கவிஞன் ஒருவனின் கூற்றுப்படி "என்னை எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே" என்றார். இதனாலேயே நல்ல நூல்களை நாம் எமது நண்பர்களாக நேசிக்க பழகிக் கொள்ள வேண்டும்.

இளமைப்பருவம் இனியது மேலும் இன்றியமையாததால் இப்பருவத்திலேயே நூல்கள் வாசிக்கும் நல்ல பழக்கத்தை நாம் கட்டாயப்படுத்தி கொள்ள வேண்டும்.

அவ்விதம் ஏற்படுத்திக் கொண்டால் நமது மொழியாற்றல் பெருகும். வாழ்க்கை முழுவதும் நாம் மகிழ்ச்சியாக இருக்க கூடிய வழியை கண்டு கொள்ளலாம். புத்தகங்களை வாசிக்கும் பழக்கமுடையவர்கள் தனிமை உணர்வை அடைவதில்லை. ஓய்வு கிடைக்கும் பேதெல்லாம் அவர்களுடன் நல்ல புத்தகங்கள் உறவாடும். வாழ்க்கையில் ஏற்படும் சோர்வுகள், தோல்விகளை அவர்கள் நல்ல மனதுக்கு பிடித்த நூல்களை வாசிப்பதன் மூலம் தேற்றிக் கொள்கின்றனர்.

செல்வங்களில் சிறந்த செல்வமாகிய அறிவுச் செல்வத்தை யாரும் களவாடிச் செல்வதில்லை. இதைத்தான் ஆங்கில அறிஞரன ரஸ்கின் என்பவர் 'புத்தகங்களில் ஒருவன் பெறும் அறிவை, இன்பத்தை மற்றவர்கள் தட்டிக் பறித்திட முடியாது.' வாழ்நாள் முழுவதும் அவை அவனுக்கு பயன் தரும். நூல்கள் படிக்கின்ற பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை சூன்யமாகிப் போகும்.

நல்ல சிந்தனைகள் அடங்கிய நூல்களில் தம் உளளத்திற்கு உகந்தவை. அத்தகைய நூல்களைக் கற்க நாம் முயல வேண்டும். நமது அறிவு வளர்ச்சிக்கு துணை புரியவல்ல நூல்களை தேடிக் கற்றால் அவை நமது வாழ்வுக்கு பயன் தரும்.

நூல்களை வாசிக்கும் போது வாசிப்போர் மனதில் மென்மேலும் நூல்களை வாசிக்க வேண்டும். என்ற ஆவல் பிறக்கும். அது நாளடைவில் தீராத பசியாக மாறும். அதனால் மேலும் நூல்களை தேடிக் கற்க முற்படுவதால், நல்ல நூல்களை கற்பதால் அறிவால் மட்டுமன்றி உணர்வால் உள்ளத்தால் உறவு கொள்ள முடியும். பண்டைய வாழ்க்கை வரலாறுகளை அறிய முடியும். "வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்குகின்றது" என்பர் அறிஞர்கள்.

எமது வாழ்வில் நல்ல நண்பர்கள் கிடைப்பது அரிது. நமது நண்பர்கள் மனமாற்றமடைந்து எம்மைப் பிரிவுத் துயரில் ஆழ்த்த முடியும். ஆனால் நாம் நல்ல நூல்களை நண்பர்களாக கொண்டால் என்றுமே எம்மோடு ஒன்று சேர்ந்து உறவாடும்.

**"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"** என்பது முன்னோர் அறிவுரை. நல்ல நூல்கள் எமக்கு துணை வர வேணடும். இவ்வுலகில் நாம் வாழும் காலம் அற்பம். கல்வி கரையற்றது. **"கல்விக் கரையில கற்றவர் நாள் சிலமெல்ல நினைகின்ற பிணிபல"**– என்று இடிந்துரைத்தார் நாடிலயார்.

எனவே, வாழும் நாளில் கரையற்ற கல்வியின் சிறிய அளவையேனும் கற்றிட நாம் முயல வேண்டும். அதற்கு நல்ல நூல்களை எமது நண்பர்களாக்கி முயன்று வெற்றி பெறுவோமாக.

**ரு.பிரியவதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு மாவட்டம் எதிர்நோக்கும் சூழற்பிரச்சனைகள்

நிலவளம், நீர்வளம், வனவளம் சார்ந்த சிறப்புடையது மட்டக்களப்பு மாவட்டம். வாவி அதன் சிறப்புமிக்க அணிகலன். பசும்பால் வலிந்தோடும் மீன்பாடும் தேன் நாடென இலங்கியும் புகழ் பெற்ற பிரதேசம். கமுகும் தெங்கும் பனையும் மரமுந்திரியும் சூழ பாலையும் தேக்கும் மதுரையும் முதிரையும் நிறைந்த வனவளம். இராலும் மீனும் நண்டும் மலிந்த வாவிவளம். கண்ணாவும் தில்லையும் கண்டலும் நிறைந்த சதுப்புநிலம். குயிலும் கிளியும் காகமும் நாரையும் எருமையும் மானும் வாழும் வயல்வளம். கொக்கட்டி தேற்றாவும் மண்டும் பனிச்சையும் ஆரையும் மகிழையம் தாழையும் நாவலும் இலுப்பையும் கிண்ணையும் என மரத்தாலும் செடியாலும் பெயர் கொண்ட கிராமங்கள் கல்லாறு காங்கேயனோடை பாலடை முகத்துவாரம் அமிர்தகழி என நீர் வளத்தால் சிறப்புற்ற பிரதேசங்கள் என்று இயற்கைச் சூழலால் பெயர் கொண்ட தனித்துவமிக்க மாவட்டம்.

இம்மாவட்டமானது இலங்கையின் கிழக்குப் பகுதியில் அமைத்துள்ளதோடு மொத்த நிலப்பரப்பில் 3.8 வீதத்தை உள்ளடக்குவதுடன. அதன் மொத்த சனத்தோகை 2.2 வீதத்தையும் கொண்டிருக்கின்றது இதன் மொத்த நிலப்பரப்பு 24645 சது.கீ.மி ஆகவும் உள்ளதோடு 168.3 சது.கீமி பரப்பளவுடைய உள்ளூர் நீர்ப்பரப்பையும் அடக்கியுள்ளது மேற்கிழ் மாவட்டத்தின் எல்லையாக லொன்னறுவையும் திருகோணமலை மாவட்டமும் வெருகல் ஆறும் வடக்கு எல்லையகாவும் அம்பாறை மாவட்டம் தெற்கு எல்லையாகவும் வங்கள விரிகுடா கிழக்.கு. எல்லையாகவும் அமைத்துள்ளது இங்கு காணப்படும் வாவிகளின் நிலப்பரப்பானது மட்டகளப்பு நகரிலிருந்து வடக்கு நோக்கி வெருகல் வரை 73.5கி.மீ வரையிலும் தெற்கு நோக்கி துறைநீலாவணை வரை 35.2 கி.மீ வரையிலும் நீண்டு காணப்படுகிறது மாவட்ட நிலப்பரப்பில் புவியியல் ரீதியா கிழக்கு பகுதியில் அதிக சனத்தொகை குடியோற்றங்களை கொண்ட எழுவான் கரை எனவும் மேற்கு பகுதியில் அதிக வயல்வெளிகள் கொண்ட படுவான் கரை எனவும் அழைக்கப்புடுகின்றது

வெருகல் முதல் துரைநீலாவணை வரை 12 பிரதேசசெயலார் பிரிவகளை உள்ளடக்கிய இம் மாவட்டமானது வன்ப்புமிக்க கடற்கரையும் முன்று முக்கிய வாவிகளையும் குளங்களையும் மற்றும் வயல் நிலய்களையும் கொண்டு எழுவான்கரை பாடுவான்கரை எனப் பிரிவு படும் இருபாரிய நிலப்பரப்புகளுக்குள் வருதால் இங்குகாணப்படும் சூழல் பிரச்சினைகள் முற்று முழுதாக விவாசயம் மற்றும் மீன்பிடித்தொழில் சார்ந்ததாகவோ காணப்படுகிறது இம் மாவட்டத்தில் இம் மாவட்ட சூழல் மாசடைதலை பின்வருமாறு பாகுபாடுத்தலாம்

- கடற்கரை சார்ந்த சுற்றாடலின் மாசடைதல்
- வாவிகள் மற்றும் வயல் பிரதேசங்களின் மாசடைதல்
- குளங்கள் கிணறுகள் மாசடைதல்
- காடழித்தல் மற்றும் மனித நடவடிக்கை

## கடற்கரை சார்ந்த சுற்றாடல் மாசடைதல்

இம்மாவட்டத்தில் கதிரவெளி, வாகரை, காயான்கேணி, மாங்கேணி, பாசிகுடா, கல்குடா, களுவன்கேணி, புன்னக்குடா, நாவலடி, கல்லடி, கிரான்குளம், புதுக்குடியிருப்பு, களுவாஞ்சிகுடா, கல்லாறு போன்ற இடங்களில் காணப்படும் கடற்கரை பிரதேசம் உல்லாசப் பயணங்களுக்கு உகந்த இடமாகக் காணப்படுவதால் இக் கடற்கரை பிரதேசங்கள் பாரிய அபிவிருத்திகள் நடைபெறுவது தடுக்கப்படல் வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்கரையோரம் நெடுக்கிலும் பாரியளவில் மண் அகழந்தெடுத்தால் நடைபெறுகிறது. மண் அகழ்ந்தெடுத்தலை ஊக்குவித்தல் சாலச்சிறத்தது. மேலும் கல்குடா பிரசேத்தில் பாசிக்குடா பகுதிகளிலும் சவுக்கு மரக்காடுகளில் வளர்பவை. ஊக்குவித்தல் எதிர்காலத்தில் இப்பகுதிகளில் கடற்கரையோரங்களை மண்ணரிப்பிலிருந்து பாதுகாப்பாகவும் பொது மக்களின் பொழுதுபோக்கிற்கு உகந்த இடமாக இங்கு மட்டக்களப்பு வாவி வாழைச்சேனை வாவி பனிச்சங்கேனி வாவி என என்று முக்கிய வாவிகள் காணப்படுகின்றது. இவற்றின் மட்டக்களப்பு வாவியே பெரியது. வாழைச்சேனை வாவியில் வாழைச்சேனை கடதாசி ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் கலப்பதால் அவ் வாவியானது ஏனைய வாவிகளுடன் ஒப்பிடும் போது அதிகளவில் மாசடைந்து உள்ளது. தற்போது வாழைச்சேனை கடதாசி ஆலையில் கடதாசி மூலம் பொருளான வைகோலுக்குப் பதில் கழிவுக் கடதாசிகளை பயன்படுத்துவதால் தொழிற்சாலை கழிவின் தாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குறைந்து போதிலும் முற்று முழுதாக நிறுத்தப்படவில்லை. இக்கடதாசி ஆலையில் கழிவுநீரை சுத்திகரிக்கும் நிலையம் அவசியம். இதன் மூலம் வாழைச்சேனை வாவி மாசடைதலை பாரிய அளவில் தடுத்து நிறுத்த முடியும். இம்மூன்று வாவிகளைச் சூழவுள்ள கண்ணாக்காடுகளும் அழிக்கப்படுகின்றன. அல்லாவிட்டால் இவ்வாவியின் மீன்னினம் அருகும். அதனை அண்டிய வயல் நிலங்களும் பாதிப்படையும். குறிப்பாக மட்டக்களப்பு வாவியை சூழவுள்ள கண்ணாக்காடுகள் பாரியளவில் அழிக்கப்பட்டள்ளன. கண்ணாக்காடுகளுக்கு பின்வரும் காரணங்கள் முக்கியத்துவம் வாய்ந்தது.

1. வாவிகளின் மீனினங்கள் இறால் நண்டுகள் போன்றவற்றின் பிறப்பிடமாக
2. வாவிகளின் ஏற்படும் வெள்ளப் பெருக்குகளை கட்டுபடுத்தும் நிலங்களாக்
3. வாவிகளின் நைதரசனின் அளவைக் கட்டுப்படுத்தும் முதல்களாக
4. .பறவைகளின் சரணாலயமாக

வாவிகளை அண்டியுள்ள கண்ணாக்காடுகள் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டதது. வாவியின் மீனினங்களின் உயிரினப் பரம்பல் பல்கிப் பெருகி பாதுகாக்கப்படும் கண்ணாக்காடுகளின் மீளநடுகை ஊக்குவிக்குப்படல் வேண்டும். வாவியின் நிலப்பரப்பு மாறாமலிருந்தால் வாவியின் மீனினங்கள் அழியாது. இந்த வகையில் மட்டுநகர் வாவியில் காணப்பட்ட தனித்துவமான பாடும் மீன் என்று மீனினம் அருகிவருவது குறிப்பிடத்தக்கது. மேலும் வாவிகளைச்சுற்றி தற்போதும் இறால்பண்ணைகள் அமைக்கப்படுதல் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது. இருந்தபோதும் இறால்பண்ணைகள் அதிகளவில் அமைக்கப்படுதல் பின்வரும் காரணமாக தீமையானது.

- கண்ணாக்காடுகள் அழிக்கப்படுதல்.
- தென்னை மரங்கள் அழிக்கப்படுதல்.
- கிணற்றினோடு உப்புநீர் ஊடறுத்தல்.
- இறால்பண்ணை கழிவுகளை எதுவித சுத்திகரிப்பும் இன்றி நேரடியாக வாவியினுள் செலுத்தல்.
- வெள்ள அபாயத்தின் அதிகரிப்பு.
- புற்றரைகள் அழிக்கப்படல்.
- வாவியில் காணப்படும் மீனினங்கள் அழிவு.
- சதுப்பு நிலங்கள் அழிக்கப்படுவதால் புலம் பெயரும் பறவைகளின் நிலையில் பாதிப்பு.
- புதிய கால்வாய்கள் காரணமாக வாவியில் உப்பினளவு கூடல்.
- புதிய அணைகள் கட்டப்படுவதால் மண்ணரிப்பு உருவாகும்.
- மீன்பிடிப்பாளருக்குரிய மீன்பிடிக்கும் பகுதியினளவு குறைக்கப்படல்.
- நில நீர் அளவு மட்டம் குறைதல்.

ஆகவே தற்போதைய நிலையில் சகல இறால் பண்ணைகளும் சூழல் பாதுகாப்பு லைசென்ஸ்நிலங்கள் உப்புநீர் அதிகளவில் தேங்குவதால் வயல் நிலங்கள் உப்பாகின்றன. வயல்களில் அதிகளவில் பாவிக்கப்படும் உரப்பாவனை குறிப்பாக அதிகளவு நைதரசன், பொசுபரசு பசளைப் பிரயோகங்களினால் வாவியின் சில இடங்களில் அல்கா வளர்ச்சி கூடிக் காணப்படுவதால் மீனினங்கள் அழியலாம்.

## குளங்கள் மற்றும் கிணறுகள் மாசடைதல்

இம் மாவட்டத்தில் 14 பாரிய நீர்ப்பாசனக் குளங்களும் 193 சிறிய நீர்ப்பாச க் குளங்களும் இருந்தன. தற்போது இவற்றில் அநேகமானவை இருந்த இடம் தெரியாமல் தூர்ந்து போயுள்ளன. இதனால் இப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டதோடு சுற்றாடலும் பாதிக்கப்பட்டள்ளது.

மழை காலங்களில் அநேகமாக குளங்களில் நீரேந்து பகுதிகளில் பெய்யும் மழை நீரெல்லாம் தேங்கி நிற்பதற்கு இடமில்லாததால் நேரடியாக வழிந்தோடி வாவிகளை அடைவதன் மூலம் கடலையடைவதால் வீணாகின்றது. இதானல் வெள்ள பெருக்கு கூட ஏற்படும். இக் குளங்களில் நீர்தோங்கி நிற்காமையினால் இப்பிரதேச நிலத்தின் நீர்த்தாங்கு தன்மை குறைந்து நில நீர் மட்டமும் குறைவடைவதால் கிணறுகளின் நீர்மட்டமும் குறைந்து எதிர்காலத்தில் கிணறுகள் வற்றக் கூடிய நிலை உருவாகியுள்ளதோடு கிணறுகளினூடு வாவிநீர் ஊடறுப்புச் செய்வதால் உப்படைதலுக்கான சாத்தியகூறும் உண்டு. எனவே உடனடியக இக்குளங்கள் யாவும் இருந்த இடங்கள் மீளக் கண்டுபிடிக்கப்பட்டு அவை புனர்நிர்மானம் செய்யப்படுதல் அவசியம். இதன் மூலம் இருபோக விவசாயம் மேம்படுவதோடு சில பகுதிகளில் இக் குளங்களிருந்து பாரிய குடிநீர் விநியோகத் திட்டங்களை ஆரம்பித்தன் மூலம் படுவான்கரை பிரதேசத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## காடழித்தல் மற்றும் மனித நடவடிக்கைகளினால் மாசடைதல்

கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மரங்களின் பெயரினால் உருவாக்கப்பட்ட இடங்களில் அந்தந்தபெயருக்குரிய மரங்கள் பரவலாகக் காணப்பட்டன. அந்த வகையில் கொக்கட்டி சோலை, தோற்றத்தீவு, மாங்கேனி, பனிச்சங்கேனி, தாழங்குடா, மாங்காடு, மதுரங்கேனி, புன்னச் சோலை, பாலையடி, வெட்டை போன்ற இடங்களில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கே உரித்தான சில மரங்கள் அதிகளவில் இருந்தன. வேம்புமரம் நமது மண்ணின் சிறப்புமிக்க மரங்களில் ஒன்று. இம்மரத்தின் இலை முதல் எல்லா பாகங்களும் மருந்துக்கு மரத்தேவைகளுக்கும் உதவுவன. முதிரை, பாலை போன்ற மரங்கள் இரும்புக்கு சமமான உபயோகத்துக்குரியன. பாலை மரங்கள் பழந்தந்தன. மருதம், மகிழமரம், வேல்மரம், நாகை, இலப்பை, மானா மக்குள், புன்னை, பூவரசு, தும்பாலை, ஆலம், சமண்டலை போன்ற எத்தனையோ மரங்கள் அருகி வருகின்றன. ஆற்றோரங்களில் அரிய பல கடைடல், கிண்னை மரங்களும் அழகாக காட்சி தந்தன. தற்போது அவை அருகிவிட்டதால் அவற்றை மீள் நடுகை செய்வதற்கு வனபரிபாலன இலாகா அந்த இடங்களில் அவ்வகையான காடுகளை வளர்க்கும் திட்டத்தை அரம்பிக்க வேண்டும். மனித நடவடிக்கைகளினால் இங்கு ஏற்படும் மாசடைதல் பிரச்சினையில் வீதிகளிலும் சாக்கடைகளிலும் உருவாக்கியுள்ளன. குப்பை மற்றும் கால்நடை கழிவுகள் பெருக்கமும் மண் மற்றும் கிறவல் எடுத்ததினால் உருவாக்கியுள்ள பாரிய குழிகளில் தேங்கி நிற்கும் நீர் முக்கியமானது. இவைதான் இம்மாவட்டத்தின் பல்கிப் பெருகி வரும் நுளம்புதொல்லைக்கு காரணங்கள். மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பட்டணத்தின் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத் தொகுதிகள் மற்றும் சில அரிசி ஆலைகள், ஆடு மாட்டுத் தொழுவங்கள், மாடறு மடுவம் போன்றவற்றினால் எதிர்காலத்தில் இம்மாவட்டத்தின் சூழலுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படலாம். குறிப்பாக மாவட்ட அபிவிருத்தியை ஒட்டி எடுக்கப்படும் நடவடிக்கைகள் மாவட்ட சூழலை பாதிக்காத வகையில் நடைமுறைபடுத்துவது மிக முக்கியம். இவ்வகையில் சத்துருக் கொண்டான் பகுதியில் பிள்ளையாடி தொடக்கம் தன்னாமுனை வரையுள்ள பிரதேசத்தை சூழவுள்ள கண்ணாக்காடு சதுப்பு நிலங்கள் மற்றும் சிறுகுளத்தை அண்டியுள்ள பிரதேசம் ஒரு பறவைகளின் சரணாலயம். மாற்றப்பட வேண்டியது சூழல் மாசடைதலைத் தடுக்க விரும்பும் யாரினதும் பாரிய கடமையாகும்.

கலாநிதி.க.பிரேம்குமார்
பணிப்பாளர் இசை நடனக்கல்லூரி
மட்டகளப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொது நூலகத்தின் சேவைகள்

# PUBLIC LIBRARY SERVICE

- இரவல் வழங்கும் சேவை
- உசாத்துணை சேவை
- பத்திரிகைகள் சஞ்சிகைகள் பகுதி
- சிறுவர் நூலக உசாத்துணை சேவை
- சிறுவர் இரவல் வழங்கும் சேவை
- சிறுவர்படக்காட்சி
- கேட்போர் கூடம்
- புகைப்படப் பிரதி
- புத்தகம் கட்டும் பகுதி
- கணனி பாவிப்பதற்கு
- கிளை வாசிப்பு பகுதிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2018 வாசிப்பு மாத நிகழ்வுகள்

## சிரமதானம்





## சிறுவர்களுக்கான படக்காட்சி









Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 2018 வாசிப்பு மாத நிகழ்வுகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நடமாடும் சேவையும் புத்தக கண்காட்சியும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்தியாவிலிருந்து வருகைதந்த நூலகர்களால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கருத்தரங்கு










Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media







**No: 22, Bar Road, Batticaloa - 065-2224242**
**Tourism Information Centre Batticaloa - 065-2225343**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media